# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2014

## ANNUAL PERFORMANCE REPORT




**කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍යාංශය**

**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு**

**Ministry of Industry and Commerce**

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2014

## கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

*இந்த அறிக்கை சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.*

# முகவுரை

இந்த கைததொழில் மற்றும் வணிக அமைச்சின் 2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை திறைசேரியின் 2002 செப்டெம்பர் 12 ஆம் திகதி மற்றும் 402 ஆம் இலக்க சுற்றுநிறுபத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் முதல் பகுதி, அமைச்சின் கைத்தொழில் துறையின் கீழ் உள்ள பிரிவுகள் மற்றும் நிறுவனங்களினால் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றத்தினை வெளிப்படுத்துகின்றது. இந்த அறிக்கையின் இரண்டாம் பகுதி வணிகத் துறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றத்தினை வெளிப்படுத்துகின்றது.

இந்த அறிக்கையின் மூன்றாம் பகுதியில் அமைச்சின் பொதுத் தகவல்கள் மற்றும் முழுமையான நிதி முன்னேற்றம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது.

# தொலை நோக்கு

“சக்தி மிக்க வணிகச் சூழலின் மூலம் சர்வதேச போட்டியையேற்படுத்தும் வல்லமையுள்ள கைத்தொழில்துறையினை இலங்கையினுள் உருவாக்கல்.”

# செயற்பணி

“ மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தக் கூடியதும், உயர் பெறுமதி சேர்த்த உற்பத்திகளை மேற்கொள்ளுகின்றதும், தொடர்ந்து மாறுகின்ற வர்த்தகப் பரிபாலனத்தையுடையதும், நிலைத்திருக்கக் கூடியதும் மற்றும் போட்டியையேற்படுத்தும் வல்லமையுள்ளதுமான நிறுவனத்தின் அபிவிருத்திக்கு உகந்த சூழலை உருவாக்குதல் ”

# அமைச்சின் பிரதான நோக்கங்கள்

சர்வதேச போட்டித்தனம்மயுள்ள மற்றும் அறிவுசார் தயாரிப்புக் கைத்தொழிற்துறையை உருவாக்கல்.

பெறுமதி சேர் ஏற்றுமதியை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஊக்குவித்தல் என்பவற்றின் மூலம் ஏற்றுமதி வருமானத்தை உச்சப்படுத்தல்.

ஆரோக்கியமான வணிகச் சூழலை உருவாக்கல்.

# அமைச்சின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள்

22.11.2010ம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சுக்குச் சாட்டப்பட்டுள்ள பணிகள் பின்வருமாறு அமையும்

1. மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு மற்றும் அரசினால் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் ஏனைய தேசிய கொள்கைகளின் அடிப்படையில் கைத்தொழில் மற்றும் வணிக விடயத்திற்கு மற்றும் அதற்கு சமாந்தரமான திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவன விடயங்களுக்கு உரிய கொள்கை, நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கருத்திட்டம் என்பவற்றை ஒருங்கிணைத்தல்.

2. உரிய நோக்கத்தினை பூர்த்தி செய்வதற்காக தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வந்து கால எல்லை மற்றும் வரவுசெலவுத்திட்ட வள எல்லைக்குள் மேற்குறித்த கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.

3. அமைச்சின் விடயப்பரப்புக்குள் உள்ளடங்கும் பொது மக்கள் சேவையினை வினைத்திறன் மற்றும் மக்கள் விரும்பும் வகையில் வழங்குதல்.

4. வீணாக்குதல் மற்றும் துஂபிரயோகம் என்பவற்றை ஒழித்து, அமைச்சின் பணிகளைப் பூர்த்திசெய்வதை உறுதிப்படுத்தவதற்கு ஏற்றவகையில் புதிய முகாமைத்துவ தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அனைத்து முறைகளையும் மீள்நிர்மாணம் செய்தல்.

5. புலமைச் சொத்துக்கள் பற்றிய சர்வதேச உடனபடிக்கையை நிர்வகிப்பதற்கு உரிய பணிகளின் வெளியிடல் உரிமை மற்றும் உலக புலமைச் சொத்துக் காரியாலயத்தின் வெளியிடல் உரிமை

6. ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் ஆலோசனைச் சேவை

7. சர்வதேச வியாபாரத் தொடர்புகள்

8. வெளிநாடுகளில் இலங்கை வியாபார நடவடிக்கைகளின் பிரதிநிதித்துவம்

9. போட்டித்தன்மையை உருவாக்கல்

10. கைத்தொழில் மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி

## கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படும் பிரிவுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்

**கைத்தொழில் துறை**

பேரினக் கொள்கைப் பிரிவு

கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

அபிவிருத்திப் பிரிவு 1

அபிவிருத்திப் பிரிவு 2

அபிவிருத்திப் பிரிவு 3

கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவு

இராசயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை (NACWC)

கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் பிரிவு

வரையறுக்கப்பட்ட இலங்கை கஹட்டகஹ காரியக் கம்பனி (KGLL)

வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி (MSL)

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை (NEDA)

புடைவைக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

புடைவைக் கைத்தொழில் திணைக்களம்

இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவனம் (SLITA)

**வணிகப் பிரிவு**

வணிகத் திணைக்களம் (DOC)

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் (ROC)

இலங்கைத் தேசிய புலமைச் சொத்துக்கள் காரியாலயம் (NIPO)

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (SLEDB)

# உள்ளடக்கம்


| | பக்க்க இலக்கம் |
|---|---|
| **கைத்தொழில் துறை** | |
| கைத்தொழில் கொள்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவு | 01 |
| கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு | 03 |
| அபிவிருத்திப் பிரிவு 1 | 06 |
| அபிவிருத்திப் பிரிவு 2 | 09 |
| அபிவிருத்திப் பிரிவு 3 | 11 |
| கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவு | 16 |
| இராசயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை | 20 |
| கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் பிரிவு | 23 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கஹட்டகஹ காரியக் கம்பனி | 27 |
| வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி | 30 |
| தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை | 32 |
| புடைவைக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு | 37 |
| புடைவைக் கைத்தொழில் திணைக்களம் | 42 |
| இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவனம் | 44 |
| **வணிகப் பிரிவு** | |
| வணிகத் திணைக்களம் | 50 |
| கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | 56 |
| இலங்கைத் தேசிய புலமைச் சொத்துக்கள் காரியாலயம் | 58 |
| இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை | 65 |
| அமைச்சின் பொதுத் தகவல்கள் | 74 |
| நிதி முன்னேற்றம் | 77 |

# கைத்தொழில் துறை

# கைத்தொழில் கொள்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவு

**அறிமுகம்**

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் பேரினக் கொள்கைப் பிரிவானது கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கொள்கைச் சட்டகத்திற்கு இசைவாக வர்த்தக மற்றும் தீர்வைக் கொள்கைகளை உருவாக்குவதற்கு பங்களிப்பினை வழங்குகின்றது.

**சர்வதேச வர்த்தகம் தொடர்பான பணிகள்**

சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழிற்துறைக்கான ஏற்றுமதி வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கு உதவுவதுடன், தேசிய கைத்தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதற்காக வணிகத் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

**தீர்வைகள் தொடர்பான பணிகள்**

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, வணிகத் திணைக்களம், தீர்வைகள் மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம், பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபை என்பவற்றுடன் இணைந்து பேரினக் கொள்கைப் பிரிவு தேசிய கைத்தொழிற்துறை எதிர்கொள்ளும் தீர்வைகள் தொடர்பான பிரச்சனைகளை தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

**2014 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான முன்னேற்றங்கள்**

**தீர்வைக்கான பிரகடனங்கள் - தொடர்பான பிரச்சனைகள்**

கடந்த வருடம், கைத்தொழில் கொள்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவானது கைத்தொழில்துறையில் காணப்படும் பல்வேறுபட்ட தீர்வை தொடர்பான பிரச்சனைகளை நிதி அமைச்சின் ஊடாகத் தீர்ப்பதற்கு தனது பங்களிப்பினை வழங்கியது.

உள்நாட்டு கைத்தொழிற்துறையை பாதுகாக்கும் நோக்கத்துடன், சில குடிபானங்கள், ஸ்பிரிட்கள் மற்றும் வினாகிரி போன்றவற்றிற்கான சுங்கத் தீர்வை அதிகரிக்கப்பட்டதுடன், மாஜரீன், இயற்கை இறப்பர், போல்ட் பொயின்ட் பேனை, நிறுத்துனர் தொப்பி மற்றும் சுகாதாரத் துவாய்கள் ஆகியவற்றுக்கான செஸ் வரி அதிகரிக்கப்பட்டது. மேடால் பொலிமர், பிலட் றோல், டெப்கள், வால்புகள் மற்றும் ஏனைய பிரயோகப் பொருட்களுக்காக புதிய சுங்கத் தீர்வை விதிக்கப்பட்டது.

அதையொத்ததாக, கைத்தொழிற்துறையின் உள்ளீட்டு ஆகுசெலவைக் குறைப்பதற்காக சென்ரிபுகல் பம்பிகளுக்கான சுங்கத் தீர்வைகள் குறைக்கப்பட்டதுடன், ஏனைய சீனிகள், சொக்லேட் மற்றும் கொக்கோ உள்ளடங்கிய ஏனைய உணவுகளுக்கான செஸ் வரி விதிக்கப்பட்டது.

**கைத்தொழில் கொள்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் தேசிய கைத்தொழிற்துறையின் உப துறைகளுக்க வசதிகளை வழங்குவதற்காக எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள்**

கைத்தொழிற்துறைக்கு பொறுப்பாக உள்ள அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைக்கு அமைய, 30மூ வீதத்திற்கு மேற்பட்ட உள்ளூர் பெறுமதி சேர்த்தல்களை மேற்கொள்ளுகின்ற உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் எச்எச் தலைப்பு 84 மற்றும் 85 இன் கீழ்வரும் மின்சார உபகரணங்கள் கலால் வரியில் இருந்து விலக்குப் பெறும்.
ஏழு கம்பனிகள் வாகனங்களை ஒன்றிணைக்கும் வியபாரத்தில் ஈடுபட்டுள்ளதுடன், முதன்முதலில் 2008ஆம் ஆண்டு முதல்தொகுதி வாகனங்கள் வரியில் இருந்து விலக்குப் பெற்றன. 2008ஆம் ஆண்டில் இருந்து இதுவரை ஏழு கம்பனிகளும் 30மூ மேற்பட்ட பெறுமதி சேர்த்தலுடன் 18 வகையான சுமார் 7500 வாகனங்களை ஒன்றிணைத்துள்ளன.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு மின்சாரப் பொருட்களை உற்பத்தி செய்யும் இரு உள்நாட்டு கம்பனிகள், 30மூ வீதத்திற்கு மேற்பட்ட உள்ளூர் பெறுமதி சேர்த்தல்களை மேற்கொண்டு இரு வகையான சலவை இயந்திரங்களையும் மற்றும் இரு வகையான

குளிர்சாதனப் பெட்டிகளையும் உற்பத்தி செய்து கலால் வரியில் இருந்து விலக்குப் பெற்றது. சலவை இயந்திரம் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகளுடன், 30மூ வீதத்திற்கு மேற்பட்ட உள்ளூர் பெறுமதி சேர்த்தல்களை மேற்கொண்டு தயாரிக்கப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கையினுள் உற்பத்தித் தொழில்நுட்பத்தினை முன்னேற்றுவதுடன், பின்னோக்கிய மற்றும் முன்னோக்கிய ஒன்றிணைத்தலினை நிறுவுதல் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் மட்டுமல்லாது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உதிரிப் பாகங்கள், பாகங்கள் என்பனவற்றின் தரத்தினை உயர்த்துவதுடன் உற்பத்தியாளர்களின் உற்பத்தித்திறனை அபிவிருத்தி செய்தலாகும். இதன் மூலம் அந்நியச் செலவாணி வெளியேறுவதைத் தடுப்பதுடன் உள்நாட்டு பாவனையாளர்களுக்கு அவர்களின் கொள்வனவுத் திறனுக்கேற்ப மோட்டார் வாகனங்களையும் மின்சார உபகரணங்களையும் வழங்க முடியும்.

இந்நிகழச்சசித்திட்டத்தின் மறைமுக நன்மையாக அமைவது, சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் (இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்) கீழ் ஏற்றுமதி வாய்ப்புகள் திறக்கப்படும். அதாவது இவ்வொப்பந்தத்தின் கீழ் 35மூ வீதத்திற்கு மேற்பட்ட உள்ளூர் பெறுமதி சேர்த்தல்களை மேற்கொண்டு தயாரிக்கப்படுகின்ற உள்ளீட்டு வெளியீட்டு உற்பத்திக்கிடையில் உறுதியான மாற்றம் பெறும் பொருட்கள் மற்றும் உற்பத்தி செயன்முறையானது இலகு செயன்முறை என வரைவிலக்கணப்படுத்தப்படாத பொருட்கள் இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் போது கலால் வரிச் சலுகையினைப் பெறமுடியும்.

# கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

**அறிமுகம்**

தேசிய வருமானத்திற்கு பங்களிப்பினை நல்கும், அபிவிருத்தி அடைந்த பகுதிகளில் அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளை நகரங்களில் இருந்து விலகி வியாபிப்பதற்கு கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் அமைந்துள்ள கைத்தொழில் அபிவிருத்தி அலகு பாரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றது. இந்தப் பிரிவின் பிரதான குறிக்கோளாக அமைவது, பிரதேச ரீதியில் கைத்தொழிற்துறைக்கான முதலீடுகளை ஊக்குவித்தல், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல் மற்றும் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை உதவிகளை வழங்குதல் ஆகும்.

**பிரதேசக் கைத்தொழில் சேவைக் குழுக்கள்**

மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்காக, 1990ஆம் ஆண்டு 46ஆம் இலக்க கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின் கீழ் பிரதேச கைத்தொழில் சேவைக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளது. இக்குழுக்களின் பணிகளாக அமைவது, மாகாணங்களில் உள்ள கைத்தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு செயற்பாட்டுத் திட்டம் உட்படத் திட்டங்களைத் தயாரித்தல், கைத்தொழிற்சாலைகளுக்கு அவசியமான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் மூதலீட்டுத் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு கைத்தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு உதவுதல் என்பனவாகும்

இக்குழுக்களின் தலைவராக தனியார்துறையைச் சேர்ந்த வியாபாரியொருவர் கௌரவ கைத்தொழில் அமைச்சரினால், அந்த மாகாணத்திற்குரிய மாகாண சபையின் முதலமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர் நியமிக்கப்படுவார். ஏனைய 15 அங்கத்தவர்களும் அந்த மாகாணத்தில் அமைந்துள்ள கைத்தொழிலாளர்கள் மற்றும் சிரேஸ்ட அரச அலுவலர்களில் இருந்து நியமிக்கப்படுவர்.

**பிரதேசக் கைத்தொழில் சேவை நிலையங்கள்**

இந்தக் குழுக்களின் பணிகளை மேற்கொள்வதற்காக, இக்குழுவின் செயலாளராக பிராந்தியப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டு, உதவிக்கு ஒரு ஊழியருடன் ஒவ்வொரு மாகணத்திற்கும் ஒரு சேவை நிலையத்தின் அடிப்படையில் 09 பிரதேச கைத்தொழில் சேவை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளது.
பிரதேச கைத்தொழில் சேவை நிலையத்திற்கு கிடைக்கும், கைத்தொழில் பேட்டையில் கைத்தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான அவசியமான காணிகளை வேண்டி வழங்கப்படும் புதிய கருத்திட்ட முன்மொழிவுகள் பிரதேச கைத்தொழில் சேவைக் குழுக்களினால் மதிப்பிடப்படும். இக்குழு, பிரதேச மட்டத்தில் புதிய கைத்தொழிற்சாலையாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். பிரதேச கைத்தொழில் சேவைக் குழுக்களினால் சிபாரிசு செய்யப்பட்ட கருத்திட்டங்கள், அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவினால் நோக்கப்படும். கருத்திட்டங்கள் உற்பத்திப் படிமுறை, பெறுமதி சேர்க்கையின் வீதம், உருவாக்கப்படும் தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை, சூழல் தாக்கம் மற்றும் நிதி நிலமை என்பவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.
இதற்கு மேலதிகமாக, புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதினால் சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதற்காக, சூழல் சார்ந்த கருத்திட்டங்களுக்கான விதப்புரையை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. குழுவினால் விதப்புரை செய்யப்பட்ட கருத்திட்டங்கள் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்படும். ஒப்புதல் வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு 35 வருடகால குத்தகை அடிப்படையில் அமைச்சினால் காணிகள் ஒதுக்கப்படும்.

**2014 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான முன்னேற்றம்.**

**பிரதேச கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

இதுவரை அமைச்சானது 29 கைத்தொழில் பேட்டைகளை 19 மாவட்டங்களில் ஸ்தாபித்துள்ளது. அத்தோடு 897 ஏக்கர் நிலம் மின்சாரம், தண்ணீர் மற்றும் பாதை வலையமைப்பு போன்ற அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் பிரதேச மட்டத்தில் தொழில்வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. இந்த 29 கைத்தொழில் பேட்டைகளில், இதில் 304 கைத்தொழிற்சாலைகள் தங்கள் வணிக உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதுடன், 38 கைத்தொழில்சாலைகளின் கட்டுமானப்பணிகளைத் தொடர்கின்றன. இந்த கைத்தொழிற்சாலைகள் மூலம் 2014 ஆம் ஆண்டு நிறைவடையும் வரை சுமார் 17,669 தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
2014 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை, பிரதேச கைத்தொழில் சேவை நிலையத்திற்கு, புதிய கருத்திட்ட யோசனைகளுடன் 70 விண்ணப்பப்படிவங்கள் கிடைத்ததுடன், இதில் 46 கருத்திட்ட யோசனைகள் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டு அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அத்தோடு காணிகளை ஒதுக்குவதற்காக 20 முன்மொழிவுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**மன்னார் கைத்தொழில் பேட்டை**

மன்னார் கைத்தொழில் பேட்டையானது, 2010ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட “வடக்கின் வசந்தம்” நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக அமைக்கப்பட்ட முதலாவது கைத்தொழில் பேட்டையாகும். இக்கைத்தொழில் பேட்டை மன்னார் நகருக்கு அண்மையில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவுப்பட்டுள்ளது.

தற்போது முதலீட்டு சபையின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட இரு ஆடைக் கைத்தொழிற்சாலைகளின் கட்டங்களின் நவீன வசதிகளுடனான நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ளன. தற்போது இந்த இரு கைத்தொழிற்சாலைகளும் தங்கள் வணிக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. இக்கருத்திட்டதின் கீழ் வேலையற்றோர் பிரச்சனையைத் தீர்க்குமுகமாக 850 தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு கைத்தொழிற்சாலையாளர் கைத்தொழிற்சாலை நிர்மாணிப்பு பணிகளை மேற்கொண்டுள்ளதுடன், மிக விரைவில் வர்த்தகப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளார்.

**திருகோணமலை கைத்தொழில் பேட்டை**

”கிழக்கின் உதயம்” நிகழ்ச்சித்திட்டத்துடன் திருகோணமலை கைத்தொழில் பேட்டையின் முதலாம் கட்டம் 25 ஏக்கரில் அபிவிருத்தி செய்யப்பட்டது. இங்கு 09 கைத்தொழிற்சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், இதில் தற்போது 05 கைத்தொழிற்சாலைகள் 875 தொழிலாளர்களுடன் தங்கள் வணிகப் பணிகளை ஆரம்பித்துள்ளது.
இரண்டாம் கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்வதுடன், காணி அபிவிருத்தியில் 85மூ வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**மத்துகம கைத்தொழில் பேட்டை (கட்டம் - 1,11)**

மத்துகம கைத்தொழில் பேட்டையின் முதலாம் கட்டம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், நடுத்தர மற்றும் பாரியளவு கைத்தொழிற்சாலைகளுக்கு காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. உருக்கு தயாரிப்புப் பொறித் தொகுதியொன்றும், பிளைவுட் தயாரிப்பு பொறித் தொகுதியொன்றும் மற்றும் அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடுகள் பொறித் தொகுதியொன்றும் தங்கள் பணிகளை ஆரம்பித்தள்ளன.

**தங்கொட்டுவை கைத்தொழில் பேட்டை**

கரனவன்வத்தையில் அமைந்துள்ள 53 ஏக்கர் பரப்பில் நிர்மாணிக்கப்படும் தங்கொட்டுவைக் கைத்தொழில் பேட்டையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் மேம்படுத்தல்கள் பூர்த்தியடையும் கட்டத்தை அடைந்துள்ளது. இங்கு 42 கைத்தொழிற்சாலைகள் 2205 தொழில்வாய்ப்புகளை உருவாக்கி தங்கள் வர்த்தகப் பணிகளை ஆரம்பித்துள்ளன.

உள்ளகப் பாதைகளை அமைப்பதற்கான மேம்படுத்தல் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

**மினுவாங்கொடை கைத்தொழில் பேட்டை**

இங்கு 14 கம்பனிகள் தங்கள் வர்த்தக தயாரிப்பு பணிகளை மேற்கொள்வதுடன், இங்கு கடதாசி மற்றும் டியூப்கள் உற்பத்தி செய்யப்படுவதுடன், டயர்கள் சீர்செய்யப்படுதல், மற்றும் தேயிலைப் பைகளுக்கான நூல் தயாரிப்பு என்பன மேற்கொள்ளப்படுவதுடன், இதன் மூலம் 332 தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கைத்தொழில் பேட்டைக்கு ரூபா 603 மில்லியன் முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இங்கு வருடாந்தப் புரள்வு ரூபா 637.1 மில்லியனாகக் காட்டப்படுகின்றது. சுற்றுமதில் மீள்கட்டமைப்புப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

**நாலந்தை கைத்தொழில் பேட்டை**

நாலந்தைக் கைத்தொழல் பேட்டையில் 13 கைத்தொழிற்சாலைகள் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன், 01 கைத்தொழிற்சாலையின் நிர்மாணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கு 955 தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்து. இக்கைத்தொழில் பேட்டைக்கான அபிவிருத்தப் பணிகள் அண்மையில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், இப்போது தண்ணீர் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தண்ணீர் மாதிரி ஆய்வுப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபையிடம் நீரைச் சுத்திகரிப்பதற்கான மதிப்பீட்டு விபரங்கள் கோரப்பட்டுள்ளது.

**பட்ட - அத்த கைத்தொழில் பேட்டை**

ஐந்து கைத்தொழிற்சாலைகள் தங்கள் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன், இதன் மூலம் 548 தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. கைத்தொழில் பேட்டையின் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இதற்கு நுழைவதற்கான பாதை வசதிகளைப் புதுப்பிப்பதற்கான பணிகள் பாதை அபிவிருத்தி அதிகார சபையிடம் (தென் மாகாணம்) கையளிக்கப்பட்டுள்ளது.

**வெலியோயா கைத்தொழில் பேட்டை**

வெலியோய பிரதேசச் செயலகப் பிரிவில் அமைந்துள்ள, மகாவெலி அதிகார சபைக்கு சொந்தமான 50 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி பொருத்தமானதாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இதனை ஆடை கைத்தொழிற்சாலைகளுக்கான கைத்தொழில் பேட்டையாக நிர்மாணிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இங்கு 05 நவீன வசதிகளுடனான ஆடைக் கைத்தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**வில்கமுவ கைத்தொழில் பேட்டை**

வில்கமுவ கைத்தொழில் பேட்டையை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன், இங்கு போட்டித் தன்மை சிறப்புத்தனமை கருவியினூடாக முதலீட்டாளர்களைக் கவர்வதற்கு தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது. இந்த கைத்தொழில் பேட்டையை 18.6 ஏக்கர் பரப்பில் நிர்மாணிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**முசலி கைத்தொழில் பேட்டை**

முசலி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கொண்டச்சி கிராம சேவகர் பிரிவில் உள்ள கல்லாறுக் கிராமத்தில் 25 ஏக்கர் விஸ்தீரணத்தில் 05 ஆடைக் கைத்தொழிற்சாலைகளை அமைப்பதற்கான காணி அடையாளம் காணப்பட்டுள்ளது. அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# அபிவிருத்திப் பிரிவு - 1

## அறிமுகம்

வேறுபட்ட கைத்தொழில்களுக்கான குறித்துரைக்கப்பட்ட பிரச்சனைகளை தனியாக அடையாளம் காண்பதற்கும் மற்றும் அவற்றின் பிரச்சனைகளை தனியாக தீர்ப்பதற்கும் துறை ரீதியான அபிவிருத்தி அணுகுமுறை அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்றது. இந்த உபாயமார்க்கத்தை அமுல்படுத்துவதற்காக அமைச்சில் 03 அபிவிருத்திப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளது.
இவற்றினுள் அபிவிருத்திப் பிரிவு - 1, தேயிலை, வாசனைத் திரவியங்கள், தும்பு, பதனிடப்பட்ட உணவு மற்றும் பொதியிடல் எனும் விவசாயம் சார்ந்த ஐந்து துறைகளைக் கையாளுகின்றது

## பிரதான குறிக்கோள்

- சர்வதேசச் சந்தையில் போட்டியை எதிர்நோக்கக் கூடியவாறு உயர்தரமுடைய பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் தேசிய கைத்துறையினை ஊக்குவித்தல்,
- உள்நாட்டு சந்தைத் தேவைகளைக் கண்டிறிந்து அவற்றினைப் பூர்த்தி செய்த்தக்க வகையில் அவசியமான கைத்துறையினை அபிவிருத்தி செய்தல்.

## இப்பிரிவின் கீழ் உள்ள கைத்தொழில்துறைகள்

- பதனிட்ட உணவுக் கைத்தொழில்
- பொதியிடல் கைத்தொழிற்துறை
- கூட்டுப் பெறுமதி சேர்க்கப்பட்ட வாசனைத் திரவியக் கைத்தொழில்
- கூட்டுப் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக் கைத்தொழில்
- கூட்டுப் பெறுமதி சேர்க்கப்பட்ட தும்புக் கைத்தொழில்

## பிரதான செயற்பாடுகள்

- மகிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் அமைந்துள்ள துறைகளுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.
- தனியார்க் கைத்தொழில் துறையைச்சார்ந்தவர்கள், ஏற்றுமதியாளர்கள், கல்வியியலாளர்கள் என்பவற்களை உள்ளடக்கி அமைக்கப்பட்ட ஆலோசனைக்குழுவின் மூலம் அபிவிருத்தித் திட்டங்கள், உபாயமார்க்கத்திட்டங்கள் போன்றவற்றைத் தயாரித்தல்
- மேற்குறித்த துறைகளுக்கான சர்வதேசச் சந்தை நிலமைகளை அவதானித்து, அபிவிருத்தி குறிக்கோள்களை எட்டக்கூடிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.
- இத்துறையில் காணப்படும் பிரச்சனைகளை கலந்துரையாடி அப்பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஆலோசனைக் குழுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- இத்துறையுடன் தொடர்புடைய அமைச்சுகள், பொதுத் திறைசேரி, வர்த்தக சபைகள், தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் ஏனைய நலன்விரும்பிகளுடன் ஒருங்கிணைத்தல்.
- தொழில்நுட்ப நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்தன் மூலம், பொதியிடல் கைத்தொழிற்சாலைகளினை ஆராய்ச்சி மற்றும் அபிவிருந்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்கு ஊக்குவித்தல்.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றல் நிகழ்சிகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம், கைத்தொழிற்துறையினரின் திறனை இற்றைப்படுத்தல்.

- கைத்தொழிற்துறையாளர்களை பல்கலைக்கழகம், ஆராய்ச்சி நிறுவனம் என்பனவற்றோடு தொடர்புபடுத்துவதன் மூலம் பொருள் உற்பத்தியை பன்முகப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல்.

- தேசிய மற்றும் சர்வதேச கண்காட்சிகளை நடாத்துவதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கான சந்தைவாய்ப்புகளை அபிவிருத்திசெய்தல் மற்றும் ஊக்குவித்தல்.

- ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்காக இறக்குமதி செய்ப்படும் உள்ளீடுகளுக்கான தீர்வை நன்மைகளை கைத்தொழிற்சாலைகளுக்குப் பெற்றுக் கொடுத்தல்

- சர்வதேச தரத்திற்கு ஏற்றவகையில் இறுதிப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்வும், பொருட் சான்றிதழினை பெற்றுக்கொடுக்கவும் கைத்தொழிற்துறைக்கு உறுதுணையாக இருத்தல்.

**(2014 செப்டெம்பர் 15ம் திகதி வரையிலான முன்னேற்றம்)**

**உணவுப் பதனிடல் கைத்தொழிற்துறை**

தேசிய தரச்சான்றிதழ் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உணவினைப் பாதுகாப்பாக பேணுவது தொடர்பான சர்வதேசச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்காக 27 கைத்தொழிற்சாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.
இந்நதிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் உணவுக் கைத்தொழிலில் ஈடுபடும் நிறுவனங்கள், தேசிய மற்றும் சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ISO 22000, HACCP, SLS மற்றும் GMP போன்ற உணவுப் பாதுகாப்பு, சுகாதாரத் தரம் தொடர்பான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதும், இதன் மூலம் அவர்கள் தரமானதும் பாதுகாப்பானதும் உணவினைத் தயாரிப்பதற்கு அவர்களை ஊக்குவிப்பதுமாகும். இலங்கையில் ஹொட்டல் துறையானது வியாபித்து வரும் துறையாகக் காணப்படுவதினால், உணவுக்கு காணப்படும் கேள்வியை வழங்குவதற்கு உள்நாட்டு உணவுக் கைத்தொழிற்துறையினைப் பலப்படுத்துவதற்கு உணவின் தரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான காரணிகளில் கவனம் செலுத்துதல் வேண்டும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சான்றிதழைப் பெற்றுக்கொண்டு அதனை அமைச்சுக்கு சமர்ப்பிப்பதன் மூலம் முதல் வருடத்திற்கான சான்றிதழ் தொகையினை அமைச்சிடமிருந்து மீளப்பெற்றுக்கொள்ள முடியும்.

**பதனிட்ட உணவு / பதனிட்ட பொதி கண்காட்சி**

ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படும் பதனிட்ட உணவு மற்றும் பதனிட்ட பொதி (Pro food / Pro Pack) சர்வதேசக் கண்காட்சி 13வது வருடமாக 2014 ஒகஸ்ட் மாதம் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இதில் இந்தியா, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா, டுபாய், தாய்லாந்து, மலேசியா, கொரியா மற்றும் ஜேர்மனி போன்ற வெளிநாடுகளில் இருந்து பிரதான உணவு மற்றும் பொதியிடல் துறைகளைச் சேர்ந்த கைத்தொழிற்சாலையாளர்கள் பங்குபற்றினர். சிறிய மற்றும் மத்திய தர உற்பத்தியாளர்களுக்கான விசேட கூடமொன்று ஒழுங்குபடுத்தப்பட்டது. இதில் உள்ள அறைகள் சலுகை விலையில் சிறிய மற்றும் மத்திய தர உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டது. பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆராய்ச்சிப் பொருட்களை கண்காட்சிக்கு வைப்பதன் மூலமும், கைத்தொழிற்சாலையாளர்களுடன் தொடர்புகளை பேணுவதன் மூலமும் புதிய சந்தர்ப்பங்களை உருவாக்க முடியுமென்பதால், இந்நிறுவனங்களின் பங்களிப்பை அமைச்சு பெரிதும் வரவேற்றது.

உணவுப் பாதுகாப்பு, உணவு சட்ட விதிமுறைகள், உணவு பன்முகப்படுத்தல்கள், புதிய தலைமுறையினருக்கான உணவு, போசணை மற்றும் உணவுப் பழக்கவழக்கங்கள் எனும் தலைப்புகளில் கைத்தொழிற்சாலைகளுக்கு விழிப்பூட்டும் நிகழ்சித்திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம், உள்நாட்டு

மற்றும் வெளிநாட்டு நடைமுறைகள் தொடர்பாக கைத்தொழிற்சாலையாளர்களை அறிவூட்டுவதாகும். இந்நிகழ்ச்சிக்கு நூற்றுக்கு மேற்பட்ட கைத்தொழிற்சாலையாளர்கள் பங்குபற்றினர்

2014 ஆம் ஆண்டு, ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்காக, ஏற்றுமதி செயன்முறைக்காக தற்காலிக இறக்குமதி தீர்வை சலுகைத்திட்டத்தின் கீழ் 11 பெறுமதி சேர் உற்பத்தியாளர்களுக்கு வசதியளிக்கப்பட்டது.

இந்த அமைச்சின் ஒத்துழைப்போடு "ஆயுர்வேத எக்ஸ்போ 2014" கண்காட்சி நடாத்தப்பட்டதுடன், அவர்களின் சந்தை வாய்ப்பை அதிகரித்துக்கொள்வதற்காக இதில் பங்குபற்றுவதற்கு உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

**பொதியிடல் கைத்தொழிற்துறை**

லங்கா பெக் கண்காட்சி (Lanka Pack Exhibition) அமைச்சின் ஒத்துழைப்புடன் ஸ்ரீலங்கா பொதியிடல் நிறுவனத்தில் (SLIP) 2014 ஜூலை மாதம் நடாத்தப்பட்டது.

அமைச்சினால், திறன் மட்டத்தினை அதிகரித்தல் மற்றும் புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தல் என்பவற்றிற்காக பிராந்திய கைத்தொழில் சம்மேளனங்களின் உதவியுடன், பொதியிடல் தொழில்நுட்பவியலாளர்களுக்கான சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்குசெய்யப்பட்டது.

**கூட்டுப் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக் கைத்தொழில்துறை**

தேயிலைக்கான கூட்டுப் பெறுமதிச் சேர்ப்பு பிரதானமாக பொதியிடல் செயன்முறையினூடாகவும் மற்றும் நறுமணங்கள், மூலிகைகைகள் மற்றும் பழத்துண்டுகளைச் சேர்ப்பதன் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தச் செயன்முறையை ஊக்குவிப்பதற்காக கைத்தொழிற்துறையினருக்கு இறக்குமதிப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்பத்திற்கு தீர்வைகள் விலக்களிக்கப்படுகின்றது. இதுவரை 189 தேயிலைக் கைத்தொழிற்சாலைகள் ஏற்றுமதிச் செயன்முறைக்கான தற்காலிக இறக்குமதி வசதிகளைப் பெற்றுள்ளன. இதனால் 2010 ஆண்டிலிருந்து ஏற்றுமதிப் பெறுமானம் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ளது.

**கூட்டுப் பெறுமதி சேர்க்கப்பட்ட தும்புக் கைத்தொழில்துறை**

ஏற்றுமதிச் சந்தைக்கு தும்பு சார்ந்த கூட்டுப் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களை தயாரிப்பதற்காக மேலதிக மூலப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டது. இந்நடவடிக்கையை ஊக்குவிப்பதற்காக இறக்குமதிக்கான தீர்வை மற்றும் வரி விலக்குகள் வழங்கப்படும். இந்நிலமையை ஊக்குவிப்பதற்காக உற்பத்தியை அதிகரிப்பதற்கு 44 தும்பு சார்ந்த பொருட்களுக்கு வசதிகளை வழங்கியுள்ளது.

- அமைச்சு, இந்நடவடிக்கைகள் தேசிய அபிவிருத்திக்கு நன்மையளிக்கும் என எதிர்பார்க்கின்றது.
- ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல்
- உற்பத்திச் செலவினைக் குறைத்தல்
- செயற்திறனையும், தரத்தினையும் மேம்படுத்தல்

# அபிவிருத்திப் பிரிவு – II

**பிரதானகுறிக்கோள்**

போட்டித் தன்மையுள்ள சந்தைச் சூழலுக்கு அமைவாக, உயர்தரமுடைய பொருள்களை உற்பத்தி செய்தவதற்கு தற்போதுள்ள கைத்தொழில்களின் அபிவிருத்தி மற்றும் புதிய முதலீட்டு ஊக்குவிப்பு என்பவற்றிற்கு வசதிகளை வழங்குதல்.

**இப்பிரிவின் அதிகாரத்திற்கு உட்பட்ட கைத்தொழில் பிரிவுகள்**

- அச்சு மற்றும் வார்ப்புக் கைத்தொழில்
- இறப்பர் சம்பந்தமான கைத்தொழில்
- உலோக அடிப்படைப் பொருட்கள் மற்றும் பொறிகள் கைத்தொழில்
- படகு கட்டுமானக் கைத்தொழில்
- மோட்டார் வாகனத் தயாரிப்பு மற்றும் போக்குவரத்து உபகரணங்கள் தயாரிப்புக் கைத்தொழில்
- மரமும் மரம் சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்
- பிளாஸ்டிக் சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்
- ஒளியியல் மற்றும் புகைப்பட உபகரணக் கைத்தொழில்

**பிரதான செயற்பாடுகள்**

- கைத்தொழிற்துறை அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்தல்
- தொழில்நுட்ப, உற்பத்தி முகாமைத்துவ மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சனைகளை விளங்கிக்கொண்டு தீர்வுகாண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- உற்பத்தி திறனை மேம்படுத்தவதற்கும் மற்றும் பெறுமதி சேர்த்தலை அதிகரிப்பதற்கும் உயர் தொழில்நுட்ப உபாயமார்க்கங்களை அறிமுகப்படுத்துவதற்கு அவசியமான நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தல்.
- ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு அவசியமான வசதிகளை வழங்குவதற்கான ஏற்பாடு.
- உரிய அமைச்சுகள், பொது திறைசேரி, தனியார் துறை, கைத்தொழிற்துறை சம்மேளனங்கள் மற்றும் ஏனைய நலன்விரும்பிகளை ஒருங்கிணைத்தல்.
- தீர்வை நன்மைகளை கைத்தொழிற்துறைகள் பெற்றுக்கொள்வதற்கு வசதியளிப்பதற்காக தேசிய மற்றும் வெளிநாட்டு கண்காட்சிகளை ஒழுங்குசெய்தல்.
- கைத்தொழிற்துறையினரின் திறனை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.

**31 டிசம்பர் 2014 வரையான முன்னேற்றம்**

**அச்சுமற்றும் வார்ப்பு அச்சுக்கைத்தொழில்**

அச்சு மற்றும் வார்ப்பு வசதியளிப்பு மத்தியநிலையயத்திற்கு இயந்திரங்களையும் மற்றும் மென்பொருளையும் வாங்குவதற்கு அமைச்சு ரூபா 85 மில்லியனை வழங்கியது. தற்போது இந்நிலையம் வெற்றகரமாக இயங்குவதுடன் தனியார் துறையினருக்கு வசதிகளை வழங்குவதன் மூலம் ரூபா 3.978 மில்லியனை உழைத்துக்கொண்டது.

**இறப்பர் சார்ந்த கைத்தொழில்கள்**

இலங்கை இறப்பர் கைத்தொழிற்துறை மூன்று பிரதான துறைகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

1. பெருந்தோட்ட கைத்தொழிற்துறை
2. இறப்பர் பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழிற்துறை

3. இறப்பர் மரம் சார்ந்த கைத்தொழிற்துறை

பெறுமதி சேர்க்கப்பட்ட இறப்பர் பொருட்களை உற்பத்தி செய்யும் துறை அண்மைக் காலமாக கைத்தொழில் சார்ந்த பொருளாதார துறையில் முக்கிய துறையாக விரிவடைந்துள்ளது. இறப்பர் கைத்தொழிற்துறை தேறிய பொருளாதார உற்பத்தியின் 1.5 வீதத்தை தனதாக்கியுள்ளது. மொத்த தேசிய ஏற்றுமதி வருமானத்தில் 10 வீதத்தை பங்களிப்பு செய்கின்றது.

திண்ம டயர்கள், கார் மற்றும் சைக்கில் டயர்கள், லட்டெக்ஸ் கையுறைகள் மற்றும் தன்னியக்க வாகன உதிரிப்பாகங்களை பிரதானமாக உற்பத்தி செய்கின்றது. இருந்தபோதிலும் திறன்மிக்க ஊழியர்களின் பற்றக்குறை தொழில்நுட்ப பரிமாற்றமின்னை என்பன இத்துறை எதிர்கொள்ளும் பாரிய சவாலாகும்.

- மேற்குறிப்பிட்ட தடைகளைக் குறைப்பதற்க்காக, அமைச்சு இறப்பர் பொருட்கள் உற்பத்தித் துறையைச் சேர்ந்த 15 உள்நாட்டு திறன் பெற்ற நபர்களுக்கு பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவனத்தில் பயிற்சிகளை வழங்குவதற்கான வசதிகளை வழங்கியது.
- சப்பிரகமுவ மற்றும் மேல் மாகணங்களில் அபிவிருத்தி அலுவலர்களின் ஊடாக இறப்பர் துறை தொடர்பான ஆய்வினை அமைச்சு மேற்கொண்டது.

**படகு கட்டுமானக் கைத்தொழிற்துறை**

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு படகு கட்டுமான சங்கத்துடன் இணைந்து திக்கோவிட்ட மீன்பிடித்துறைமுகத்தில் டீழயவ ளூழற ளுசை டுயமெய - 2014 கண்காட்சியை 2014 ஒக்டோபர் 10 - 12ம் திகதி வரை நடத்துவதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தது. இத்துறையின் அபிவிருத்திக்காக அமைச்சு ரூபா 3.5 மில்லியனை வழங்கியுள்ளது.

இந்த படகுக் கண்காட்சி – 2014 ற்கு சமாந்தரமாக கடற்துறை சங்கத்தின் சர்வதேச கவுன்சிலின் (ஐஊஆஐயு) பிராந்தியக் குழு சந்திப்புகள் மற்றும் கைத்தொழிற்துறை மாநாடுகள் நடைபெற்றது. இந்த நிகழ்வு சிறிய மற்றும் நடுத்தர படகு கட்டுமான கைத்தொழிற்துறையாளர்களை ஊக்குவிப்பதற்கும் மற்றும் நாட்டில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காகவும் மேற்கொள்ளப்பட்டது.

# அபிவிருத்திப் பிரிவு – III

**பிரதான குறிக்கோள்**

சர்வதேச சந்தையில் போட்டியிடுவதற்கு வல்லமையுள்ள தரத்தில் உயர்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதற்கு கைத்தொழிற்துறைகளுக்கு ஊக்குவிப்புகளையும், வசதிகளையும் வழங்குதல்.

இப்பிரிவின் கீழ் அமைந்துள்ள கைத்தொழில் துறைகள்

- பாதணிக் கைத்தொழிற்துறை
- தோல் பொருட்கள் கைத்தொழிற்துறை
- மட்பாண்டப் பொருட்கள் கைத்தொழிற்துறை
- மின் மற்றும் மின்னிலத்திரனியல் கைத்தொழிற்துறை
- ஔதடம் மற்றும் அழகுசாதன பொருட்கள் கைத்தொழிற்துறை
- வர்ணப்பூச்சு மற்றும் அச்சுக் கைத்தொழிற்துறை

**பிரதான செயற்பாடுகள்**

- பாதணி, தோல் பொருட்கள், மட்பாண்டப் பொருட்கள், மின் மற்றும் மின்னிலத்திரனியல் உபகரணங்கள், ஔதடம் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் போன்ற கைத்தொழிற்துறைகளுக்கு உரிய அபிவிருத்தி திட்டங்களையும் கருத்திட்டங்களையும் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல்.

- மேற்குறிப்பிட்ட துறைகளுக்கான ஆலோசனைக் குழுக்களினால் வழங்கப்படும் விதப்புரைகளையும் யோசனைகளையும் அமுல்படுத்தல்.

- இத்துறையோடு தொடர்புடைய அமைச்சுகள், வர்த்தக சங்கங்கள், சம்மேளனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பணிபுரிதல்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்துறைக்கான திறமையினை விருததிசெய்வதற்கு உதவிகளை வழங்கல்.

- சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் சந்தை பங்கினை அதிகரித்துக்கொள்ளுதல் தொடர்பாக கைத்தொழிற்துறைகளுக்கு உதவுதல்.

- முதலீட்டு மற்றும் வர்த்தக ஊக்குவிப்புகள் தொடர்பாக ஆலோசனைச் சேவைகளை வழங்கல்.

- வுஜஙீ முறைமையின் கீழ் உள்ள ஏற்றுமதிக் கைத்தொழிற்துறையினருக்கு, வெளிநாட்டு வல்லுனர்களுக்கான விசாவைப்பெற்றுக்கொள்வதற்கான விதப்புரை வழங்கும் வசதிகளைச் செய்தல்.

**முக்கிய நிகழ்வுகள்**

- கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு (MIC) மற்றும் இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம் (SLITA) இரண்டும் இணைந்து உள்நாட்டு பாதணி மற்றும் தோல் பொருள் கைத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்காக பாதணி மற்றும் தோல் பொருட்கள் பயிற்சி நிறுவனத்தை ளுடுஜஷயு வில் நிறுவியுள்ளது.

- கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு (MIC) மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (ளுடுநுனுடீ) இணைந்து, பாதணி மற்றும் தோல் பொருட்கள் துறையைச் சேர்ந்தவர்களுக்கு வெளிநாட்டு சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுத்தல், புதிய தொழில் நுட்பத்தை இணைத்துக் கொள்ளல் மற்றும் பெறுமதிச் சங்கிலியை அபிவிருத்தி செய்வதற்காக சர்வதேச மட்டத்தில் பாதணி மற்றும் தோல் பொருட்கள் கண்காட்சியினை ஒழுங்கு செய்தது.

- மட்பாண்ட கைத்தொழிற்துறையில் காணப்படும் மூலப்பொருள் பற்றாக்குறை நீக்குவதற்கு மூலப்பொருட்களை கண்டறிவதற்கான சுரங்க ஆய்வுகள் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் ஏற்கனவே நடாத்தப்பட்டது. அத்துடன் உள்நாட்டு செங்களிமண் கூரை ஓடுகள் தயாரிப்பு கைத்தொழிற்துறைக்கு உதவிகளை வழங்குகின்றது.

- கொழும்பு பல்கலைகழகத்தில் அமைந்துள்ள இலங்கை ஔதட ஆய்வுகூட மேலதிக அபிவிருத்திக்காக, கட்டட நிலப்பரப்பை விரிவுபடுத்தவதற்காகவும் மற்றும் உயர் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவும் அமைச்சு உதவிகளை வழங்கியது.

- உள்நாட்டு மின்சார மற்றும் மின்னிலத்திரனியல் துறைகளுக்கு புதிய மற்றும் உயர் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தவதற்காக ஐஹேழு கண்காட்சியை ஒழுங்குசெய்வதற்கு அமைச்சு நிதி உதவியை வழங்கியது.

- மட்பாண்ட கைத்தொழிற்துறையில் காணப்படும் மூலப்பொருள் பற்றாக்குறை நீக்குவதற்கு பந்துக்களிமண் மற்றும் கனிய படிவுகளைக் கண்டறிவதற்கான சுரங்க ஆய்வுகள் முடிவடைந்துள்ளதுடன், இந்த விடயம் தொடர்பாக உரிய கைத்தொழிற்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**மின் மற்றும் மின்னிலத்திரனியல் கைத்தொழில்**

**அறிமுகம்**

மின் மற்றும் மின்னிலத்திரனியல் பிரிவு 3 வகைகளைக் கொண்டுள்ளது. அவை வீட்டுப் பாவனைப் பொருட்கள், கைத்தொழில் உற்பத்திகள், மின் உதிரிப்பாகங்கள் என்பனவாகும். கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சினால் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் மின்னிலத்திரனியல் துறையானது வளர்ந்துவரும் கேள்வியுடைய துறையாகவும் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை கவர்வதற்கான துறையாகவும் அடையளம் காணப்பட்டுள்ளது.

**இக்கைத்தொழிற்துறையின் முன்னேற்றம்**

- மின் மற்றும் மின்னிலத்திரனியல் கைத்தொழிற்துறையில் இருக்கும் சிறிய வளர்ந்து வரும் கைத்தொழிலாளர்கள் மற்றும் புதிய உற்பத்தியாளர்கள் என்போருக்கு தொழில்நுட்ப வசதிகளை வழங்கும் மத்திய நிலையமொன்றினை மொரட்டுவைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, அப்பல்கலைகழகத்தினுள் நிறுவுவப்பட்டுள்ளது. பயிற்சி நிகழ்சிகள் உள்ளிட்ட தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதற்கு, 10 வளர்ந்து வரும் கைத்தொழிற்சாலையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மேலும் பல கைத்தொழிற்சாலையாளர்களுக்கு பயிற்சிகளை வழங்க இவ்வமைச்சு திட்டமிட்டுள்ளது.

- உள்நாட்டு மின்சார மற்றும் மின்னிலத்திரனியல் துறைகளுக்கு புதிய மற்றும் உயர் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தவதற்காக ஐஹேழு கண்காட்சியை ஒழுங்குசெய்வதற்கு அமைச்சு நிதி உதவியை வழங்கியிருந்தது.

**மட்பாண்ட கைத்தொழில்**

**அறிமுகம்**

இலங்கை மண்பாண்டக் கைத்தொழில் கீழ்வரும் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன், இக்கைத்தொழிற்துறையின் கீழ் அண்ணளவாக 15 நிறுவனங்கள் ஏற்றுமதியை மேற்கொள்வதடன், இதன் மூலம் சுமார் 5500 - 6000 வரையிலான நேரடித் தொழில்வாய்ப்புகளும் 7,500 மறைமுகத் தொழில்வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை மட்பாண்டங்களின் தரம், ஆசியாவில் உள்ள ஏனைய போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் அதற்கு சமனாக அல்லது மேலாக உள்ளது. தற்போதுள்ள நிலமையில் ஏற்றுமதி மட்பாண்ட பொருட்களுக்கு அதிகூடிய கூட்டுப் பொறுமதியினை சேர்க்க முடியும், அத்தோடு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு இக்கூட்டுப் பெறுமதி 60மூ த்திலும் அதிகாக காணப்படுகின்றது.

- வெண்களிமண் மற்றும் வர்ணக்கற்களினால் செய்யப்பட்ட சாப்பாட்டு மேசைப் பொருட்கள்

- அலங்காரப் பொருட்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்.
- சுவர் மற்றும் தரை ஓடுகள்
- ஏனைய செங்கட்டிகள் மற்றும் ஓடுகள்
- சிறந்த மண்பாண்டங்கள்
- கண்ணாடி
- சீமெந்து

இலங்கையில் கிடைக்கும் மூலப்பொருட்களான கயோலின் (நீர்த்த அலுமினியம் சிலிகேற்), பந்துக்களிமண், பெல்ட்ஸ்பர் (கநடனளியச)இ சிலிக்கா பளிங்குகள், டொலமைட் போன்ற மூலப்பொருட்களின் கிடைக்கும் தன்மையானது மட்பாண்ட கைத்தொழிலின் பலமாக அமைந்துள்ளது. அத்தோடு இலங்கையில் காணப்படும் திறமைமிக்கதும், கல்வியறிவுள்ளதுமான ஊழியர்கள் இத்துறைக்கு பலமாக அமைந்துள்ளதையும் குறிப்பிட முடியும்.

**கைத்தொழிற்துறையின் முன்னேற்றம்**

கைத்தொழிற்துறை எதிர்நோக்கியுள்ள மூலப்பொருள் பற்றாக்குறைக்கு தீர்வாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் பந்துக்களிமண் மற்றும் கனிய தாதுக்களை கண்டறிவதற்கான ஆய்வுகளை மேற்கொள்ள புவியியல் மற்றும் சுரங்க காரியாலயத்திற்கு அமைச்சானது ரூபா 7 மில்லியனை வழங்கியுள்ளது. இதன் கீழ், வடமேல், மேல் மற்றும் தென் மாகாணங்களில் ஆய்வு செய்யப்பட்டதுடன், ஏற்கனவே அவ்வகைப் படிவுகளின் இருப்புக்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதனால் உரிய கைத்தொழிற்சாலையாளர்களுக்கு, அடையளாம் காணப்பட்ட படிவுகளைப் பெற்றுக்கொள்வதற்காகக அவர்களுக்கு அவசியமான உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்காக அமைச்சு ரூபா 4 மில்லியனை செலவிட்டுள்ளது.

**பாதணிக் கைத்தொழிற்துறை**

**அறிமுகம்**

தற்போதைய சூழ்நிலையில், உள்நாட்டிலும் மற்றும் சர்வதேசத்திலும் பாதணி மற்றும் தோற்பொருட்கள் கைத்தொழிற்துறை உயர்ந்த அடித்தளம் உள்ள துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இக்கைத்தொழிற்துறையின் முக்கியத்துவத்தினை அமைச்சு உணர்ந்து கொண்டதனால், இக்கைத்தொழிற்துறையை மேம்படுத்துவதற்கு இதற்கான மூலப்பொருட்களை அருகிலுள்ள இந்தியாவிலிருந்தும் மன்னார் மாவட்டத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். இத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக கீழ்வரும் படிமுறைகள் அமைச்சினால் எடுக்கப்பட்டுள்ளது.

1. கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு (MIC) மற்றும் இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம் (SLITA) இரண்டும் இணைந்து உள்நாட்டு பாதணி மற்றும் தோல் பொருள் கைத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்காக பாதணி மற்றும் தோல் பொருட்கள் பயிற்சி நிறுவனத்தை ளுடுஜஎயுு வில் நிறுவியுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டம், பாதணி மற்றும் தோல் கைத்தொழிற்துறையைச் சேர்ந்தவர்களின் தொழில்நுட்ப அறிவினை அபிவிருத்தி செய்வதற்கும் மேம்படுத்தவதற்கும் உதவிபுரியும். அத்துடன் புதிய பயிற்சி பாடநெறிகளின் போது உயர் தொழில்நுட்ப இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றது.

2. கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு (MIC) மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இணைந்து, பாதணி மற்றும் தோல் பொருட்கள் துறையைச் சேர்ந்தவர்களுக்கு வெளிநாட்டு சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுத்தல், புதிய தொழில் நுட்பத்தை இணைத்துக் கொள்ளல் மற்றும் பெறுமதிச் சங்கிலியை அபிவிருத்தி செய்வதற்காக சர்வதேச மட்டத்தில் பாதணி மற்றும் தோல் பொருட்கள் கண்காட்சியினை ஒழுங்குசெய்யப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் பெப்பரவரி மாதத்தில் இக்கண்காட்சி நடத்தப்படுகின்றது. இது இலங்கை பாதணி மற்றும் தோல் கைத்தொழிற்துறை தொடர்பான பிரதிவிம்பத்தை கட்டியெழுப்புவதற்கான விசேட நிகழ்வாக அமைகின்றது.

3. அமைச்சு உள்நாட்டு பாதணி கைத்தொழிற்துறையாளர்களைப் பாதுகாப்பதற்காக பாதணி இறக்குமதிக்கான வரிகளை (சுங்கத் தீர்வை மற்றும் செஸ்) அதிகரித்தது.

**இலங்கை பாதணி கைத்தொழிற்துறை தொடர்பான பொது தகவல்கள்**

| கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | ஊழியர்கள் எண்ணிக்கை | பெறுமதி சேர்ப்பு |
|---|---|---|
| பாரியளவிலான ஏற்றுமதிக் கம்பனிகள் - 12<br><br>மத்திம அளவிலான கம்பனிகள் - 35<br><br>சிறிய அளவிலான கம்பனிகள் - 300 | நேரடியான மற்றும் மறைமுகமானவை<br><br>30,000 | 40% - 50% |

*மூலம்: அபிவிருத்திப் பிரிவு - III*

**தோற்பொருட் கைத்தொழிற்த்துறை**

**துறையின் பின்னணி**

தோல் மற்றும் தோல் பொருட்கள் இலங்கையின் முக்கியமான கைத்துறை என்பதுடன் பாரிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைவாய்ப்புகள் உள்ளது எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது. தோல் கைத்தொழிற்துறையை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- முடிவுத் தோல்
- தோல் பொருட்கள்
- பாதணி

சிறிய மட்டத்திலான உற்பத்தியாளர்கள் உள்ளூர் உல்லாசத்துறையினரின் தேவையை பூர்த்தி செய்வதற்கான உற்பத்திகளை மேற்கொள்ளுகின்றனர். சில பெரிய நிறுவனங்கள் மிக வெற்றிகரமாக தரமான தோல் உற்பத்திப் பொருட்களை சர்வதேசச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன.

**கைத்தொழிற்துறையின் முன்னேற்றங்கள்**

- தோல் பதனிடும் கைத்தொழிற்துறையினை மீள்நிறுவதற்கு, மன்னார் மாவட்டத்தில் உள்ள மறிச்சுக்கட்டி எனும் இடத்தில் 75 ஏக்கர் நிலப்பரப்பை தேர்வுசெய்துள்ளதுடன், இதில் தோல் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கான கைத்தொழில் பேட்டையை நிறுவவுள்ளது. நில ஆய்வு மற்றும் சூழல் பாதுப்பு தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், காணியினை விடுவிப்பதற்காக அமைச்சு காத்திருக்கின்றது.


- கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் இணைந்து 2007 – 2014 வரை 6 வது தடவையாகவும், பாதணி மற்றும் தோற்பொருட்கள் கண்காட்சியினை நடாத்தியது. இதனூடாக, கைத்தொழிற்சாலையாளர்களுக்கு வெளிநாட்டுச் சந்தைகளை அடைவதற்கும், வெளிநாட்டு கொள்வனவாளர்களிடமிருந்து கேள்விகளைப் பெற்றுக்கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

**ஔதடம் மற்றும் அழகுசாதனக் கைத்தொழில்**

**அறிமுகம்**

இலங்கை ஔதட சந்தையானது இரு அடிப்படைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை அரச மற்றும் தனியார் துறைகளாகும். ஔதடத்துறையில் 200 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் உள்ளதுடன், சந்தைக் கேள்வியில் ஒரு சிறிய பங்கினை 10 பெரிய நிறுவனங்களினால் விநியோகிக்கப்படுகின்றது. 100 ஔதடதப் பொருட்களை 10 உள்நாட்டுக் கைத்தொழிலாளர்கள் வழங்குகின்றனர். இது மொத்த சந்தைக் கேள்வியில் 15மூ - 18மூ ஆகும். ஆரச துறை மூலம் ரூபா 18 பில்லியன் பெறுமதியான ஔதடதங்களும் தனியார்த் துறை மூலம் ரூபா 18 பில்லியன் பெறுமதியான ஔதடதங்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இலங்கை ஔதட சந்தையானது இரு பாரிய பிரிவுகளாக உள்ளது.




ஆகவே ரூபா 7 பில்லயன் பெறுமதியான மருந்துகள் மட்டுமே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஔதட உற்பத்தியாளர்களினால் உற்பத்தி செய்யப்படுகின்றது.

**அழகுசாதனக் கைத்தொழிற்துறை**

தற்போது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகள் அழகுசாதனக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளதுடன், அவற்றின் உற்பத்திகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றது.

**அழகுசாதனக் கைத்தொழிற்துறை முன்னேற்றம்**

- ஆய்வு கூடத்திற்கு மூன்றாம் கட்டமாக அவசியமான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சு நிதியளிப்பினை மேற்கொண்டுள்ளது. கொழும்பு பல்கலைகழகத்தில் அமைந்துள்ள இலங்கை ஔதட ஆய்வுகூட மேலதிக அபிவிருத்திக்காக, கட்டட நிலப்பரப்பை விரிவுபடுத்தவதற்காகவும் மற்றும் உயர் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவும் அமைச்சு உதவிகளை வழங்கியது.

- இலங்கை ஔதட நிறுவனத்தின் ஊடாக வினைத்திறன் மிக்க சேவைகளை வழங்குதல்

- தனியார் துறையினரிடமிருந்து மருந்துப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு வினைத்திறன் மிக்க பொறிமுறையொன்றை உருவாக்குதல்.

- இந்தக் கைத்தொழிற்துறையை சர்வதேச மட்டத்திற்கு கொண்டுவருவதற்காக, மருந்து தயாரிப்பகளை மேற்கொள்வதற்கான கைத்தொழில் பேட்டைக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

- உள்நாட்டு அழகு சாதனப் பொருட்கள் கைத்தொழிற்துறைக்கு அவசியமான கவர்ச்சிகரமான மற்றும் புதிய வடிவமைப்பு பொதிசெய்தல் பொருட்களுக்கு தீர்வை சலுகைகளை அமைச்சு வழங்கியது.

# உற்பத்தித் திறன் மேம்படுத்தல், கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவு

**அறிமுகம்**

தொடர்ச்சியாக மாறும் உலகச் சந்தையின் போட்டித்தன்மையை எதிர்கொள்ளக்கூடிய வகையில், கைத்தொழில் உற்பத்திகளின் தரம் மற்றும் நியமத்தை இற்றைப்படுத்துவதன் ஊடாக கைத்தொழில் உற்பத்தித் துறையின் உற்பத்தித் திறனை உயர்துவதற்கான சூழலை உருவாக்கலோடு, கொள்கை உருவாக்கலுக்கு அவசியமான தகவல்களை உள்ளடக்கியதாக உற்பத்தி கைத்தொழிற்சாலைகளின் தரவுத் தளத்தைப் பேணுவதுடன், கைத்தொழிற்சாலைகளுக்கு இடையறா சேவை (ஒன்லைன்) ஊடாக தகவல்களை வழங்குவதற்கு அமைச்சின் தரவுத் தளத்தை கண்காணித்தல் மற்றும் இற்றைப்படுத்துதல்.

**செயற்பாடுகள்**

- பொருத்தமான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தலை ஊக்குவித்தல் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தலுக்கான வசதியளித்தல்.
- வலுச் சக்திப் பாவனையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கானதும் மற்றும் வலுச்சக்திக்கான ஆகுசெலவினைக் குறைப்பதற்குமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- கைத்தொழில் சூழல் தாக்கங்களைத் தணிப்பதற்கு வசதியளித்தல்.
- உற்பத்திக் கைத்தொழிற்சாலைகளை பதிவுசெய்தல் மற்றும் தரவுத்தளத்தை மேம்படுத்தல்.
- அமைச்சின் தரவுத்தளத்தைப் பேணுதல் மற்றும் மேம்படுத்தல்.
- கொள்கைத் தயாரிப்புக்காக, கைத்தொழில் தரவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் பல்வேறுபட்ட புள்ளிவிபர அறிக்கைகளைத் தயாரித்தல்.

**2014 டிசெம்பர் 31 ஆம் திகதி கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கைத்தொழில்கள்**

| | உப பிரிவு | மொத்தக் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உணவு, குடி பானம் மற்றும் புகையிலை | 23 |
| 2 | துணி, ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள் | 05 |
| 3 | மரம், மரம் சார்ந்த பொருட்கள் | 03 |
| 4 | கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்கள் | 02 |
| 5 | இரசாயன, பெற்றோலியம், இறப்பர், பிளாஸ்டிக் பொருட்கள் | 17 |
| 6 | உலோகம் அல்லாத பொருட்கள் மற்றும் கனியப் பொருட்கள் | 06 |
| 7 | உலோக அடிப்படைப் பொருட்கள் | 01 |
| 8 | உலோக நிர்மாணப் பொருட்கள் | 12 |
| 9 | ஏனையவை | 00 |
| | **மொத்தம்** | **69** |

*மூலம்: கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவு*

**கைத்தொழிற்காலைகளின் விபரங்கள் அடங்கிய தரவுதளம்**
**கைத்தொழிற்காலைகளின் பதிவுத் தரவுதளம்**

பதிவு செய்வதற்கு வழங்கப்படும் விண்ணபத்தில் உள்ள தகவல்களுக்கு அமைவாக கைத்தொழிற்சாலை பதிவுத் தரவுத்தளம் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுகின்றது. இது தொழிற்சாலை அமைந்துள்ள இடம், தொடர்பு கொள்ளல் விபரங்கள், உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் ஊழியர் போன்ற அடிப்படை விபரங்களை உள்ளடக்கியிருக்கும்.

- கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் இவ்வாண்டு பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் அதிகரிப்பானது 3.7% வீதமாக அதிகரித்துள்ளது

- பதிவுசெய்த முழு கைத்தொழில் புள்ளிவிபரங்களை ஒப்பிடுகையில் உலோகமல்லாத பொருட்கள் துறை அதிகூடிய (8%) பங்களிப்பினைக் காட்டுகின்றது.

- பதிவுசெய்த முழு கைத்தொழில் புள்ளிவிபரங்களை ஒப்பிடுகையில் இரசாயன, பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் துறை அதிகூடிய பங்களிப்பான 22.7% வீதத்தினை வழங்கியுள்ளது.

**வெப்தள அபிவிருத்தி**
அமைச்சின் வெப்தளம் வெப் 2.0 தரத்துடன் முற்று முழுதாக மீளமைப்பு செய்யப்பட்டது. இதன் மூலம் திறந்த வரிசையூடாக (on line) விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் வசதி, தற்போதுள்ள தகவல்களில் மாற்றங்கள் காணப்படின் அதனை திறந்த வரிசையூடாக (on line) அறிவிப்பதற்கான வசதி, வெப் தளத்தில் உள்ள தரவுகளை தங்கள் தேவைக்கேற்ப பல்வேறு விதமான தரவுக் களங்களை தேர்ந்தெடுத்து தேவையான புள்ளிவிபர அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கான போன்ற வசதிகள் கிடைத்துள்ளன.

**நூலக சேவைகள்**
அமைச்சின் தேவைகளுக்கும் மற்றும் ஏனைய உசாத் துணைகளுக்குமாக கைத்தொழில் தொடர்பான புதிய புத்தகங்கள், சஞ்சிகைகள், வெளியீடுகள் என்பன நூலகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு பயனாளிகள் தங்களுக்கு தேவையான புத்தகங்களையும், மாதச் சஞ்சிகைகளையும் சுலபமாக தேர்ந்தெடுக்கத்தக்க வகையில் நூலகம் மீளொழுங்கு செய்யப்பட்டுள்ளது

**31 டிசெம்பர் 2014 வரையிலான முன்னேற்றம் வலுச்சக்திப் பாவனையின் செயற்திறனை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்.**

ஹோமாகம, மாகந்துர, தங்கொட்டுவ கைத்தொழில் பேட்டைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நிறுவனங்களில் இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இதற்கான வழிகாட்டல் குழு நிறுவப்பட்டுள்ளதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலோசனை நிறுவனத்துடன், ஆரம்ப வலுப்பாவனை நுண்ணாய்வு, விபரமான வலுப்பாவனை நுண்ணாய்வு, வலுப்பாவனைத் தேர்வுகளை செயற்படுத்தல் மற்றும் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல் எனும் நான்கு பிரதான பாகங்களை உள்ளடக்கிய இக்கருத்திட்டத்தை மேற்கொள்வதற்காக அமைச்சு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டுள்ளது.

ஆலோசனையாளர்களினால / நுண்ணாய்வாளர்களினால், ஆரம்ப வலுப்பாவனை நுண்ணாய்வு 13 தொழிற்சாலைகளிலும், விபரமான வலுப்பாவனை நுண்ணாய்வு 06 தொழிற்சாலைகளிலும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. அநேக தொழிற்சாலைகளில் வலுப்பாவனை சேமிப்பு தேர்வுகள் அமுல்படுத்துப்பட்டுள்ளதுடன், வலுப்பாவனை ஆகுசெலவின் குறிப்பிடத்தக்க குறைவு அவதானிக்கப்பட்டது.

இக்கருத்திட்டம் அதன் அடுத்த கட்டத்தில் மேலும் 15 தொழிற்சாலைகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன், உயர் வலுப்பாவனை அடித்தளத்துடன், அதிக வலுப்பாவனையைப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு தொ்ந்தெடுக்கும் முறையில் முன்னுரிமை கொடுக்கப்பட்டு திறந்த அழைப்பின் மூலம் கைத்தொழிற்சாலையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**கைத்தொழில் கழிவு முகாமைத்துவம் மற்றும் கைத்தொழில் உற்பத்தித்துறை கழிவுகளில் இருந்து இடையீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்தலை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்**

கைத்தொழில் பேட்டைகளில் உள்ள தேடுதல் கைத்தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்கு மேல், வட மேல், மத்திய மற்றும் தென் மாகாணங்களில் உள்ள கைத்தொழில் கழிவுகளை சேகரிப்பது என இந்தப் கருத்திட்டத்தின் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டது. எனினும், உள்ளூர் அதிகார மட்டத்தில்கழிவுகளை சேகரிப்பதில் மற்றும் வேறுபடுத்துவதில் நடைமுறையில் உள்ள தடைகள் காரணமாக இக் கருத்திட்டத்தை அமைச்சின் கீழ் உள்ள தங்கொட்டுவ கைத்தொழில் பேட்டையில் நடைமுறைப்படுத்தாது கைவிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இக்கருத்திட்டத்தின் அமுல்படுத்தலின் போது, உற்பத்திச் நடைமுறையின் பொழுது வெளியேரும் கழிவுகளை முகாமைப்படுத்துவதற்கு கைத்தொழில் பேட்டைகளினுள் மிகத்திறமையாக வடிவமைக்கப்பட்ட முறைமை நிறுவப்பட்டது. இக்கருத்திட்டம் தேசிய சுத்திமிகு உற்பத்தி நிலையத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டது. தங்கொட்டுவை கைத்தொழில் பேட்டையில் ஆரம்ப கட்ட ஆய்வுகள் முடிவடைந்தள்ளது. முன்மொழிவுகளை அமுலப்படுத்தல் தொழிற்சாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உரிய கைத்தொழிற்சாலைகளின் பங்களிப்புடன், தங்கொட்டுவைக் கைத்தொழில் பேட்டை வலுச்சக்தி நுண்ணாய்வு தொடர்பான தற்போதை பெறுபேறுகள் மற்றும் பின்னூடட்டல் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

**கைத்தொழில் உதவிச் சேவைகளை வழங்குதல்**

1990ம் ஆண்டு 46ம் இலக்க கைத்தொழில் முன்னேற்றச் சட்டதிற்கு ஏற்ப உற்பத்தித் தொழிற்சாலைகளை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் பதிவு செய்தலுக்கான பிரதான பொறுப்பு தகவல் முகாமைத்துவ அலகிற்கு வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு இப்பிரிவு, பதிவு செய்த கைத்தொழிற்சாலைகளின் தகவல்களை அடிப்படையக் கொண்டு தரவுத்தளம் ஒன்றினைப் பேணுகின்றது. இத் தகவல் தளத்தில் பதிவு செய்யப்பட்ட கைத்தொழிற்சாலைகளின் அடிப்படைத் தகவல்களான, உற்பத்திப் பொருட்கள், இருப்பிடம், முதலீடு மற்றும் தொடர்பு கொள்ளல் வழிமுறைகள் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இக்கைத்தொழிற்காலைகளின் வருடாந்த உற்பத்தி விபரங்கள் மற்றத் தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.அதேவேளை வாடிக்கையாளர்கள் பதிவுசெய்யப்பட்ட கைத்தொழிற்சாலைகள் பற்றிய தகவல்களைப் ஒன்-லைன் (முெ-டைநெ) சேவை மூலம் இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சின் இணையத்தளமான www.industry.gov.lk வெப்தள தரவுகளாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவினால் பகுப்பாய்வு செய்யப்பட்டதன் பின்னர் கொள்கை தயாரிப்பாளர்கள், ஆராய்சியாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் மாணவர்கள் போன்ற வெளிவாரி நபர்களுக்கும், அமைச்சின் உள்ளக நிர்வாக நடவடிக்கைகளுக்கும் தேவைக்கேற்ப தகவல்கள் வழங்குகின்றது. மேலும் இப்பிரிவு தேசிய மட்டத்தில் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகையினை, ஏனைய துறைகளுடன் ஒப்பிடுவதற்காக இலக்க மற்றும் வரைபு வடிவிலான தகவல்களை பரந்தளவிலான தரவுத் தளமொன்றையும் பேணுகின்றது

**2014 டிசெம்பரில் கைத்தொழில் பதிவுகளின் பிராந்திய பங்கீடு**

| மாவட்டம் | கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 1325 |
| கம்பஹா | 370 |
| களுத்துறை | 110 |
| காலி | 38 |
| புத்தளம் | 43 |
| கண்டி | 87 |
| குருநாகல் | 40 |
| மாத்தறை | 41 |

| | |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | 15 |
| நுவரேலியா | 06 |
| இரத்தினபுரி | 12 |
| அனுராதபுரம் | 12 |
| பதுளை | 07 |
| கேகாலை | 17 |
| மாத்தளை | 18 |
| மொனராகரலை | 02 |
| போலன்னறுவை | 05 |
| அம்பாறை | 07 |
| திருகோணமலை | 04 |
| மட்டக்களப்பு | 02 |
| வவுனியா | 01 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மன்னார் | 01 |
| கிளினோச்சி | 01 |
| முல்லைத்தீவு | 01 |
| மொத்தம் | 2169 |

*மூலம்: கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவு*

# இராசயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை

**அறிமுகம்**

இரசாயன ஆயுதங்களை விருத்தி செய்தல், உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்தல், உபயோகித்தல் என்பவற்றோடு அதனால் ஏற்படும் அழிவுகளையும் தடை செய்வதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேச உடன்படிக்கையே இரசாயன ஆயுத உடன்படிக்கை ஆகும். இது 1993ல் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் எல்லா வகையான ஆயுதங்களையும் முற்றாகத் தடை செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஆகும். ஏனைய உடன்படிக்கைகள் போல் அல்லாது இத்தடை செய்யும் நடவடிக்கைகளானது உரிய முறையில் மேற்கொள்ளப்படுகினவா என்பதை உறுதி செய்வதற்குரிய பரந்தளவான செயலமைப்பினை தன்னகத்தே கொண்டு இது ஏனைய உடன்படிக்கைகளில் இருந்து வேறுபடுகின்றது. 2007ஆம் ஆண்டு 58ம் இலக்க இரசாயன ஆயுத உடன்படிக்கையானது 2008 ஒகஸ்ட் 15ம் திகதி தொடக்கம் அமைச்சரினால் அமுல்படுத்தப்பட்டது.

இரசாயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபையானது, உடன்படிக்கைக்கு உரிய தேசிய அமுலாக்கத்தின் செயற்பணிகளினை மேற்கொள்வதற்காக நெதர்லாந்தில் அமைந்துள்ள இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்யும் அமைப்புடனும் மற்றும் ஏனைய அங்கத்தவ அரசுகளுடன் தொடர்புகளைப் பேணுவதற்காகவும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட அமைப்பாகும்.

**31 டிசம்பர் 2014 வரையிலான முன்னேற்றம்**

- **கைத்தொழிற்சாலைகளை பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கல்**

தேசிய அதிகாரசபையின் கீழ் 04 இரசாயனப் பொருட்கள் ஏற்றுமதியாளர் / இறக்குமதியாளர்களை புதிதாக பதிவுசெய்துள்ளதுடன், 21 கைத்தொழிற்சாலைகளின் பதிவு புதுப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையினுள் அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்யும் 85 நபர்களுக்கு இரசாயனப் பொருட்களினை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரம் தேசிய அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளது. இறக்குமதியாளர்களுக்கு அனுமதித்ப்பத்திரங்கள் இரசாயன ஆயுத உடன்படிக்கை சட்டத்தின் கீழ் அவர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக வழங்கப்பட்டது.

- **வருடாந்த ஆவணங்களை மூீஊறு விற்கு சமர்ப்பித்தல்**

இரசாயன ஆயுத உடன்படிக்கையின் ஏஐ சரத்திற்கு அமைவாக, 2013ம் ஆண்டுக்கான பிரகடனம் மற்றும் இரசாயன ஆயுத உடன்படிக்கையின் ஓ சரத்திற்கு அமைவாக, இரசாயன ஆயுதத்திற்கு எதிரான பாதுகாப்புக்கான தேசிய நிகழச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள் மூீஊறு ற்கு சமர்ப்பிக்கப்பட்டது

- **வழமையான கள ஆய்வுகள்**

உற்பத்திக்கு அமுலாக்கப்பட்ட தேவைகள் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்களின் பாவனை மற்றும் இரசாயன ஆயுத உடன்படிக்கையில் கூறப்பட்ட கடப்பாடுகளை கைத்தொழில் நடவடிக்கைகளில் பிரகடனப்படுத்தியவாறு அரச நிறுவனங்களுடன் ஒத்திசைவாவதை உறுதிப்படுத்துவதற்காக கள ஆய்வுகள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- **டெம்பில்பேர்க் கைத்தொழில் பேட்டை ஆய்வுகள் - ஆரம்ப நிகழ்வு - 07 மார்ச் 2014**

மேல் மாகாண பிராந்தியக் சேவை மத்தியநிலையத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக அவசரகால இரசாயன முகாமைத்துவம் டெம்பில்பேர்க் கைத்தொழில் பேட்டையில் உள்ள கைத்தொழிற்சாலையாளர்களுக்கு 07 மார்ச் 2014ம் திகதி அவசரகால இரசாயன முகாமைத்துவ முன்னேற்பாடுகள் தொடர்பான அடிப்படை அறிமுகத்துடன் நடாத்தப்பட்டது. இந்த விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம், அவர்களின் வேலைத்தளத்தின்

பாதுகாப்பு மற்றும் தற்பாதுகாப்புக்கு உதவுவதற்காக ஆய்வினை மேற்கொள்ளல் மற்றும் இதனூடாகாக நிலையான கைத்தொழில் அபிவிருத்திலை இலங்கையில் ஏற்படுத்தல் ஆகும்.

- **அல் - இல்மியா மத்திய மகா வித்தியாலத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சியில் பங்குபற்றல்**

குருநாகல், நிக்கவரட்டிய, வெல்பொதுவெவவில் அமைந்துள்ள அல்-இல்மியா மத்திய மகா வித்தியாலயத்தினால் 21 - 23 ஜனவரி 2014 வரை ”60வர் பொன் விழா” ஒழுங்குசெய்யப்பட்டது. இந்தக் கண்காட்சியில் பங்குபற்றியதன் நோக்கம் மாணவர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் தீங்குவிளைவிக்கும் இரசாயனம் அல்லது பொருட்கள் பற்றியும் அவற்றில் இருந்து பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான பொது அறிவை வழங்குவதாகும்.

- **தயட கிருள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் : 26 பெப்பரவரி 2014**

தயட கிருள தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து 26 பெப்பரவரி 2014ம் திகதி குருநாகல் மாவட்டத்தின் கல்கமுவ பிரதேசத்தில் வாழும் விவசாய சமூகத்திற்கு ‘‘கிருமிநாசினிகளையும் உரங்களையும் பாதுகாப்பாக பயன்படுத்தல்” எனும் தலைப்பில் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் தேசிய அதிகாரசபையினால் நடாத்தப்பட்டது. மகிந்த சிந்தனை எதிர்கால நோக்குக்கு அமைவாக இலங்கையில் உள்ள விவசாய சமூகத்தை விவசாய இரசாயனப் பொருட்களைப் பாதுகாப்பக பயன்படுத்துவது பற்றி அறிவூட்டுவதற்காக “கெத்தாட அருணல” எனும் தலைப்பில், குருநாகல் மாவட்டத்தின் உயர் பகுதியில் காணப்படும் தொடர்சடசியாக பரவும் நோய்களை இல்லாதொழிப்பதற்கு உதவும் வகையில் இந்த நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியின் இறுதியில் பங்குபற்றிய விவசாயிகளுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டது.

- **தயட கிருள கண்காட்சி - 2014 இல் பங்குபற்றல்**

குளியாப்பிட்டியவில் நடாத்தப்பட்ட தயட கிருள கண்காட்சியில் தேசிய அதிகாரசபை பங்குபற்றியது. இந்தக் கணக்காட்சியில் இரசாயனப் பொருட்களை பாதுகாப்பாக கையாளுதல் தொடர்பாக இரு விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் அதிகார சபையின் அங்கத்தவர்களினால் நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியின் இறுதியில் பங்குபற்றியவர்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டது

- **ஞுழுஊழு விற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - 03 மார்ச் 2014**

களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக, தேசிய அதிகாரசபை ஞுழுஊழு அலுவலர்களுக்கு குற்றம் நடைபெற்ற இடத்தில் இரசாயனப்பொருட்களை மாதிரிப்படுத்தல் தொடர்பான ஒருநாள் பயிற்சி வழங்கப்பட்டது. இதன் போது இரசாயன நிகழ்வொன்று நிகழ்ந்தால் அங்கு இரசாயன மாதிரியை மேற்கொள்வது மற்றும் அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான அடிப்படை அறிவு வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சி 03 மார்ச் 2014ம் திகதி, களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் நடைபேற்றதுடன், இப்பயிற்சிக்காக 20 பேர் பங்குபற்றினர்.

- **அவசரகால முகாமைத்துவ சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய அதிகாரசபை, கல்வியின் ஊடாக கைத்தொழில் பிரச்சனைகளைக் குறைத்துக்கொள்ளல் எனும் நோக்கத்துடன், கைத்தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, சூழல் மற்றும் அவசரகால முகாமைத்துவம் தொடர்பாக கைத்தொழிற்சாலை நபர்களை அறிவூட்டுவதற்காக பயிற்சிப் பாடநெறியொன்றை ஆரம்பித்துள்ளது. கைத்தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, சூழல் மற்றும் அவசரகால முகாமைத்துவம் தொடர்பாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் மனித வள மேம்படுத்தல் நிறுவனத்துடன் (ஐர்சுயு) இணைந்து ஐந்து மாத சான்றிதழ் பாடநெறியொன்றினை ஒழுங்கு செய்துள்ளது. இந்த நிகழ்ச்சிக்கான ஆரம்ப நிகழ்வு கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கேட்போர் கூடத்தில் 26 ஏப்பிரல் 2014த் திகதி நடைபெற்றது.

- **இலங்கை கடற்படையினருக்கான 4RS நிகழ்ச்சித்திட்டம் - 16 - 17 ஜுலை 2014**

இலங்கை கடற்படையினரின் வேண்டுகோளுக்கு அமைவாக, இரசாய விபத்துக்களை /தீங்குகளைக் குறைத்தல் தொடர்பான பயிற்சி இலங்கை கடற்படையினரின் துரித விளைவுப் காப்பு மற்றும் நிவாரணப் படையினருக்கு 2014 ஜுலை 16 மற்றும் 17ம் திகதிகளில் வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சி ஒரு நாள் கோட்பாட்டு அடிப்படையிலும் மறுநாள் பிரயோக ரீதி அடிப்படையிலும் பயிற்சி வழங்கப்பட்டு, பங்குபற்றிய 35 நபர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

- **ஹொல்சிம் லங்காவின் தீங்கு விளைவிக்கும் பொருட்களை போக்குவதரத்து செய்பவர்களுக்கான பயிற்சிப் பாடநெறி**

தேசிய அதிகாரசபை ஹொல்சிம் சீமெந்துக் கம்பனி நிறுவுனத்தின் தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருட்களை போக்குவதரத்து செய்யும் ஊழியர்களுக்கு கொழும்பு பல்கலைக் கழகத்தின் மனித வள மேம்படுத்தல் நிறுவனத்துடன் (ஐர்சுயு) இணைந்து பாடநெறியொன்றினை ஒழுங்கு செய்துள்ளது. இந்தப் பயிற்சி ஒரு நாள் கோட்பாட்டு அடிப்படையிலும் மறுநாள் பிரயோக ரீதி அடிப்படையிலும் இரு நாள் பயிற்சி வழங்கப்பட்டது.

- **இலங்கை முதலீட்டுச் சபைக்கான பயிற்சி**

தேசிய அதிகாரசபை, முதலீட்டுச் சபையின் வேண்டுகோளுக்கு அமைவாக முதலீட்டுச் சபையின் சூழல் திணைக்களத்தில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவம் மற்றும் அவசரகால பதிலளிப்பு தொடர்பாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் மனித வள மேம்படுத்தல் நிறுவனத்துடன் (ஐர்சுயு) இணைந்து பாடநெறியொன்றினை ஒழுங்கு செய்தது. இந்த நிகழ்ச்சி முதலீட்டுச் சபை அமைந்துள்ள மட்டம் 08, மேற்கு கோபுரம், உலக வர்த்த மத்தியநிலையக் கட்டடத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் 10 - 11 ஜனவரி 2014ம் திகதிகளில் காலை 9 மணியில் இருந்து 4 மணி வரை நடைபெற்றது.

- **பிராந்தி ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்புக்கான (ளுயுயுசுஊ) இரசாயன பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு**

இரசாயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபையானது இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்யும் அமைப்புடன் இணைந்து பிராந்தி ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்புக்கான (ளுயுயுசுஊ) இரசாயன பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கை 2014 டிசம்பர் 17 - 19ம் திகதி வரை கொழும்பில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்தது.

- **கைத்தொழிற்சாலை பாதுகாப்பு, சூழல் மற்றும் அவசரகால முகாமைத்துவ சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்**

கைத்தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, சூழல் மற்றும் அவசரகால முகாமைத்துவம் தொடர்பான பாடநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டு சான்றிதழிகள் வழங்கும் நிகழ்வு 20 டிசெம்பர் 2104 அன்று கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இப்பாடநெறி இரசாயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபையானது கொழும்பு பல்கலைக் கழகத்தின் மனித வள மேம்படுத்தல் நிறுவனத்துடன் (ஐர்சுயு) இணைந்து ஒழுங்குகள் செய்யப்படடிருந்தது. இப்பாடநெறியின் நோக்கம் அவசரகால நிலமைகள் தொடர்பாக பாதுகாப்பு அலுவலர்களை அறிவூட்டுவதன் மூலம் கைத்தொழிற்துறையில் ஏற்படும் கைத்தொழில் இடர்களைக் குறைத்தல் ஆகும்.

# கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் பிரிவு

**அறிமுகம்**

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் மேற்பார்வையின் கீழ் செயற்படும் கூட்டுத்தாபனம் மற்றும் சட்டபூர்வசபைகள் பிரிவு, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படும் அனைத்து கூட்டுத்தாபனங்களையும் சட்டபூர்வசபைகளையும் மேலும் வலுவூட்டி நிரந்தர நிறுவனமாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. இந்நோக்கத்தினை பூர்த்திசெய்வதற்காக இப்பிரிவினால் அரச நிறுவனங்கள் அனைத்தினதும் வளங்களின் செயற்திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் வருமானத்தினை உச்சமாக்குதல், தந்திரோபாய வியாபாரத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் வியாபாரச் செயற்பாட்டினை விரிவுபடுத்தும் முறையினை அறிமுகப்படுத்துதல் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இப்பிரிவினால் இச்சட்டபூர்வ சபைகளின் நித்திய செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

கீழ்வருவன கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட சபைகள் பிரிவின் கீழ் செயற்படும் அரச நிறுவனங்கள் ஆகும்.

1. வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி
2. வரையறுக்கப்பட்ட கஹட்டகஹ காரீயக் கம்பனி
3. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை
4. இலங்கை லேலன்ட் கம்பனி
5. இலங்கை அசோக் லேலன்ட் கம்பனி

**வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி**

வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி முழுமையாக அரசுக்குச் சொந்தமான ஒரு கம்பனி ஆகும். இக்கம்பனி உப்பு உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. தற்போது, மன்னார் உப்பளம், செம்மணி உப்பளம் என்பன இக்கம்பனியின் கீழ் உள்ளதுடன், மன்னார் உப்பளத்தில் இருந்து சாதாரண உப்பு, தூள் உப்பு மற்றும் அயடின் சேர்க்கப்பட்ட உப்பு என்பன தயாரிக்கப்படுகின்றது. புவியியல் நிலமை காரணமாக செம்மணி உப்பளத்தின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனினும், எதிர்காலத்தில் உப்பு உற்பத்தியை மேற்கொள்வதற்காக தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு அவசியமான முன்மொழிவுகளை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சு எடுத்துள்ளது. 2012ம்ஆண்டு அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 25 மில்லயன் உதவியுடன் மாந்தை உப்புக் கம்பனி மேலதிக உப்பளங்களுடன் 53 ஏக்கர்களுக்கு விரிவாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டது. இவ்வருடம் அபிவிருத்திக்குப் பின்னர் அண்ணளவாக 4000 மெற்றிக் தொன் ஆக இருந்த உப்பு உற்பத்தி 5500 மெற்றிக்தொன்னாக அதிகரித்துள்ளது.

2014ஆம் ஆண்டு ஒகஸ்ட் வரை கம்பனி 4,643.7 மெற்றிக் தொன் உப்பை உற்பத்தி செய்யததுடன், 3050.6 மெற்றிக் தொன் உப்பு விற்பனை மூலம் ரூபா 35.1 மில்லியன் உழைக்கப்பட்டது. இந்தக் கம்பனி “ராஜா உப்பு” எனும் பெயர் அடையாளத்தின் கீழ் 1 கி.கி லமினேட் செய்யப்பட்ட உப்பை உற்பத்தி செய்து விநியோகிக்கின்றது.டன், இது மாதாந்த இலக்கான 50,000 பொதிகள் எனும் இலக்கையும் அடைந்துள்ளது. அமைச்சு, மீளாய்வுக்குட்பட்ட காலத்தில் அமைச்சு மனித வள செயற்பாடுகளைக் கண்காணிப்பு செய்தது.

**வரையறுக்கப்பட்ட கஹட்டகஹ காரீயக் கம்பனி**

வரையறுக்கப்பட்ட கஹட்டகஹ காரீயக் கம்பனி முற்று முழுதான அரசாங்கத்திற்கு சொந்தமான ஒரு கம்பனியாகும். இது இலங்கையில் 2000 அடி ஆழத்தில் இருந்து காரியத்தினை அகழ்ந்தெடுக்கும் மிகப் பெரிய நிறுவனமாகும். அத்தோடு காரியத்தினை அகழ்ந்தெடுக்கும் இயலளவினையும் பலத்தினையும் கொண்ட ஒரே ஒரு அரச நிறுவனமாக இது திகழ்கின்றது.

2014ம் ஆண்டின் மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், 548 மெற்றிக் தொன் காரியம் உற்பத்தி செய்யப்பட்டதுடன், இதில் 479.5 மெற்றிக் தொன் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மூலம் மொத்த வருமானம் ரூபா 79 மில்லியன் ஆவதுடன் தேறிய இலாபம் 1.82 மில்லியன் ஆகும். மேற்குறிப்பிட்டவைகளுக்கு மேலதிகமாக, கம்பனியின் அபிவிருத்திக்காக புதிய காரியப் படிவுகள் கண்டுபிடிப்பதற்கும் மற்றும் பொறுமதி சேர்ப்புக்கு முதலீடுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட கஹட்டகஹ காரீயக் கம்பனியின் பதவியணியினரின் எண்ணிக்கையை 200 வரை அதிகரிப்பதற்காக, முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதிக்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன், கம்பனியின் அபிவிருத்தி மற்றும் மனிதவள அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மேற்குறிப்பிட்ட பணிவியணியில் பொது முகாமையாளர் பதவியையும் உள்ளடக்குமாறு அமைச்சுக் கேட்டுக்கொண்டது. அத்துடன் ஆழ் சுரங்க அகழதலில் ஈடுபடும் ஊழியர்களுக்கு காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தவும் அமைச்சு அங்கீகாரத்தை வழங்கியது.

**தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை**

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என அடையாளம் காணப்பட்டதுடன், நாட்டில் அமைந்துள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித்துறையினை மேம்படுத்தல் உதவுதல், ஊக்குவித்தல், மற்றும் வசதிகயை வழங்குதல் என்பவற்றிற்காக தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 2006 ஆம் ஆண்டு 17ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இதன் கீழ் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் மாவட்ட மட்டத்தில் தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்கு மாவட்ட தொழில்முயற்சி மன்றங்களை அமைத்தல், ‘‘கமட ஒப்பன வியாபார’’, மற்றும் கொத்தணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அதிகாரசபை மேற்கொள்ளுகின்றது.

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் கம்பனியின் மனிதவளத்தை பலப்படுத்துவதற்காக கீழ்வரும் நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டது.

(i) தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் உதவியுடன் நிறுவனத்திற்கான ஆட்சேட்பத் திட்டத்தினை அமைச்சு அபிவிருத்தி செய்ததுடன், தேசிய சம்பள மற்றும் பணிவியணி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் அனுமதிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அத்துடன், அமைச்சு மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு தொடர்பாக கண்காணிப்பினை மேற்கொண்டது.

(ii) அதிகாரசபையின் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயற்பாட்டுதத் திட்டத்திற்கு அமைவாக முன்னேற்ற மீளாய்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாண்மையை பலப்படுத்துவதற்காக புதிய நடவடிக்கைகள் கூட்டிணைந்த திட்டத்தனுள் உள்ளடக்கப்பட்டது.

(iii) கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்படும் கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதுடன், அவற்றினை திருத்துவதற்கான நடவடிக்கைகள் மீளாய்வுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.

**வரையறுக்கப்பட்ட லங்கா லேலண்ட் கம்பனி**

வரையறுக்கப்பட்ட லங்கா லேலண்ட் கம்பனி 2008 ஆம் ஆண்டில் இருந்து கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் அமைந்த100 சதவீதம் அரசுக்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஆகும். அரசாங்கத்தினால் முதலீடு செய்யப்பட்ட 42 சதவீதத்தினை முகாமைத்துவம் செய்வதன்றி, எவ்வித தொழிற்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை.

**வரையறுக்கப்பட்ட லங்கா அசோக் லேலண்ட் கம்பனி**

வரையறுக்கப்பட்ட லங்கா அசோக் லேலன்ட் கம்பனியானது ஒரு பொதுக் கம்பனியாக இலங்கையில் நிறுவப்பட்டது. அது 1982 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசாங்கத்துடன் கூட்டு முயற்சியாக இலங்கை அரசாங்கத்தின் (இலங்கை அரசாங்கத்தின் 100% பங்குகளைக் கொண்டு லங்கா லேலன்ட் நிறுவனதம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.) 42% உரிமையையும், இந்தியா வின் அசோக் லேலன்ட் நிறுவனம் 28% உரிமையையும், பொது மக்களின் 30% உரிமையையும் கொண்டு செயற்படுகின்றது. இந்தக் கம்பனி.அசோக் லேலன்டின் வர்த்தக வாகனங்களை பொருத்துவதுடன், அசோக் லேலன்டின் முழுமையான பஸ், ட்ரக், ட்ரக் செஸி, உதிரிப் பாகங்கள், ஜெனரேட்டர் மற்றும் துணைப் பொருட்களை இறக்குமதி செய்து விறபனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. பதிய அசோக் லேலன்ட் பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து வாகனங்களுக்கான பொடி பப்ரிகேசன் (body fabrication) உட்பட வர்த்தக வாகனங்களின் திருத்தங்கள் மற்றம் மீளப்புதுப்பித்தல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுகின்றது. அமைச்சு கம்பனியின் வணிக நடவடிக்கைகளையும் மனித வளநடவடிக்கைகயையும் கண்காணிப்பு செய்ததுடன், கம்பனியின் தேவைகருதி வெளிநாட்டு ஊழியர்களின் விசாவினைப் புதுப்பிப்பதற்கான சிபாரிசினையும் வழங்கியது.

# சிறிய மற்றும் நுண் கைத்தொழில்கள் தலைவர் மற்றும் தொழில் முயற்சியாளர் ஊக்குவிப்புக் கருத்திட்டம் III – சுழற்சி நிதியம்

(SMILE III – சுழற்சி நிதியம்)

**அறிமுகம்**

இந்த அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவ அலகின் (PMU) ஊடாக 2012 மே 01ம் திகதியில் இருந்து செயற்படுமாறு SMILE III கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

புதிய தொழில்முயற்சிகளை தொடங்குவதற்கு, அவற்களின் உற்பத்தித்திறனை அல்லது உற்பத்தியினை அதிகரிப்பதற்கு, உற்பத்திப் பொருட்களின் தரத்தினை அதிகரிப்பதற்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன்களை வழங்குவதற்கு SMILE III சுழற்ச்சி நிதியம், உருவாக்கப்பட்டுள்ளது. அத்தோடு இக்கடன் திட்டம், நிறுவனத்தின் இயலளவினையும், உற்பத்தித்திறக் அபிவிருத்தியினையும் சிறிய மற்றும் நுண்பாகத் தொழில் முயற்சியாளர்கள் மேற்கொள்வதற்கும் உதவும்.

**முறையியல்**

இந்தக் கருத்திட்டத்தின் கீழ் இரு வகையான கடன் திட்டங்கள் கிடைக்கப்பெறும். அவை பொதுக் கடன் திட்டம் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற உதவிக் கடன் திட்டம்.

1. பொதுக் கடன் திட்டம்
2. உற்பத்தி மற்றும் கைத்தொழிற்துறையின் உப துறைகள் கருத்தில் கொள்ளப்படும்.
3. தொழில்நுட்ப பரிமாற்ற உதவிக் கடன் திட்டம்

ஊழியர்களின் கணக்கியல், முகாமைத்துவ, தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துவதற்கு அல்லது ஆலோசனைச் சேவைகளின் மூலம் கருத்திட்டங்களின் செயற்பாடுகள், முகாமைத்துவம் மற்றும் அமுல்படுத்தல்கள் என்பவற்றிற்கு வசதிகளை வழங்குதல் அல்லது ஆய்வுகூட உபகரணம் உட்பட தரக்கட்டுப்பாட்டு உபகரணத்தினை கொள்வனவு செய்வதன் மூலம் இறுதி விளைபொருளின் தரத்தினை மேம்படுத்துதல் என்பன தொடர்பானவை கவனத்தில் கொள்ளப்படும்.

| கடன் திட்டம் பற்றிய தகவல் | பொதுக்கடன் திட்டம் | தோழில்நுட்ப பரிமாற்ற உதவிக்கடன் திட்டம் |
|---|---|---|
| உச்சளவுக் கடன் தொகை | 5 மில்லியன் | 2.5 மில்லியன் |
| வட்டி வீதம் | 9% | 5% |
| மீளச்செலுத்தல் காலம் | 10 வருடங்கள் (02 வருட கருணைக்காலம் உட்பட) | 07 வருடங்கள் (02 வருட கருணைக்காலம் உட்பட) |

*மூலம்: SMILE III சுழற்ச்சி நிதியம்*

இந்தக் கடன்கள் 10 பங்குபற்றும் கடன் நிறுவனங்களின் (இலங்கை வங்கி, மக்கள் வங்கி , பிரதேச அபிவிருத்தி வங்கி, கொமர்சல் வங்கி, ஹட்டன் ந'னல் வங்கி, செலான் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி மற்றும் DFCC வங்கி, சணச வங்கி) ஊடாக மீளளிப்பு செய்யப்படுவதுடன், இந்த மீளளிப்பு 2013 ஜுலை மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**2014 டிசெம்பர் 31 வரையிலான செயற்பாடுகள்**

பதிவேடுகளுக்கு அமைவாக SMILE III கடன் திட்டத்திற்காக கிடைக்கப்பெறும் மொத்தக் கடன் நிதி ரூபா 9.4 பில்லியன் ஆகும். மீளாய்வுக்குட்பட்ட 2014 ஜனவரியில் இருந்து டிசெம்பர் வரையான காலப்பகுதியினுள் 1381 கடன் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இதில் 1244 கடன் விண்ணப்பங்கள் தொழிற்பாட்டு மட்டக் குழுவினால் உபகருத்திட்டங்களுக்கு தகுதியுடையதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதில் 249 உப கருத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஒதுக்கப்பட்ட நிதி ரூபா 609.426 மில்லியன் ஆகும் அத்துடன் 318 உப கருத்திட்டங்கள் ரூபா 806.426 மில்லியன் தொகையை மீளளிப்பு செய்துள்ளன. இவ்வருடம் கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவு ஹொரணை, ஹங்வெல்ல, மாத்தளை மற்றும் யாழ்ப்பாணப் பிரதேசங்களில் உள்ள நுண்நிலை துறை சார்ந்த தொழில்முயற்சியாளர்களுக்கு இது தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. அத்துடன், ரூபவாகினி தொலைக்காட்சி 25.09.2014 ஆம் திகதி “திரியட சவியக்” எனும் நிகழ்ச்சியை ஒளிபரப்பியது விசேடமானதாகும்.

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

**அறிமுகம்**

**கஹடகஹ காரீய அகழ்வு**

கஹடகஹவின் அகழ்வுகள் இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் குருணாகல் மாவட்டத்தில் மதுரகொட, தொடங்கஸ்லந்தலவில் கொழும்பு பிரதான நகரத்திலிருந்து சுமார் 90 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருந்தது. இது 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட, அரசுக்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஆவதுடன் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படுவதுடன் பிரதான பங்கு வைப்பாளராக திறைசேரியைக் கொண்டுள்ளது. கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டின் பிரதான கொள்கை ஆக்க அமைப்பாக நிறைவேற்றுத் தவிசாளரினால் தலைமை வகிக்கப்படுகின்ற பணிப்பாளர்கள் சபை என்பதுடன், கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் அதனது நேர் வரிசை அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரியிடமிருந்து அதனது கூட்டிணைந்த கொள்கையின் தரத்தைப் பெறுகின்றது

கஹடகஹவின் அகழ்வுகள், மலையுடன் கூடிய பிரதேசத்தில் 25 மீற்றர்கள் உயரத்தில் அமைந்துள்ளதுடன், கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் மேற்பரப்பு நிலத்தின் சில ஏக்கர்களில் மட்டுமே அமைந்திருக்கையில் சுமார் 102 ஏக்கர்கள் இறையிலி உரித்து, அகழ்வுகள் அதனது பரந்தளவிலான தாகையில் 500 மீற்றர்கள் விரிவுபடுத்தப் படுகின்றது. அதற்கு மேலதிகமாக, 102 ஏக்கர்களில் 75 ஏக்கர்களில் தென்னைப் பயிர்ச்செய்கையும் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கையில் ஆழமான அகழ்வாக கஹடகஹவினது 2000 அடி (610 மீற்றர்) ஆழமாக இருப்பதுடன் 2 சுரங்க வழி அடையப்பட்டது. கஹடகஹவில் 1133 அடி (345 மீற்றர்) ஆழத்தில் ஒன்றும் மற்றும் கொலோன்கஹவில் மற்றையது 330 அடி வரையும் (101 மீற்றர்கள்) செல்கின்றது. கீழேயுள்ள சுரங்கவழி அடிப்பாகத்தை அடைதலானது, 2000 அடி (610 மீற்றர்கள்) வரை ஒரு தொடர் திருகுவிட்டங்களானது. 2000 அடி மட்டத்தை அடையும் வரை 1132 அடி மட்டம் வரை வேலையாளர்களை கீழ் நிலத்தளத்திற்கு அனுப்புவதற்காக இயக்கப்படுவது முக்கியமானது.

இலங்கையில் போகல அகழ்வு மற்றும் கஹடகஹ அகழ்வு என்று பெயர் குறிப்பிடப் படுகின்ற இரண்டு பிரதான அகழ்வுகள் உள்ளன. முன்னர் கஹடகஹ அகழ்வு மற்றும் கொலங்க அகழ்வு என்பன இரண்டு அகழ்வுகளாக வேலை ஆற்றப்பட்டிருந்ததுடன் 1872 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பட்டிருந்தது.

**கஹடகஹ தனித்துவமான உற்பத்திப்பொருள்**

உலக அங்கீகாரத்தைக் கொண்டிருக்கையில், இலங்கை உயர் காபன் இயங்கைப் பளிங்குப் பாறைக் காரீயத்தை வழங்கும் வர்த்தக மூலமாகவும், குறிப்பாக கஹடகஹ சுரங்கம், 99மூ இற்கும் அதிகமான உயர் தூய இயற்கை பாறைக் காரீயத்தை அகழ்வதற்கான இயலுமையைக் கொண்டிருக்கின்றது. இது, காரீயக்கட்டி,மற்றும் பாளங்களின் துகழ்வுகள் தனித்துவமான மூலப்பொருளொன்றாக உலகச் சந்தையில் ஏற்றுக்கொள்கின்றமையை நிரூபிக்கின்ற கௌரவத்தைக் கொண்டு குறைந்த சாம்பலைக் கொண்டிருக்கின்ற உயர் காபன் பளிங்குப் பாறைகளின் ஆதிக்கத்தை அனுபவிக்கின்றன.

**காரீயம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற நாடுகள்**

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் 100% ஏற்றுமதியை ஆற்றுப்படுத்திய கம்பனி என்பதுடன், பிரதான ஏற்றுமதி நாடுகள் ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐக்கிய இராச்சியம், யப்பான், அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் என்பவையாகும். “போயிங்” ஆகாய விமானங்கள், நாசா விண்வெளி ஏவுகணைப் பரிசோதனைக்குப் பயன்படுத்துவதற்கு ஐக்கிய இராச்சியத்தின புருனல் பல்கலைக்கழகத் திலிருந்து கஹடகஹ கிறபைட்டில் புதிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**தொலைநோக்கு**

“உலகத்தில் இயற்கையான பளிங்குத் தன்மையுள்ள காரீயத்தின் தனித்துவமான மூலமாக விளங்குதல்”


**செயற்பணி**

“நாட்டில் காரீயக் கனிப்பொருள் மூலங்களில் உச்சப்பயன்பாட்டுடன் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதார, சமூக அபிவிருத்தியில் பயனுறுதிவாய்ந்த, வினைத்திறனுடைய செயலூக்கமுள்ள பங்குதாரரொருவராக இருத்தல்”

**குறிக்கோள்கள்**

“கம்பனியின் குறிக்கோள்கள், உயர் தரமான தூய்மையான காரீயத்தை ஏற்றுமதி செய்வதற்காக அகழுதல், பதப்படுத்துதல் மற்றும் உயர்ந்தபட்ச பெறுமதியைச் சேர்த்தலும், காரீய அடிப்படையிலான கைத்தொழில்களை விருத்தி செய்தலுமாகும்.

**2014 செப்டெம்பர் 15 வரையிலான முன்னேற்றம்**




**அ) உற்பத்தி**

- 2014/2015 ஆம் ஆண்டு டிசெம்பர் வரையான மொத்த காரீய உற்பத்தி (அகழும் காரீயம்) 565.46 மெற்றிக் தொன் ஆகும். 2006 ஆம் ஆண்டிலிருந்து அகழ்வு புத்துயிர் பெற்றதன் பின்னர் இன்று வரை மொத்த உற்பத்தி 6,062.3 மெற்றிக் தொன் ஆகும். உற்பத்தி இலக்கு 2014/2015 ஆம் ஆண்டு மாதமொன்றிற்கு 100 மெற்றிக்தொன் ஆகும்.

- கடந்த 10 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் தலைக்கான மாதாந்த உற்பத்தி 0.138 மெற்றிக் தொன் முதல் 1.185 மெற்றிக் தொன் வரை அதிகரித்திருந்தது.
- 2014/15 ற்கான தகவல்கள் 2014 டிசெம்பர் 31ம் திகதி வரை மட்டுமேயாகும்.

**ஆ) உற்பத்தித் திறன்**


கடந்த ஆண்டில் மனித மாற்று முறைக்கான உற்பத்தித்திறன் 45.88 கிலோ கிராமாக இருக்கையில், கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் உற்பத்தித்திறன் மனித மாற்று முறைக்கு 45 கிலோ கிராமாகும்.

**இ) விற்பனை**

2007/2008 காலப்பகுதியில் வழமையான பாரம்பரிய கொள்வனவாளர்களான அமெரிக்காவின் அஸ்பெரி கிரபெட் மில்ஸ் இனக். மற்றும் யப்பான் எஸ்.கரோ அன்ட் கம்பனியுடன் காரீய ஏற்றுமதிச் சந்தை செயற்படுத்தப் பட்டிருந்தது.

2000 ஆம் ஆண்டின் பின்னர் 2011 ஆம் ஆண்டில் கிறபெக்சல் கம்பனியுடனான தொடர்புடன், ஐக்கிய இராச்சியத்தில் ஐரேப்பிய சந்தைக்குள் நுழைந்ததுடன், உயர் தர காரீயம் ஐரோப்பிய சந்தைக்குள் ஏற்றுமதி செய்யப்பட்டது.


இதன்படி, கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் 2014/2015 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 காலப் பகுதி வரை 608.75 மெற்றிக்தொன் தொன் வரை ஏற்றுமதி செய்துள்ளது. அகழ்வு புத்துயிர் பெற்றதன் பின்னர் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2014 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மொத்த ஏற்றுமதி 4913.66 மெற்றிக்தொன் ஆகும். விற்பனை வருமானம் ரூபா 144 மில்லியனால் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு (2012/2013) வருமானமான ரூபா 91.68 மில்லியனுடன் ஒப்பிடுகையில் வருமான அதிகரிப்பானது ரூபா 52.4 மில்லியன் ஆகும். இது சர்வதேச காரிய கைத்தொழிற்துறையின் நடைமுறையாவதுடன் சந்தை நிலைக்கு அமைவாக விற்பனை மாறுபடும்.




*2014/15 ற்கான தகவல்கள் 2014 செப்டெம்பர் 15ம் திகதி வரை மட்டுமேயாகும்.*


**ஈ) நிதியீட்டல்**

2014/2015 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் மொத்த வருமானம் 104.97 மில்லியன் ரூபாவாகும். அகழ்வுகளை மீள் ஆரம்பித்ததன் பின்னர் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2014 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் 748.45 மில்லியன் ரூபாவை சம்பாதித்திருந்தது.




*2014/15 ற்கான தகவல்கள் 2014 டிசெம்பர் 31 திகதி வரை மட்டுமேயாகும்.*

**உ) இலாபம்**




**2014/2015 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 காலப்பகுதியில் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் 13.5 மில்லியன் ரூபாவாகும். அகழ்வுகளை மீள் ஆரம்பித்ததன் பின்னர் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2014 டிசெம்பர் 31 வரை 227.13 மில்லியன் ரூபாவை இலாபமாகப் பெற்றுக்கொண்டது.**

- 2014/15 ற்கான தகவல்கள் 2014 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை மட்டுமேயாகும்.
- அகழ்வுத் தொழிற்பாட்டுச் செலவினம் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டின் சம்பாதிப்பில் இருந்து மேற்கொள்ளப்பட்டது.
- கஹடகஹ சுரங்கத்திற்கு திறைசேரியிடமிருந்து நிதி வழங்கப்படுவதில்லை.
- 2014 டிசெம்பர் 31 இல் வங்கி மற்றும் பண நிலுவை 4.69 மில்லியன் ரூபாவாக இருந்தது.

**ஊ) கையிருப்புகள்**

2014 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான கையிருப்புகள் 762.1 மெற்றிக்தொன் என்பதுடன், அதன் சந்தைப் பெறுமதி 168.4 மில்லியன் ரூபாவாகும்.

**எ) தொழில் படை**

தேர்ச்சியுள்ள அகழ்வு வேலையாளர்கள், ஏனைய உரிய தொழில்நுணுக்க அனுவலர்கள் உள்ளடங்கலாக 110 பேர் அகழ்வு வேலையிலீடுபடுகின்ற பொறியியலாளர் ஒருவரும், சிரேஷ்ட தொழில்நுட்ப அலுவலரும், தகைமையுள்ள பட்டய பொறியாக்கப் பொறியியலாளர் பகுதி நேர அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி

**அறிமுகம்**

மாந்தை உப்புக் கம்பனி, இலங்கை வரலாற்றில் நீண்டகாலமாக உப்பு உற்பத்தில் ஈடுபட்டுவருகின்றது. இது சாதாரண உப்பு, அயடிக் கலந்த உப்பு, தூளாக்கிய உப்பு மற்றும் கைத்தொழில் உப்பு வகைகளை உற்பத்தி செய்கின்றது. பிரதான உப்பு உற்பத்தி மன்னார் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், தலைமைக் காரியாலயம் கொழும்பில் அமைந்துள்ளது. மாந்தை உப்பளத்தின் கீழ் செயற்படும் செம்மணி உப்பளத்தின் பணிகளானது குறைந்தளவு உற்பத்திதிறன் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. எனினும், எதிர்காலத்தில் இந்த தொழிற்சாலையை மீளத் தொடங்குவதற்கு, முன்மொழிவை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

இந்த உப்புக் கம்பனி 1938ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், இது பல்வேறுபட்ட நலன்விரும்பிகளின் வேறுபட்ட நிர்வாக முறைகளின் கீழ் கட்டுப்படுத்தப்பட்டதுடன், இறுதியாக 2001ம் ஆண்டு வரையறுக்கப்பட்ட மாந்தை உப்பு கம்பனி எனப்பெயரிடப்பட்டு தற்போது கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஏனைய உப்புகளுன் ஒப்பிடுகையில் மிகச்சிறந்த உப்பாக (99.5 சோடியம் குளோரைட்) அங்கீகரிக்கப்படுகின்றது.

மாந்தை உப்புக் கம்பனி தேசிய இயற்கை வள பயன்பாட்டு மத்தியநிலையமாக மாத்திரமன்றி மன்னார் மாவட்டத்தில் வாழும் எண்ணற்ற மக்களுக்கு தொழில்வாய்ப்பினையும் வழங்குகின்றது. தற்போது இங்கு 43 நிரந்தரமான உத்தியோகத்தர்களும் 90 அமைய அடிப்படையிலான ஊழியர்களும் பணிபுரிகின்றனர்.

வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி திறைசேரி மற்றும் ஏனைய திணைக்களங்களினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட சபையினால் நிர்வகிக்கப்படுவதுடன், இது கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. இந்த அமைச்சின் கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்டப் பிரிவினால் கண்காணிக்கப்படுவதுடன், சட்ட மற்றும் பொறுப்பு விடயங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இது ஒரு அரச தொழில்முயற்சியாண்மையாக 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், கம்பனி ஒழுங்குவிதிகளையும் பின்பற்றுகின்றது. தற்போது, இந்நிறுவனம் இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் தரம உறுதிப்படுத்தப்படல் சான்றுபடுத்தப்பட்டுள்ளது. அத்துடன், திறைசேரியினால் தேர்வுசெய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர்களினால் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**மன்னார் உப்பளத்தின் உற்பத்தி**

மன்னார் உப்பளத்தின் பரப்பளவு 240 ஏக்கர் ஆகும். இதில் 2010 ஆம் ஆண்டுவரை 110 ஏக்கரில் உப்பு உற்பத்தி நடைபெற்றது. 2011ம் ஆண்டு 53 ஏக்கர் பரப்பளவு கொண்ட பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டு இன்று 163 ஏக்கர் பகுதியில் உப்பு உற்பத்தி மேற்கொள்ளப்படுகினறது. சராசரியாக 5500 மெற்றிக்தொன் உப்பு உற்பத்தி செய்யப்படுவதுடன், இது இலங்கையில் மேற்கொள்ளப்படும் மொத்த உப்பு உற்பத்தியில் 3% வீதமாகும். அபிவிருத்திக்குப் பின்னர், மிக அண்மைக்காலத்தில் இந்த 3% சந்தைப் பங்கு வீதமானது 5% மாக உயர்வடையும்.

வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி சுயநிதியிடும் மற்றும் இலாபமீட்டும் ஒரு நிறுவனமாகும். அத்துடன் பாரிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அரச உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றது.

**2014 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான முன்னேற்றம்**
**சொந்த நிதி (இலாபம்) மூலமான அபிவிருத்தி செயற்பாடுகள்**

| செயற்பாடுகள் | பௌதீக முன்னேற்றம் | ஒதுக்கீடு ரூபாய்களில் | செலவு ரூபாய்களில் |
|---|---|---|---|
| அ) நீர்ப்பம்பி வீடு அபிவிருத்தி வேலை | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | 542,000 | 542,544 |
| ஆ) பிறைன் உள்ளிழுத்தல் இறைக்கும் மையம் | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | 61,000 | 53,505 |
| இ) சுவர் பிளேட் வரையான அயடின் இடும் வயர் வலை மூடி | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | 13,600 | 13,600 |
| ஈ) ஆழமான தாங்கியைச் சுற்றி றப்ல் பிச்சின்ங் இடல் இல 01 | வேலை நடைபெறுகின்றது. | 600,000 | 400,000 |
| உ) சீனனுஊ யைச் சுற்றி றப்ல் பிச்சின்ங் இடல் இல 1 மற்றும் 2 | திட்டமிடல் நடைபெறுகின்றது. | 200,000 | 198,000 |
| மொத்தம் | | 1,416,600 | 1,197,649 |

*மூலம்: வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி*

**விற்பனை மற்றும் உற்பத்தி முன்னேற்றம்**

| துறை | இலக்கு (மெற்றிக்தொன்) | அடைவு (மெற்றிக்தொன்) | குறிப்பு |
|---|---|---|---|
| உற்பத்தி | 5500 | 6099.60 | சாதகமான காலநிலை மற்றும் ஊழியர்களின் கடுமையான உழைப்பு காரணமாக உற்பத்தி வெற்றியளித்தது. |
| விற்பனை | 6229 | 4255 | போட்டியாளர்களின் ஊடுருவல் காரணமான விற்பனை இலக்கு சற்று குறைவடைந்தது. |

*மூலம்: வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி*

**வருமான முன்னேற்றம்**

| | | | |
|---|---|---|---|
| வருமானம் | ரூபா. 74,848,810 | ரூபா. 44,477,818 | திட்டமிட்ட தொகையை விட விற்பனை விலை குறைவடைந்துள்ளது. |
| பெறுமதி சேர்ப்பு | - | ரூபா. 31405 | பொதியிட்ட உப்புக்கான SLSI கணக்காய்வுக்காக ரூபா. 31405 செலவிடப்பட்டுள்ளது. |

*மூலம்: வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி*

# தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை

**அறிமுகம்**

2006ம் ஆண்டு 17ம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ், இது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாண்மையாளர்களை ஊக்குவிக்க, உதவுவதற்கு மற்றும் ஊக்கப்படுத்துவதற்கு விசேடத்துவத்தை வழங்குவதற்காக தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை நிறுவப்பட்டது.

**குறிக்கோள்கள்**

- இலங்கையினுள் சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியினை அபிவிருத்தி செய்தல், ஊக்குவித்தல், மேம்படுத்தல் மற்றும் அதற்கான வசதிகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் பொருளாதார விருத்தி, பிரசாரணம், அபிவிருத்தி என்பனவற்றை உறுதிசெய்தல்.
- இச்சட்டத்தின் இலக்கினை எட்டுவதன் மூலம் தேசிய வியாபார நடவடிக்கைகளை பூகோளமயமாக்கி, வெளிநாட்டுச் சந்தையினை வெற்றிகொள்வதற்காக உருவாக்கப்பட்ட வியாபாரத்தை இலங்கைக்கு வெளியில் உருவாக்குதல், அதற்கான முன்னெடுப்புகளை ஊக்குவித்தல் மற்றும் தூண்டுதல்.
- பொருத்தமான கொள்கைகளை திட்டமிடுதல், மற்றும் விருத்தி செய்வதனை நோக்காகக்கொண்டு கைத்தொழில் மற்றும் விவசாய நடவடிக்கையினை அபிவிருத்தி செய்வதற்கு பயனுள்ள வகையில் உதவி புரிதல் மற்றும் அந்நடவடிக்கைகளை மேம்படுத்தல்
- தொழில் முயற்சி அபிவிருத்தியின் ஒரங்கமாக தொழில்நுட்ப நிபுணத்துவமுள்ள மனித மூலதனத்தினை அபிவருத்தி செய்வதினூடாக மக்களின் முன்னேற்றத்திற்கு வழியமைத்தல்
- அபிவிருத்தியடைவதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்
- தேவையான நிதிவசதிகளுக்கான வழிவகைகளை உருவாக்கல்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளை ஊக்குவிப்பதற்காக தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியத்தினை தாபித்தல்.
- பிராந்தி ரீதியான பொருளாதார அபிவிருத்திக்கு வசதிகளை வழங்குதல்.

**சிறிய மற்றும் மத்திய தர தொழில்முயற்சியாளர்களுக்கான கொள்கைத் திட்டமிடல்கள் மற்றும் சிறிய மற்றும் மத்திய தர தொழில்முயற்சியாளர்களுக்கான அங்கீகரிப்புக்கான நிகழ்ச்சித்திட்டம்.**

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித்துறையை சார்ந்த பிரச்சனைகளைக் கண்டறிவதற்கான தொழில்நுட்பக் கருவி தேசிய தொழில்முயற்சி அதிகாரசபையினால் அபிவிருத்திசெய்யப்பட்டது. கிழக்கு மாகணத்தில் (திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை) உள்ள அபிவிருத்தி அலுவலர்களின் இயளலவினை கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சதிட்டம் நடாத்தப்பட்டது.

**தேசிய மட்டத்தில் மென்பொருளை வெளியிடுதல் நிகழ்ச்சித்திட்டம்.**

பாரம்பரிய அமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் இணைந்து சிறிய மற்றும் மத்தியதர தொழில்முயற்சி அதிகாரசபை கொள்கை வரைபினைத் தயாரித்தது.

**தொழில்முயற்சியாளர் விருது வழங்கும் வைபவம்.**

இலங்கையின் பொருளாதார அபிவிந்திக்கு உண்மையில் பங்காற்றிய, இந்த முயற்சியாண்மைகளை அங்கீகரிப்பதற்கு, பரிசில்வழங்குவதற்கு, ஊக்கப்படுத்தவதற்காக தேசிய தொழில்முயற்சி அதிகாரசபை தொழில்முயற்சியாண்மை விருது வழங்கல் விழாவினை ஒழுங்குசெய்கின்றது.

**விருது வழங்கலின் நோக்கம்.**

- பிராந்தியத்தில் திறமையுடைய தொழில்முயற்சியாளர்களை அடையாளம்கண்டு விருது வழங்கல்
- குறித்த மாகாணத்தில் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்ற தொழில்முயற்சியாளர்களுக்கு ஊக்குவிப்பு விங்கல்
- தொழில்முயற்சியாளர்கள் அவர்களது தொழிற்துறையில் நிறப்புத் தேர்சிசியடைவதற்குத் தூண்டுதல் வழங்குதல்

மாவட்ட வர்த்தக சம்மேளனங்கள் மற்றும் சிறிய கைத்தொழில் திணைக்களங்கள் என்பவற்றின் உதவியுடன், வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களின் இந்த விருது வழங்கும் விழாவினை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது. ஆனால் தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களின் இந்த விருது வழங்கும் விழா வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய இரண்டு (வடக்கு மற்றும் கிழக்கு) மாகாணங்களுக்குமான விழா 2015 ஆம் ஆண்டு நடைபெறும்.

**மாவட்ட மற்றும் பிராந்திய தொழில்முயற்சி மன்றங்களை நிறுவுதல் மற்றும் பலப்படுத்துதல்**

மாவட்ட மற்றும் பிராந்திய மட்டத்தில் உள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு வியாபார அபவிருத்தி சேவைகளை வழங்குவதற்காக மாவட்ட மற்றும் பிராந்திய தொழில்முயற்சி மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளது. அத்துடன் பிராந்திய தொழில்முயற்சி மன்றங்களை பிரதேச செயலக மட்டத்தில் நிறுவியுள்ளது.

2014ஆம் ஆண்டு தேசிய தொழில்முயற்சி அதிகாரசபை ஒவ்வொரு மாவட்டங்களிலும் மாவட்ட மற்றும் பிராந்திய தொழில்முயற்சி மன்றங்களை நிறுவியது. சிறிய மற்றும் மத்திய தர தொழில்முயற்சி அதிகாரசபை 14 மாவட்டங்களில் 34 பிரதேச செயலகப் பிரிவுகளில் மாவட்ட மற்றும் பிராந்திய தொழில்முயற்சி மன்றங்களை நிறுவியுள்ளது.

**தகவல்களை வெளியிடுதல்**
**தேசிய வியாபார அபிவிருத்தி சேவைகள் வழங்குனர் விபரக்கொத்து வெளியிடல்**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு வசதியளிப்பதற்காக, வியாபார அபிவிருத்தி சேவை விபரக்கொத்தினை மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் வெளியிட்டது.

**திரியட சவிய ரூபவாஹினி நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, மின்னியல் ஊடகத்தின் ஊடாக தொழில்முயற்சியாளர்களை அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தது. மின்னியல் ஊடகத்தின் ஊடாக விரைவாகவும் மற்றும் வினைத்திறனுடனும் வியாபாரத் தகவல்கள் மற்றும் வியாபார அறிவு தொழில்முயற்சியாளர்களை சென்றடையும். இந்த நிகழ்ச்சித்திட்டம் விடயஆய்வு, கள அவதானிப்பு மற்றும் விளம்பமைம் என்வற்றினை கலந்துரையாடல் வடிவில் வழங்குவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் இந்த நிகழ்ச்சி (30 நிமிடங்கள்) ஒளிபரப்பப்படுகின்றது.

**"கமட ஒபின வியாபார" நிகழ்ச்சித்திட்டம்**

**வடமாகாணத்தில் போட்டி மிக்க வர்த்தகம் மற்றும் முன்மொழிவுகளை அடையாளப்படுத்தல் தொடர்பான ஆய்வு**

பிராந்திய மட்டங்களில் தொழில் வழங்குனர் மற்றும் தொழிலாளர் தொடர்பான பாரிய மூலமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாண்மை காணப்படுகின்றது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இத்துறையானது தனது பங்களிப்பு மூலம் விரும்பத்தக்க மட்டத்தினை அடையவில்லை என்பது தெளிவாகும். தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை இது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. எனவே தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது "கமட ஒபின வியாபார" என்ற பெயரில் கிராமிய மட்டங்களுக்கு இத்துறையினை எடுத்துச்செல்லத் திட்டமிட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

1. LOCA/VCD முறைமை அல்லது வேறு உபாயங்கள் ஊடாக, வழங்கப்பட்ட புவியியல் பகுதிகளில் (மாவட்ட மட்டத்தில்) போட்டிமிக்க வர்த்தகத் துறை அபிவிருத்திக்காக போட்டிமிக்க வர்த்தக வாய்ப்புக்கள், பிரச்சினைகள் மற்றும் முன்மொழிவுகளை அடையாளம் காணல்.

2. துறைசார் விருத்தி முன்மொழிவுகள் மற்றும் தொழில் முனைவோர் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

**குறிக்கோள் மற்றும் விளைவு:**

இந்த ஆய்வறிக்கை (டுழுஊயு.ஃ.ஏஊனு அறிக்கை) தொழில் முனைவோர் மற்றும் வர்த்தக விருத்தி சேவை வழங்குனர்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். குறிப்பாக பிராந்திய மட்டத்திலே அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைப்பதற்கு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் அது அவசியமாகின்றது. 2014 இல், தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அம்பாந்தோட்டை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் இந்த ஆய்வுகளை ஆரம்பித்து 2015 இலும் தொடர்கின்றது.

**புதிய வியாபார உருவாக்கம் மற்றும் மாவட்ட மட்டத்தில் விரிவுபடுத்தல்**

இந்த நிகழ்ச்சித்திட்டம் நிதி நிறுவனங்களுடன் இணைந்து ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. பயன்பெறுநரின் வேண்டுகோளுக்கு அமைவாக தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படுகின்றது. நிதி உதவி உரிய வங்கியினால் வழங்கப்படும். 2014 ஆம் ஆண்டு, தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 660 பேருக்கு தொழில்நுட்ப மற்றும் 654 பயன்பெறுநர்களுக்கு அபிவிருத்தி பயிற்சிகளையும் வழங்கியது.

**தொழில்முயற்சி அபிவிருத்தியின் ஊடாக இலங்கை இளைஞர்களை அறிவூட்டல்**

**தொழில் பயிலுனர்களுக்கான தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

இந்த நிகழ்ச்சித்திட்டம், தொழில்கல்வி ∴ தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் பயிற்சியை முடித்து வெளியேறும் மற்றும் தொழில்முயற்சி திறனுடன் உள்ள தொழில் பயிலுனர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் தொழில்முயற்சியாண்மை இளைஞர்களை ஊக்குவிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் உதவுவதுடன், உலகளாவிய பொருளாதார சந்தர்ப்பங்களை பெற்றுக்கொள்வதற்கும் உதவும்.

வடமேல் மாகணத்தில் உள்ள சிறிய கைத்தொழில் திணைக்களத்தின் 34 தொழில் பயிலுனர்களுக்கும் மற்றும் மத்திய மாகணத்தில் உள்ள சிறிய கைத்தொழில் திணைக்களத்தின் 16 தொழில் பயிலுனர்களுக்கும இந்த தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தேசிய தொழில்முயற்சியாண்மை அதிகார சபையினால் 2014 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது

**பெண் தொழில்முயற்சியாளர் அபிவருத்தி நிகழ்ச்சித்திட்டம் (ருநுனீ)**

தேசிய தொழில்முயற்சியாண்மை அதிகார சபை பெண் தொழில்முயற்சியாளர்களை சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு பங்களிப்பினை வழங்குவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தியுள்ளது. இதன் நோக்கம் தொழில்முயற்சி அபிவிருத்தியின் ஊடாக கிராமத்துப் பெண்களை ஊக்குவித்தல் ஆகும்.

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை குருநாகல், கம்பஹா மற்றும் புத்தளம் மாவட்டங்களில் பெண்கள் கைப்பணி சங்கங்களை நிறுவியுள்ளது. ஹம்பாந்தோட்டையில் அடையாளம் காணப்பட்ட பெண்கள் குழுக்களைக்கொண்டு சங்கங்களை நிறுவியுள்ளது.

அத்துடன் தேசிய தொழில் முயற்சி சபை அடையாளம் கண்டுகொண்ட பெண் வியாபாரக் குழுக்களுக்கு பயிற்சியினை வழங்கியது. (1594 பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி மற்றும் 69 பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சி வழங்கப்பட்டது.)

**புவியியல் ரீதியான கொத்தணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை காணப்படும் கைத்தொழில் கொத்தணியினை அடையாளப்படுத்துவதுடன் குறித்ததொரு புவியியல் பகுதிகளின் பெறுமதித் தொடரினைப் பரிசோதிக்கின்றது. அதற்கிணங்க, கொத்தணியின் வியாபார செயற்பாட்டினை அதிரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறது. ஊயர் விருத்தி இயலளவினைக் கொண்டுள்ள கொத்தணிகள் தெரிவு செய்யப்பட்டு விடே

பொருளாதார வலயங்களில் அபிவிருத்தி செய்யப்படும். தற்போது தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மொறட்டுவ மரக் கொத்தணி, வடமேல் மற்றும் தென் மாகாண தும்புக் கொத்தணி, ஊவா மற்றும் வட மகாண கைப்பணிக் கொத்தணி, வடமாகாண இலகு பொறியியல் கொத்தணி, புத்தளம் மட்பாண்டக் கொத்தணி மற்றும் கைத்தறிக் கொத்தணி ஆகியவற்றினை அடையாளம் கண்டுள்ளது. எனவே இவ்வகைக் கொத்தணிகளை வி‘ே பொருளாதார வலயங்களில் அபிவிருத்தி செய்வதற்கு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

**குறிக்கோள்**

- சந்தைப்படுத்தல் இணைப்பினை நிறுவுதல்
- தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் பரிமாற்றம்
- தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி
- நிதியுதவி
- உட்கட்டமைப்பு விருத்தி

2014 ஆம் ஆண்டு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபையானது கீழ்க் குறிப்பிடப்படும் கொத்தணிகளுக்கான சேவைகளை வழங்கியது

| | |
|---|---|
| மோரட்டுவ மரத்தளபாடம் | தேர்ந்தெடுக்கப்பட்ட 25 தளபாடத் தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி வழங்கப்பட்டதுடன் இயந்திரங்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டன. |
| வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் தும்புக் கொத்தணி | தென் மாகாணத்திலுள்ள தும்பு ஆலையாளர்களுக்கு பாரம்பரிய நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. |
| மொணராகலைக் கைப்பணி | மோணராகலை மாவட்டத்திலுள்ள 03 தொழில் முயற்சியாண்மை அபிவிருத்திப் பயிற்சி அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் கைப்பணி மற்றும் ஆடை வடிவமைப்பு தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் 89 நபர்கள் பங்குபற்றினர் |
| வடமாகாண கைப்பணி | 02 தொழில் முயற்சியாண்மை நிகழ்ச்சித்திட்டங்கள் 58 கைப்பணி தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது |
| இலகு பொறியியல் - வடமாகாணம் | வடமாகாணத்தில் 02 தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 45 இலகு பொறியியல் தொழில் முயற்சியாளர்களுக்காக வழங்கப்பட்டது. |
| மட்பாண்டக் கொத்தணி – புத்தளம் | நலன்விரும்பிகள் பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது |
| கைத்தறிக் கொத்தணி | அனுராதபுரத்திலிருந்து 40 கைத்தறி நெசவாளர்களும், கேகாலையிலிருந்து 21 கைத்தறி நெசவாளர்களும், மன்னாரிலிருந்து 16 கைத்தறி நெசவாளர்களும், அம்பாறையிலிருந்து 24 கைத்தறி நெசவாளர்களும், முல்லைத் தீவிலிருந்து 18 கைத்தறி நெசவாளர்களும் கலந்துகொண்ட தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. |
| சுற்றுலாத்துறைக் கொத்தணி | சுற்றுலாத்துறையினை அடிப்படையாகக் கொண்ட சந்தை பற்றிய ஆய்வு மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் (இரண்டு பகுதிகள் அடையாளம் காணப்பட்டன) பிரேரணைகள் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சுக்கும் திறைசேரிக்கும் சமர்ப்பிக்கப்பட்டன. |
| இலகு பொறியியல் - கம்பஹா | இலகு பொறியியல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், இக்கைத்தொழில்துறையில் தற்போதுள்ள பிரச்சினைகள் இனங்காணப்பட்டன. |

**பிராந்திய மட்டத்தில் உள்ள சிறிய மற்றும் மத்தியதர தொழில்முயற்சியாளர்களுக்கான பிராந்திய உதவி சேவைகள் நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பல்வேறுபட்ட பிராந்தியங்களில் உள்ளவர்களுக்கு அவர்களில் தொழில்முயற்சியாண்மை, தொழில்நுட்ப அறிவு மற்றும் திறனை அபிவிருத்தி செய்வதற்காக இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களின் ஊடாக மாவட்ட மட்டத்தில் தொழில்முயற்சி அபிவிருத்தி சேவைகள் வழங்கப்பட்டது. அவர்கள் குறுகிய கால பயிற்சிகள் ( அவர்களின் தேவைக்கு

அமைவாக தொழில்முயற்சியாண்மை, சந்தைப்படுத்தல், தொழில்நுட்பம், புத்தகப் பதிவு மற்றும் கணக்கியல்), நிதியியல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்புள், வியாபார ஆலோசனைகள் மற்றும் ஏனைய வியாபார அபிவிருத்தி சேவைகளை வழங்கினர்.

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது. தற்போது பலர் உழைக்கும் நேக்குடன் தொழில்நுட்ப குறைபாட்டுடன் சிறு தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களை இனம்கண்டு இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

**நோக்கம்**

- கேள்விக்கேற்ப புதிய பொருட்களை உற்பத்தி செய்தல்
- தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தினை அதிகரித்தல்
- தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல்

2014 ஆம் ஆண்டு, இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களின் தேவைக்கேற்றவகையிலேயே ஏற்பாடு செய்யப்பட்டன. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 336 சிறுதொழில் முயற்சியாளர்களுக்காக 12 திறன் விருத்தி பயிற்சிகளை நடாத்தியுள்ளது.

**தேசிய நிகழ்ச்சிகள்**

**ஊதுபத்தி தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊதுபத்தி உற்பத்தியினை அபிவிருத்தி செய்வதற்காக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தியது. 2014 ஆம் ஆண்டு 745 ஊதுபத்தி தொழில்முயற்சியாளர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்பட்டது.

**தயட கிருள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, குருநாகலைச் சேர்ந்த 132 மலர்செய்கை தொழில்முயற்சியாளர்களுக்கும் மற்றும் புத்தளத்தைச் சேர்ந்த 34 கைப்பணி தொழில்முயற்சியார்களுக்கும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சியை வழங்கியது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, தென் மாகாண வியாபார அபிவிருதகி சேவைகள் கையேட்டினை அச்சிடுவதற்காக தென் மாகாண மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் தகவல்களை சேகரித்தது. அத்துடன் தயட கிருள நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1995 தொழில்முயற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

# புடைவைக் கைத்தொழில்துறை அபிவிருத்தி

**அறிமுகம்**

பிராந்தியத்தில் இலங்கை படைப்புத்திறன் மிக்கதும் மற்றும் போட்டியிடும் வல்லமையுள்ள புடவை மற்றும் ஆடை உற்பத்தியாளர்களைக் கொண்ட நாடாக மாற்றுதல் எனும் தொலைநோக்கத்துடன், புடவை கைத்தொழிற்துறை அபிவிருத்திப் பிரிவு, இந்த கைத்தொழிற்துறையில் குறிப்பிடத்தகு வகிபாகத்தையாற்றி தேசிய பொருளாரத்திற்கு தன் பங்களிப்பினை வழங்குகின்றது. கீழ் வரும் மூன்று கைத்தொழிற்துறைகள் இப்பிரிவின் கீழ் வருகின்றது.

- கைத்தறி கைத்தொழிற்துறை
- புடைவைக் கைத்தொழிற்துறை
- ஆடைக் கைத்தொழிற்துறை

**கைத்தறி கைத்தொழிற்துறை**

கைத்தறித்துறைக்கு நிதி, தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் வடிவங்களில் உதவிகள் வழங்கப்படுதல் வேண்டும் எனத் தெளிவாக குறிக்கப்பட்ட "மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு" எனும் அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக, நிலையான கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றது. அதனால், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு, கைத்தறித்துறையின் நிலையான அபிவிருத்திக்கு அவசியமான வியபார மாதிரியினை வரைவதற்காவும் அதிலுள்ள பிரச்சனைகளை அடையாளம் காண்பதற்காகவும் இலக்குக் குழுவை நியமித்துள்ளது. இலக்குக் குழு சந்தைப்படுத்தல், பயிற்சி, வடிவமைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சியாண்மை போன்ற முக்கிய பரப்புகளை ஆராய்கின்றது. இலக்கு குழுக்களின் விதப்புரைக்கு அமைவாக உபாயமார்க்கங்கள் மற்றும் நிகழ்சிசத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, கைத்தறித்துறையின் அபிவிருத்திக்காக, புடவை கைத்தொழிற்துறை திணைக்களம், இலங்கை புடவை மற்றும் ஆமை நிறுவனம், கைத்தறி கூட்டுறவுச்சங்கங்கள் மற்றும் மாகாண சபைகளின் ஊடாக அமுல்படுத்துகின்றது.

**கைத்தறிக் கிராமங்கள், தறிகளை மீள் இயக்குதல், மனித வள அபிவிருத்தி**
**கைத்தறிக் கிராமங்களை உருவாக்குதல்**

இந்த கருத்திட்டத்தை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சுடன் இணைந்து புடவைக் கைத்தொழிற்துறைத் திணைக்களம் அமுல்படுத்துகின்றது. இக்கருத்திட்டம் நவீன தோற்றத்துடன் அரச தனியார் பங்களிப்புடன் குடிசைக் கைத்தொழில் எனும் கருப்பொருளுடன் அறிமுகப்படுத்தப்படுகின்றது. அதன் போது குடும்பங்களினால் மேற்கொள்ளப்படும் தொழில்முயற்சிகள் நவீன குடிசைக் கைத்தொழிலாக செயற்படுத்தப்படுகின்றது. இங்கு குடும்ப அடிப்படையிலான தொழில்முயற்சியாண்மைகள் குடிசைக் கைத்தொழிலாக இணைப்படுகின்றது. இதில் அரசாங்கத்தன் கருதுகோளாக அமைவது, கைத்தறிக் கிராமங்களை உருவாக்குவதற்கான ஆரம்ப உதவிகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கி, அதன் பின்னர் தனியாக முகாமைப்படுத்தக்கூடிய குடிசைக் கைத்தொழிலாக மாற்றுவதாகும். நெசவுச்சாலைகளில் தற்போதுள்ள ஊழியர்களுக்கு நெசவு இயற்திரங்கள், மூலப் பொருட்கள் மற்றும் துணைப் பொருட்களையும் வழங்குவதோடு, தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திக்கான பயிற்சிகளை வழங்கி அவர்களை நுண் மட்ட தொழில்முயற்சியாளர்களாக உருவாக்குவதற்கு ஊக்குவித்தலே இந்த கருதுகோளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சினால், ரூபா 12 மில்லியன் புடவைக் கைத்தொழிற்துறை அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டம் மாத்தளை மாவட்டத்தின் அம்பன்கஹகோரளை, வில்கமுவ, நாவுல மற்றும் லக்கல பிரதேசங்களில் அமுல்படுத்தப்படுகின்றது.

**நெசவு நிலையங்களில் உள்ள பயன்படுத்தப்படாத தறிகள் மற்றும் உதிரிப்பாகங்களை மீள இயக்குதல் மற்றும் புதிய தறிகளையும் உதிரிப்பாகங்களையும் வழங்குதல்**

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம், நெசவாளர்களின் நியமத் தரத்தை உயர்த்துதல் ஆகும். வழங்கப்பட்ட தறிகள் மற்றும் உபகரணங்களை மீள் இயக்குதலுக்கான தேவைகள் ஊவா மாகாணத்தில் 2014 ஆம் ஆண்டு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டது.

**மனித வள அபிவிருத்தி**

கைத்தறி நெசவாளர்களின் தரத்தினை மேம்படுத்துவதற்காக பண்ட பன்முகப்படுத்தல், நூல் சாயமிடுதல் மற்றும் கைத்தறிப் பொருட்களில் வர்ண இணைப்பு என்பவை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டது. உற்பத்தியாளர்களை பெறுமதி சேர் பொருட்களை உற்பத்தி செய்து அதன் மூலம் சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்காக பண்ட பன்முகப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்த்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 70 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டதுடன் மற்றும் கைத்தறி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 15 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கப்பட்டது.

- கைத்தறி சேவை நிலையங்கள் மற்றும் கைத்தறி உட்கட்டமைப்பு

**கைத்தறி கைத்தொழிற்துறைக்கு சேவைகளை வழங்கும் பிராந்திய சேவை நிலையங்கள்**

கைத்தறி கைத்தொழிற்துறையின் கீழ் வரும் அனைத்து சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் கொண்டுவருதல், பிராந்திய கைத்தறி சேவைகள் நிலையங்கள் கைத்தறி கைத்துறையாளர்களுக்கு தரமான சேவையை வழங்கல் எனும் கருப்பொருளின் கீழ் இது மேற்கொள்ளப்படுகின்றது. பயிற்சிகளை வழங்குவதற்கான வசதிகள், அப்பிரதேச கைத்தறி நெசவாளர்களின் பொருட்களைக் காட்சிப்படுத்துதல், நவீன வசதிகளுடன் சாயமிடும் வசதிகள் என்பன வட மேற்கு மாகாணத்தில் அமைந்துள்ள பொல்காஹவெலவில், மத்திய மாகாணத்தில் ஹாரகமவில் மற்றும் கிழக்கு மாகாணத்தில் பாலமுனை (நிர்மாணிக்கப்படுகின்றது) நிலையங்களில் கிடைக்கப்பெறுகின்றது. இந்த நிலையங்கள் பயிற்சி, திறன் இற்றைப்படுத்தல், வடிவமைப்புகளில் தாக்கம், பண்ட அபிவிருத்தி என்பவற்றை தனியார் துறை மற்றும் மாகாண சபைகள் மற்றும் தொழில்முயற்சியாண்மைகள் என்பவற்றுக்கு வழங்குகின்றது.

**கைத்தறி உட்கட்டமைப்பு அபிவிருத்தி**

கைத்தறி கைத்தொழிற்துறையில், கிடைக்கப்பெறும் வளங்களுடன் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை திருத்தவதன் மூலம் மற்றும் தரமுயர்ந்த உற்பத்தி இயலளவினை மேம்படுத்துவன் மூலம் உற்பத்தித்திறனை உச்சப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நியகம மத்திய நிலையத்திந் புதுப்பித்தல் பணிகளுக்காக 2014 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நடவடிக்கைகள்**

கைத்தறி உற்பத்திகளுக்கு சிறந்த சந்தை வாய்ப்புகளை வழங்குவதற்கு உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களை இற்றைப்படுத்துவதற்கும் மற்றும் கைத்தொழிற்துறையின் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தல் எனும் நோக்கங்களுக்காக அமைச்சு சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை இணைத்துக்கொண்டது. வேறுப்பட்ட அளவிலான சந்தைகளை பல்நோக்கப்பட்ட அணுகுமுறை உபாயமார்க்கத்தைப் பயன்படுத்தி ஆக்கதிறன் மிக்க கைத்தறித் துணிகள் மற்றும் பொருட்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொள்வானர்களிடம் பிரபல்யப்படுத்துவதற்காக தேசிய மற்றும் மாகாண ரீதியிலான கண்காட்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்டது. கைத்தறிக் கிராமங்களில் உள்ள பொருட்களுக்கு சிறந்த சந்தை வாய்ப்பை வழங்குவதற்காக கொள்வனவாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு இடையிலான வலையமைப்பு ஒழுங்குசெய்யப்பட்டது.

**புடவைக் கைத்தொழிற்துறை**

**வலு செயற்தின் (SLITA) உட்பட புடவைக் கைத்தொழறிதுறைக்கான உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் (PIP)**

உலகச் சந்தையின் போட்டியை எதிர்கொள்ளத்தகுந்த வகையில் புடவைக் கைத்தொழிற்துறையினரின் உற்பத்திதிறனை மேம்படுத்துவதற்காக அக்கைத்தொழிற்துறையின் உற்பத்தித் திறன் மற்றும் வலு செயற்திறன் என்பவற்றை உயர்த்துதல் எனும் நோக்கத்துடன் இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் PIP கீழ் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் தொழிற்சாலைகளிடமிருந்து விண்ணப்பங்கள் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் செய்தித்தாளின் ஊடாக கோரப்பட்டது. PIP நிகழ்ச்சித்திட்டத்திற்கான செயற்திட்டம் தயாரிக்கப்பட்டது. புடவைத் தொழிற்சாலைகளுக்கான வலுச்சக்தி செயற்திறன் நிகழ்ச்சித்திட்டம் முன்னோடித் திட்டமாக அமுல்படுத்தப்படும்.

அரசாங்க நிறுவனங்களுக்கு சீருடைகளை விநியோகித்தல்

உள்நாட்டு புடவைக் கைத்தொழிற்துறையினை மீளப்புதுப்பிக்கும் எண்ணத்துடன், உள்நாட்டு புடவைப் பங்கீட்டுக் குழுக்களின் ஊடாக முப்படையினர், பொலிஸ் திணைக்களம், விசேட அதிரடிப் படையினர், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம் மற்றும் தேசிய படையினர் பயிற்சிக் கல்லூரி என்பவற்றிற்கான சீறுடைகளை வழங்குவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

முப்படையினர், பொலிஸ் திணைக்களம், விசேட அதிரடிப் படையினர், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம் மற்றும் தேசிய படையினர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு அவசியமான சீருடைத் துணிகள் - 2014

| வகை | விநியோகிக்கப்பட்ட அளவு (மீற்றர் / அலகு) | பெறுமதி (ரூபா. மில்லியன்) |
|---|---|---|
| முப்படையினர், பொலிஸ் திணைக்களம், விசேட அதிரடிப் படையினர், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம் மற்றும் தேசிய படையினர் பயிற்சிக் கலலு் ாரிகளுக்கு அவசியமான சீருடைத் துணிகள் | 3,335,500 மீற்றர்கள் | 1,196.7 |
| ஏனையவை | 1,947,500 அலகுகள் | 687.2 |
| மொத்தம் | | 1882.9 |

*மூலம்: புடைவைக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு*

**ஆடைக் கைத்தொழிற்துறை**

ஆடைக் கைத்தொழிற்துறையானது, ஏற்றுமதி வருமானத்தை வழங்கும் முக்கிய துறையாகும். இது சர்வதேச சந்தைகளின் ஏற்படும் மாற்றங்களின் நேரடிச் செல்வாக்குக்கு உட்படுகின்றது. உள்நாட்டு ஆடை உற்பத்தியாளாகள், உலகப் போட்டித் தன்மையை சமாளிப்பதற்கு எற்ற வகையில் புதிய பொருட்களை அபிவிருத்தி செய்தல் வேண்டும் என மகிந்த சிந்தனையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டள்ளது. இந்நோக்கத்துடன், மனித வள அபிவிருத்தி, உற்பத்தித்திறன் மற்றும் தர மேம்படத்தல் என்பவற்றுக்கான உபாயமார்க்கங்களை இலங்கை புடவை மற்றம் ஆடை நிறுவனம் (SLITA) மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட ஆடை சங்க பேரவை (துயுயுகு) என்பவற்றுடன் இணைந்து தயாரிக்கின்றது.

**வலுச்சக்கி செயற்திறன் உட்பட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி ஆடைத் தறையினருக்கான உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் (ளுடுஜவுயு)**

2006ம் ஆண்டிலிருந்து சிறிய மற்றும் நடுத்தர ஆடைக் கம்பனிகளுக்கு உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் இலங்கை ஆடை மற்றும் புடவை நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு அவர்களின் உற்பத்தி செயற்திறனை அதிகரித்தல், அவசியமான தர மட்டத்தைப் பராமரித்தல் மற்றும் ஆடைகளை தயாரிக்கும் பொழுது வலுவை சிறந்த முறையில் பயன்படுத்தல் தொடர்பாக ஆலோசனைகளை இலங்கை ஆடை மற்றும் புடவை நிறுவன வழங்குகின்றது. இதற்காக கைத்தொழில் மற்றும்

வணிக அமைச்சு ரூபா 7 மில்லியனை 2014ம் ஆண்டு ஒதுக்கியுள்ளது. இதன் கீழ், சிறிய மற்றும் நடுத்தர ஆடைக் கம்பனிகளில் உள்ள உற்பத்தி செயற்திறனை அதிகரிப்பதற்கு உற்பத்தி அலுவலர்களை அபிவிருத்தி செய்தல் எனும் நோக்கத்துடன் 2006 இலிருந்து 84 சிறிய மற்றும் நடுத்தர ஆடைக் கம்பனிகளுக்கு வசதிகள் அளிக்கப்பட்டது. அத்துடன் இலக்குக் குழுக்களின் போட்டித்தன்மையை அதிகரிப்பதன் முலம், ஒரு நிமிடத்திற்கான உற்பத்திச் செலவைக் குறைத்து தொழிற்சாலைகளின் இலாபத்தை அதிகரித்தல்ஒரு நிமிடத்திற்கான ஆகுசெலவைக் குறைப்பதன் முலம் தொழிற்சாலையின் இலாபத்தினை அதிகரிக்க முடியும் என்பதாகும். இதன் கீழ், 06 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி ஆடைக் கைத்தொழிற்சாலைகளுக்கு நிறுவனப் பயிற்சி நிகழ்சிகள் நடாத்தப்பட்டது இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் செயற்திறன் மேம்பாடு, தர நியமங்களில் மேம்படுத்தல், ஆகுசெலவு குறைப்பு, துாய தொழிற்சாலைகள், ஊழியர்களின் நடத்தையை கட்டியெழுப்பமல் மற்றும் தொழில்சாலையில் வலுச்சக்தியை சேமிப்பதன் மூலம் மின்சாரக் கட்டணத்தைக் குறைத்தல் என்பவற்றை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

**சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி ஆடைத் தறையினருக்கான திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

2008 ஆம் ஆண்டில் இருந்து கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் புடவை அபிவிருத்திப் பிரிவு, இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்துடன் இணைந்து சிறிய மற்றும் நடுத்தர ஆடை தொழில்முயற்சியாளர் துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு ஆலோசனை மற்றும் பயிற்சி வழங்குகின்றது. 2014ம் ஆண்டும் சிறிய மற்றும் நடுத்தர ஆடை தொழில்முயற்சியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டது. விருப்பமான இதன் போது, சிறிய மற்றும் நடுத்தர ஆடை தொழில்முயற்சியாளர் துறையைச் சேர்ந்த 692 ஊழியர்களுக்கு 10 நிறுவனப் பயிற்சி நிகழ்சிகள் நடாத்தப்பட்டது.

**உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரதிவிம்பத்தினை மேலுயர்த்துதல் நிகழ்ச்சித்திட்டம் (JAAF)**

துயுயுகு என்பது இலங்கையின் ஆடை தயாரிப்பாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள், துணி மற்றும் உதிரிப்பாகங்கள் தயாரிப்பாளர்கள் ∴ வழங்குனர்கள் மற்றும் கொள்வனவாளர்களை உள்ளடக்கிய முழுமையான புடவை மற்றும் ஆடை கைத்தொழிற்துறையை பிரநிதித்துவப்படுத்தும் மிகவுயர்ந்த நிறுவனம் ஆகும். இது 07 ஏனைய சங்கங்களை களத்தில் கொண்டுள்ளது. இது 500,000 மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றும் 450 ற்கும் மேற்பட்ட ஆடை தயாரிப்பாளர்கள், கொள்வனவாளர் இல்லங்கள், உதிரிப்பாக உற்பத்தியாளர்களின் அங்கத்துவத்தினை கொண்டுள்ளது. ஒன்றிணைக்கப்பட்ட ஆடை சங்க பேரவையுடன் இணைந்து ஆடைக் கைத்தொழிற்துறை பற்றிய நேர்தறை பிரதிவிம்பம், உலகத் தரம்வாய்ந்த உற்பத்தியாளர்களை உருவாக்கல், இலங்கையை ஆடை விநியோகத்தின் உச்ச நிலைக்கு கொண்டுவருதல் என்பவற்றிற்காக கொள்வனவாளர்கள் மற்றும் உலக நுகாவர்கள் என்பவர்களுடன் இணையத்தளம், சந்தை நிகழ்வுகளின், மற்றும் மாநாடுகள் மற்றும் நேரடி சந்தைப்படுத்தல் என்பவற்றின் உடாகசர்வதேச சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் பிரதிவிம்பத்தினை கட்டியெழுப்பல் நிகழச்சித்திட்டத்தினை நாடாத்தியது. அத்தோடு, தயட கிருள நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றல், ஊழியற்களுக்கான நலன்புரி நடவடிக்கைகள் என்பவற்றின் ஊடாக பொது மக்களிடையே சிறந்த பிரதிவிம்பத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளது.

**ஆடைசார் குடிசைத் தொழிற்சாலைகளை நிறுவுதல்**

இந்தப் பிரதேசங்களில் இருக்கும் 3400 ற்கு மேற்பட்ட குடிம்பங்களின் வாழ்க்கைத் தரத்திற்கு உதவுவதற்கு ஆடைசார் குடிசை தொழிற்சாலைகளை நிறுவுதல். இந்தக் கருத்திட்டத்தின் நோக்கம் கைத்தறித்துறையினை கிராம மட்டங்களுக்கு கொண்டு செல்வதன் மூலம் கிராம மட்டப் பொருளாதாரத்தை உயர்த்துவதாகும். ஆடைக் கைத்தொழிற-துறையாயனது மனித வலு கைத்தொழிற்துறையாவதுடன், இது திறன் மிகுந்த ஊழியர்களை தக்கவைப்பதில் காணப்படும் சவால்களுடன் 40மூ வீத ஏற்றுமதி

வருமானத்தைப் பெற்றுக்கொள்கின்றது. மனிதவலுக் கிடைக்கும் பிரதேசங்களில் ஆடைத் தொழிற்சாலைகளை மீள நிறுவுவதன் மூலம் கைத்தொழிற்துறையை நிலைத்திருக்கச் செய்ய முடியும். இந்தக் கருத்திட்டம் பிரதேச செயலகப் பிரிவுகளின் ஊடாக அமுல்படுத்தப்படுகின்றதுடன் இதற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், பொருத்தமான மாவட்டத்தின் அரச அதிபர்களுக்கு இப்பணம் விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் இன்னொரு நோக்கமாக அமைவது, உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கு உடனடி ஆடைகளை தயாரிப்பதாகும். இதன் கீழ் வடக்கு மாகாணத்தில் உள்ள பல மாவட்டங்களில் பாரிய மட்டத்தல் அதிகளவு ஆடை தொழிற்சாலைகள் நிறுவுப்பட்டுள்ளதுடன். இது கைத்தொழிற்துறைக்கு மனித வலுவை வழங்குகின்றது.

**சேவைகள்.**

- 20 கைத்தொழிற்சாலைகள், 02 ஆடை ஏற்றுமதி தொடர்பான காரியாலயத்தையும் மற்றும் ஆடைகளை கொள்வனவு செய்யும் காரியாலங்களையும் பதிவு செய்தல், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு 18,000 மூலச் சான்றிதழ்களை வழங்குதல்.

- உற்பத்தி அலகுகளை கண்காணித்து, அவற்றின் தரவுகளைப் பேணுதல்.

- அமைச்சில் பதிவு செய்த கைத்தொழிற்சாலையாளர்களுக்கு அவசியமான, இயந்திர, உதிரிப்பாகம், அரை முடிவுப்பொருள், சாயம் மற்றும் இரசாயனப் பொருட்கள், மூலப்பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் இறக்குமதியின் போது சுங்கத்தீர்வையினை வழங்குதல்.

- கொள்வனவுக் காரியாலயம், கொள்வனவுத் தொடர்புபடுத்தல் காரியாலயம் மற்றம் ஆடைத்தொழிற்சாலைகள் என்பவற்றில் பணிபுரியும் 43 வெளிநாட்டு பதவிநிலையினர் மற்றும் தொழில்நுட்பவியலாளர் என்பவர்களுக்கான வீசா சிபாரிசினை வழங்குதல்.

- மூலப்பொருட்கள், உதிரிப்பாக மீள்ஏற்றுமதிக்கான சிபாரிசினை சுங்கத்திற்கு வழங்குதல்.

- புடவை மாற்றீடு மற்றும் உப ஒப்பந்தங்களுக்கான சிபாரிசினை வழங்குதல்.

- விரோதிகளின் பார்வையில் இருந்து மறைக்க உதவும் சாதனங்களை பயன்படுத்தவதற்கான சிபாரிசினை பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்குதல்.

இப்பிரிவு, ஏற்றுமதியளர்களின் நேரம் மற்றும் வள வீணாக்கலைத் தவிர்ப்பதற்காக. ஏற்றுமதி ஆவணப்படுத்தல் நடைமுறையினை இலகுவாக்குவதற்காக, இலங்கை சுங்கத்துடன் இணைந்து யுளுலுஊருனுயு முறைமையின் கீழ் ஆடை ஏற்றுமதி ஆவணங்கள் முறைமையினை ஒன்லைன் ஊடாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**2014 டிசெம்பர் வரை ஏற்றுமதிப் பிரிவினால் அனுமதி வழங்கப்பட்ட ஏற்றுமதிகள்**

| துறை | அலகுகள் /மீற்றர்கள் | ஆடைகள் அளவு | பெறுமதி (அமெரிக்க டொலர்கள்) |
|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்கள் | அலகுகள்<br>மீற்றர்கள் | 76,308,735<br>26,296 | 34,606,798.83 |
| பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்கள் | அலகுகள்<br>மீற்றர்கள் | 1,360,646<br>4,105,485 | 4,589,277.76 |
| மொத்தம் | அலகுகள்<br>மீற்றர்கள் | 77,669,381<br>4,131,781 | 39,196,076.59 |

*மூலம்: புடைவைக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு*

# புடைவைக் கைத்தொழில் திணைக்களம்

## அறிமுகம்

இலங்கை யாப்பின் 13ம் திருத்தச் சட்டமூலத்தின்படி கைத்தறி நெசவுக் கைத்தொழிற்துறை விடயமானது மாகாண சபைக்குரியதாகும். அதன்படி புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குரிய பணியாக அமைவது, இவ்விடயதிற்குரிய கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதும், மாகாண சபைக்குரிய நெசவுப்பிரிவுடன் இணைந்து கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்குரிய சேவைகளை வழங்குதலாகும்.

## செயற்பாடுகள்

- கைத்தறி நெசவுக் கைத்தொழிலுக்கான கொள்கைகளை உருவாக்கல்.
- உற்பத்தி அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட கொள்கைகளை வகுத்தல்.

## நிகழ்ச்சித்திட்டங்கள்

- வடிவமைப்பு வழங்கல் நிகழ்ச்சித்திட்டம்.
- பயிற்சி வழங்குனர்களை பயிற்றும் நிகழ்ச்சித்திட்டம்.
- நெசவுக் கைத்தொழில் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
- நெசவுக் கைத்தொழில் மாணவர்களை ஆளுமை ரீதியில் விருத்தி செய்வதற்கான தலைமைத்துவப் பயிற்சி நெறிகளை நடாத்துவதன் மூலம் எதிர்காலத்தில் அவர்களை சிறந்த தொழில் முயற்சியாளர்களாக்குதல்
- கைத்தறி நெசவுத் தொழிற்துறையின் அபிவிருத்திக்கு அவசியமான ஆலோசனையாளர்களையும், அலுவலர்களையும் பயிற்றுவித்தல்.
- இத்துறைக்கு அவசியமான ஊழியர்களை பயிற்றுவித்தல்
- விற்பனையை ஊக்குவித்தல் (உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விற்பனை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல்.)
- கைத்தறி நெசவினை விரிவுபடுத்துவதற்காக பொருத்தமான கருத்திட்டங்கள், சுய தொழில், உபகார சேவைகளை வழங்குதல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒழுங்குபடுத்தல்.
- தேசிய கைத்தறி நெசவின் வடிவமைப்பினையும், தரத்தினையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் கண்காட்சிகளையும் மற்றும் போட்டிகளையும் ஒழுங்கு செய்தல்.
- தேசிய கைத்தறி நெசவுக் கண்காட்சிகளை நடாத்துதல்.
- கைத்தறி நெசவினை விருத்தி செய்வதற்காக ஆராய்ச்சிகளையும் மேற்கொள்ளல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
- பொருத்தமான அபிவிருத்திகளையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்தல்

மேற்குறிப்பிட்ட குறிக்கோளினையெட்டுவதற்காக, தற்போது கீழ்வரும் நிறுவனங்கள் இத்திணைக்களத்தின் கீழ் தற்போது செயற்படுகின்றன.

**(2013 - செப்டெம்பர் 31வரையிலான முன்னேற்றங்கள்)**

- சிங்கள மொழி மூலமான 5 பயிற்றுவிப்பாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்
- இரண்டு கட்டிடங்களுக்கான புனர் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

- ரூபா 119.8 மில்லியன் நட்டஈட்டுக் கொடுப்பனவுத் திட்டத்தின் மூலம் 2785 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- 138 மாணவர்கள் பயிற்சிப் பாடசாலைக்கும், 16 மாணவர்கள் வடிவமைப்புப் பாடசாலைக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
- கைத்தறி நெசவுக் கைத்தொழில் கணக்கெடுப்புப் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன், வட மற்றும் மேல் மாகாணங்களின் 3 மாவட்டங்களைச் சேர்ந்த நெசவாளர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.
- 710 பேர் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இதிதிட்டத்தின் கீழ் மாணவர்களுக்கான பயிற்றுவிப்பாளர் நிகழ்ச்சித்திட்டக் கருத்தரங்கு மற்றும் கைத்தறி நெசவு நிகழ்ச்சித்திட்டம் என்பன நடாத்தப்பட்டன.
- பாலமுனையில் கைத்தறி நெசவு வடிவமைப்பு, சாயமிடல் மற்றும் விற்பனை நிலையமொன்றுக்கான கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவனம்

**அறிமுகம்**

2009 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம், 2009 ஜுன் 15ம் திகதியில் இருந்து செயற்பட ஆரம்பித்தது. இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் இலங்கையில் புடைவை, ஆடை, பாதணி மற்றும் அதனோடு சேர்ந்த கைத்தொழிற்துறையினரை பயிற்றுவிக்கும் முக்கிய நிறுவனங்களில் ஒன்றாகும்.அத்தோடு, பயிற்சிகளுக்கு மேலதிகமாக, ஆலோசனைச் சேவைகளையும் மற்றும் பௌதீக மற்றும் இரசாயனவியல் பரிசோதனைகள் மற்றும் ஆடைப் பரிசோதனைகளையும் மேற்கொள்ளுகின்றது. இந்நிறுவனம் புடவைத்துறை மற்றும் புடவைத் தொழில்நுட்ப முகாமைத்துவம் போன்ற துறைகளுக்கு நீண்ட கால, குறுகிய கால மற்றும் தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் பரிசோதனைக்கூடம் ஐளுழு 17025 சான்றிதழ் பரிசோதனைக்காக ஒத்தியல்புடையதாக்கப்பட்டுள்ளது.ஆடைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் (ஊஐவுஐ) மற்றும் புடவைத்தொழில் பயிற்சி மற்றும் சேவைகள் மத்தியநிலையம் (வுவு ரூ ளுஊ) இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனமாக ஒன்றிணைக்கப்பட்ட இத்தந்திரோபாயத்தினால் இருக்கும் மனித வளம், இயந்திரங்கள், நிலம் என்பனவற்றை உபயோகித்து வினைத்திறனுள்ள மற்றும் செயற்திறனுள்ள சேவையினை வழங்க முடிந்தது. அத்தோடு, ஆறு திணைக்களங்களை மீள் ஒழுங்குபடுத்தி நிறுவனத்தின் அமைப்பினை மீளமைப்பு செய்வதினால் வியாபார சவால்களில் இருந்து இலங்கை புடவை மற்றும் ஆடைகள் துறையினை காக்க முடியும். இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் மீளமைக்கப்பட்ட முகாமைத்துவத்தில் ஒவ்வவொரு அலகிற்கும் ஒவ்வொரு நபருக்கும் பொறுப்புகளும் அதிகாரங்களும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதனால், அதன் வியாபார தொடர்ச்சிக்கு வருமானத்தை உழைத்துக்கொள்ள முடியும்.

புதிய சட்டத்தில் உள்ளவாறு கீழ்வரும் குறிக்கோள்களை அடிப்படையாக் கொண்டு இலங்கை புடவை மற்றும் ஆடைத்துறையினை முன்னேற்றுதல் எனும் மிகப்பெரிய பொறுப்பு இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழிற்துறையின் நிரந்தர அபிவிருத்திக்கு நிபுணத்துவ சேவைகளை வழங்குதல்.
- புதிய தொழில்நுட்ப அபிவிருத்திக்கு ஏற்றவாறு புடவை மற்றும் ஆடை துறையினரின் அறிவினை விரிவுபடுத்தல்.
- தேசிய மற்றும் சர்வதேச புடவை மற்றும் ஆடை உற்பத்தியாளர்களுக்கு ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப சேவையினை வழங்குதல்.
- உள்நாட்டு கைத்தறி கைத்தொழிலுக்கு அவசியமான தொழில்நுட்ப அறிவினைப்பெற்றுக் கொடுத்தல்.
- ஆடை, கைத்தறி, பாதணி கைத்தொழிற்துறையில் பங்கேற்கும் கிராமிய சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு பல்வேறு வகையான தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக் கொடுத்தல்.

- தொழிற் கல்வியை வழங்குவதோடு முன்னோடியாக செயற்பட்டு தேசிய தொழில்

தரத்திற்கு ஏற்றவகையில் தொழிற்கல்வியை டிப்லோமா / பட்டக்கல்வி வரை இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவனத்தின் சேவைகளை விரிவுபடுத்தல்.

- இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவனத்தின் சேவையினை, சேவைகளை பெறுவோர்களுக்கு இலகுவாக கிடைக்கக் கூடிய வகையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலகினை வளப்படுத்தல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகினை நிறுவுதல்.

மேற்குறிப்பிட்ட குறிக்கோளுடன் இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவனம் புடவை மற்றும் ஆடைத்துறையில் பிரதான சேவை வழங்குனராகவும் பொருளாதார பலமுள்ள நிறுவனமாகவும் நீண்ட காலம் தொடர்ந்திருக்க எதிர்பார்க்கப்படுகின்றது.


**2014 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்**

| துறை | 2014 உண்மை நிலை | 2014 இலக்கு |
|---|---|---|
| நிதிச் செயற்பாட்டு வருமானம் (ரூபா மில்லியன்) | | |
| பரிசோதனை | 83.58 | 76 |
| பயிற்சியளித்தல் | 56.27 | 57.13 |
| ஆலொசனைச் சேவை | 1.14 | 6.9 |
| ஏனையவை | 28.49 | 15.62 |
| அரசாங்க வழங்கல் | - | 5 |
| வேறுபடும் வருமானம் | 19.6 | 19.95 |
| மொத்த வருமானம் | 189.1 | 180.6 |
| மொத்த செலவினம் | 142.9 | 133.6 |
| மேலதிகம் / பற்றாக்குறை | 46.22 | 47.54 |


| துறை | 2014 உண்மை நிலை | 2014 இலக்கு |
|---|---|---|
| பௌதீக செயற்பாடுகள் (எண்ணிக்கை) | | |
| பரிசோதனைகளின் எண்ணிக்கை | 65031 | 30000 |
| பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | 2520 | 1173 |
| பாட நெறிகளின் எண்ணிக்கை | 120 | 101 |

*மூலம்: இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவனம்*


**நிதி முன்னேற்றம்**




*மூலம்: இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவனம்*




*மூலம்: இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவனம*




*மூலம்: இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவனம்*

**புடைவை, ஆடைத் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவப் பயிற்சி**

புடைவை மற்றும் ஆடைத்துறை கடந்த 8 ½ மாதங்களாக சாதக வளர்ச்சியினைக் காட்டியதனால், 2014ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களினுள் பயிற்சி நடவடிக்கைகளும் வளர்ச்சினைக் காட்டுகின்றது. அத்தோடு, 100 கட்டமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக, இந்நிறுவனம் புதிய டிப்ளோமா கற்கைநெறிகள், கைத்தொழில் பொறியியல் டிப்ளோமா, நவநாகரீக வடிவமைப்பு மற்றும் பண்ட அபிவிருத்தி டிப்ளோமா கற்கை நெறியினையும் ஆரம்பித்துள்ளது. கட்டமைக்கப்பட்ட பிரதான நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ள முழு நேர டிப்ளோமா பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது, புடவை மற்றும் ஆடைத் துறையில் உள்ள மத்திய முகாமைத்துவ ஊழியர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யுமாறும் அபிவிருத்தி செய்யப்பட்டள்ளது. இக்காலப்பகுதியில், நீண்ட கால டிப்ளோமா கற்கைநெறிகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தவிலை, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் டிப்ளோமாதாரிகளை அங்கீகரித்து, அவர்களுக்கு புடவை மற்றும் ஆடை தொழில்நுட்பம் தொடர்பான பட்டக்கல்விகளை மேற்கொள்வதற்கான விலக்களிப்புகளை வழங்கியது.

டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு உள்வாங்கியவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் விளைவாக, நிறுவனம் பிரசித்திபெற்ற புடவை மற்றும் ஆடை நிறுவனங்களில், கற்கைநெறியினை பூர்த்திசெய்ததன் பின்னர் தொழில்களைப் பெற்றுக்கொள்வதற்காக,தொழில் திறப்பு நாளை டிப்ளோமாதாரிகளுக்கு ஒழுங்கு செய்தது.இக்காலப்பகுதியல், 82 நீண்ட கால கற்ககைநெறிகளும், குறுகிய கால மற்றும் விசேடமாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளும் 1840 பாடசாலை விட்டு நீங்கிள பங்குபற்றுனர்களுக்காகவும் கைத்தொழிற்துறைக்காவும் நடாத்தப்பட்டது. நீண்ட கால டிப்ளோமா கற்கைநெறி மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், இதில் ஒரு குழுவிற்கு 60 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன், இவர்கள் தங்கள் கற்கையினை நிறுவனத்தில் தொடர்வார்கள். நீண்ட கால பயிற்சிநெறிகளை ஆரம்பித்ததனால், கல்விசார் ஊழியர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஊழியர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கப்பட்டது. பயிற்சியில் இருந்து மொத்த வருமானமாக ரூபா 44.23 மில்லியன் பெறப்பட்டதுடன், இது கடந்த வருடம் இதே காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைக் காட்டுகின்றது.

**ஆடை சார்ந்த குடிசைக் கைத்தொழில் பயிற்சி**

ஆடை சார்ந்த குடிசைக் கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை 2014 ஒகஸட் மாதம் வட மாகாணத்தில் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் ஆரம்பித்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 97 புதிய தையல் நிலையங்கள் மன்னார் வவுனியா மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மன்னார் ளுடுஜஎயுஇ வின் கீழ் 74 பயிலுனர்கள் பயிற்சிக்கு சென்றதுடன், 28 பயிலுனர்கள்

இரத்தலானயில் அமைந்துள்ள SLITA நிலையத்திற்கு பயிற்சிக்கு வந்தனர்.

**புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழிலுக்கான பௌதீக மற்றும் இரசாயனவியல் பரிசோதனைகள்**

இலங்கை சான்றழிப்பு சபையின் அனுகூலத்தின்படி இவ்வாண்டும் ஐளுழு 17025 சான்றிதழ் பரிசோதனைகூடத்திற்கான சான்றளிப்பு தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் வருமானத்தைப் பெற்றுத்தரும் பரிசோதனை நடவடிக்கைகள் இவ்வருடம் வருமானத்தைப் பெற்றுத்தருவதில் கடந்த ஆண்டின் முதல் 8 ½ மாதங்களோடு ஒப்பிடுகையில் பிரதான இடத்தைப் பெற்றுக்கொண்டது. இது பொலிஸ், இராணுவம், கடற்படை, சிவில் பாதுகாப்பு, சிறைச்சாலை மற்றும் கல்வி அமைச்சு போன்ற அரச நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பரிசோதனைகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், தோல் மற்றும் பாதணிக் கைத்துறையினருக்கான தோல் மற்றும் பாதணிப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் பெறுபேறாக பரிசோதனை ஆய்வுகூடம் 39,212 பௌதீக மற்றும் இரசாயனப் பரிசோதனைகளின் மூலம் ரூபா 45.92 மில்லியனை உழைத்துக்கொண்டது

**ஆலோசனைச் சேவை**

தேசிய புடவை உற்பத்திக் கைத்தொழிலின் தரத்தினை உயர்த்துவதற்காக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சினால் நிதியளிக்கப்பட்ட, புடவை மற்றும் கைத்தறி கருத்திட்டத்திற்கு, அவற்றினை மீள் கட்டமைப்பு செய்வதற்காக புடவைக் கைத்தொழிற்துறை திணைக்களத்தின் உதவியுடன் அவசியமான தொழில்நுட்ப சேவை வழங்கப்பட்டது. இதன் கீழ் கிழக்கு மாகாணத்தில், பாலமுனையில் அமைந்துள்ள புடவை மற்றும் கைத்தறி கைத்தொழிற்துறைக்கு பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டது. அத்துடன், வட மாகாணத்தில் அமைந்துள்ள இரு ஆடை தயாரிப்பு கைத்தொழிற்சாலைகளுக்கான ஆலோசனைச் சேவைகள் நிறுவனத்தினால் பாரமேற்கப்பட்டுள்ளது.

**உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு, இலங்கை ஆடை ஏற்றுமதிச் சம்மேளனம், உள்நாட்டு ஆடை தயாரிப்பாளர் சங்கம் மற்றம் இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் என்பன சிறிய மற்றும் நடுத்தர புடவை மற்றும் ஆடைக் கைத்தொழிற்சாலைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு உதவும் உற்பத்தி திறன் மேற்படுத்தல் நிகழ்சித்திட்டத்தின் நலன் விரும்களாவர். பெப்ரவரி – ஒகஸ்ட் வரையான காலப்பகுதியில் 06 சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிற்சாலைகள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டதுடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் போட்டியிடுவதற்கு அவர்களின் தரம் மற்றும் வினைத்திறனை மேம்படுத்தவதற்காக இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தினால் ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், தயாரிப்பு மேற்கொள்ளப்படும் தரைகள் வினைத்திறனுடல் இல்லை எனும் பிரச்சனையை ஆலோசனையாளர்கள் வெளிப்படுத்தினார்கள். பயன்பெறும் தொழிற்சாலைகள் நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு 04 இலக்கு மைல்கற்களைக் கடக்கவேண்டியுள்ளதுடன், பயிற்சிக் காலத்தில் பயிற்சியினூடாக எவ்வாறு என அறிந்துகொள்ளும் தொழில்நுட்ப பரிமாற்றம் ஆலோசனையாளர்களினால்

மேற்கொள்ளப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் அனைத்து நலன்பிரும்பஜகளையும் உள்ளடக்கிய வழிகாட்டிக் குழுவினால் மீள்நோக்கு செய்யப்பட்டது. இரண்டாவது குழுவில் 08 சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிற்சாலைகள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2013 ஒகஸ்ட் மாதத்தில் இருந்து ஆலோசனைகள் வழங்கப்படுகின்றது. இதற்காகரூபா 7 மில்லியனை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு ஒதுக்கியுள்ளதுடன், இதில் ரூபா 5.8 மில்லியன் 2014 முதல் அரையாண்டுக்கு இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டது.

புடவை உற்பத்தி தொழிற்சாலைகளுக்கும் 2014 ஜுலை மாத்தில் உற்பத்தி திறன் மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2014 ஜுலை முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்கு இரு தொழிற்சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்காக அமைச்சு 3 மில்லியனை ஒதுக்கியுள்ளதுடன் இதில ரூபா 1. மில்லியனை இந்நிகழ்ச்சிக்காக நிறுவனம் பயன்படுத்தியுள்ளது

**ஆடைத்துறைக்கான திறன் அபிவிருத்தி பயிற்சித்திட்டம்**

உற்பத்தித் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் சார்ந்த விடயப் பரப்புகளில் மனித வளத்தின் திறனை மேம்படுத்துவதே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்காகும். கடந்த 8 ½ மாதங்களில், 10 உள்ளக மற்றும் நிறுவன பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் 692 பயிற்சியாளர்களை இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் பயிற்றுவித்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், தொழிற்சாலைகளின் பயிற்சித் தேவை கண்டறியப்படுவதற்காக, தொழிற்சாலைகளின் விருப்பத்துடன் வயடைழச-அயனந பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. இதன் போது உற்பத்தித்திறகை அதிகரிப்பதற்கு அவசியமான திறன் பிரச்சனைகள் அடையாளம் காணப்பட்டது. இதற்காக ரூபா 2.5 மில்லியனை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு ஒதுக்கியுள்ளதுடன், இதில் ரூபா 1.25 மில்லியன் 2014 முதல் அரையாண்டுக்கு இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டது..

**தோல் மற்றும் பாதணித் தயாரிப்பு தொழில்நுட்பப் பயிற்சி**

இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் தோல் மற்றும் பாதணி தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. நிறுவனத்தில் தோல் மற்றும் பாதணி தொழில்நுட்ப அலகினை நிறுவுவதற்கு அவசியமான 31 தோல் மற்றும் பாதணி இயந்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு ரூபா 15 மில்லயினை வழங்கியுள்ளது. இந்தப் பிரிவினை கௌரவ ரிசாத் பதியுதீன் அவர்கள் 19 மார்ச் 2014 அன்று திறந்துவைத்தார். அமைச்சின் அலுவலர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றினர். இப்பாட நெறிகளை நடாத்துவதன் நோக்கம் இலங்கையில் புடவை மற்றும் ஆடை உற்பத்தித் துறைக்கு ஒத்ததாக ஏற்றுமதி சந்தைகளைக் கவரும் வகையில் மத்தியதர தொழில்நுட்பம் கொண்ட நபர்களைப் பயிற்றுவித்தல். இந்நிறுவனத்தில் தோல் மற்றும் பாதணி தொழில்நுட்ப அலகினை நிறுவியதன் பின்னர் பாதணி வடிவமைப்புக் கற்கை நெறியினை 14 பேர் தொடர்வதுடன் கைத்தொழில் பொறியியல் மற்றும் தோல் பதனிடல் தொடர்பான இரண்டு கருத்தரங்குகளில் 41 கைத்தொழிலளர்கள் கலந்து கொண்டனர். இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் பதிய இயந்திரங்களைக் கொண்டுள்ளதுடன் இக்கைத்தொழிற்துறைக்கான பரிசோதனை சேவையினையும் வழங்குகின்றது.

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு**

2013ம் ஆண்டு ஜூன் மாதம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு நிறுவப்பட்டதுடன், ஆலோசனையாளின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பித்தல், ஊக்குவித்தல், மற்றும் பங்குபற்றல் மூலம் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு புடைவை மற்றும் ஆடை கைத்தொழிற்துறையில் உள்ள தொழிற்சாலைகளுக்கு அறிவினை வழங்குதல் ஆரம்பத்தில், இவ்வலகு இலங்கை முழுவதிலுமுள்ள புடவை, கைத்தறி மற்றும் ஆடை கைத்தொழிற்துறைகளிடமிருந்து தரவுகளைப் பெற்று, தரவுத் தளமொன்றை இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தினுள் நிறுவி, அலுவலகத் தேவைக்கான புள்ளி விபரங்களைப் பெற்றுக்கொள்ளும். அத்துடன் கைத்தொழிற்துறையின் வெளிவாரி நிபுணர்களுக்காக விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வணிகப் பிரிவு

# வர்த்தக திணைக்களம்

**அறிமுகம்**

வர்த்தக திணைக்களமானது இருதரப்பு, பிராந்திய மற்றும் பல்தரப்பு மட்டங்களில் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக கொள்கையினை வகுத்தல் மற்றும் அமுலாக்குதல் தொடர்பில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சிற்கான மதியுரை வழங்கும் நிறுவனமாக தொழிற்பட்டு வருகின்றது. இந்தப் பொறுப்புடமையானது,

- இலங்கையின் சுதந்திர/முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளின் பேச்சுவார்த்தைகள், தொழிற்படுத்தல்கள் மற்றும் கண்காணித்தல்,
- ஏனைய நாடுகளுடன் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக்களை செயற்படுத்துதல்,
- வெளிநாடுகளிலுள்ள வர்த்தக மன்றங்களுடன் தொடர்புடைய இலங்கையின் பல்வேறு வர்த்தக கொள்கைகளினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்

வணிகத் திணைக்களம், அரசாங்கத்தின் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான தொலைநோக்கு, நாட்டின் முழுமையான பொருளாதர வளர்ச்சிக்கு வழிவகுக்கக்கூடிய வர்த்தகம் தொடர்பாக வழங்கக்கூடிய பங்களிப்பு தொடர்பாக கருத்தில்கொண்டு அதன் நிகழ்ச்சதிட்டங்களை நிறைவேற்றுகின்றது. ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் போது, திணைக்களம் தற்போதுள்ள சர்வதேச வர்த்தகத்தைப் பிணைப்பை பலப்படுத்தல், புதிய சந்தை வாய்ப்புகளைக் கண்டறிதல், புதிய பொருட்களுக்கான ஊக்குவிப்பு, சர்வதேச வர்த்தகத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் வினைத்திறன் மிக்க பங்களிப்பு ஊக்குவிப்பு, தெற்காசிய வலயத்தில் இலங்கையை ஒரு கேந்திர நிலையமாக்கல் என்பன தொடர்பாக கவனத்தைக் கொள்கின்றது. கடல்கடந்த வர்த்தக பிரதிநிதித்துவத்தின் ஊடாக, வணிகத் திணைக்களம் அவசியமான தகவல்களை வழங்குவதுடன், அவசியமான வழிகாட்டல்கள் வழங்கல் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புக்கு வசதியளித்தல், வெளிநாட்டு நேரடி முதலீடு, பட்டியலிடப்பட்ட முதலீடு மற்றும் உல்லாசப் பயணம் என்பற்றை மேற்கொள்ளுகின்றது.

**2014 டிசெம்பர் 31 வரையான முன்னேற்றம்**

**ஏற்றுமதிச் செயற்பாடுகள்**

இலங்கைச் சுங்கத்திடமிருந்து கிடைக்கப்பெறும் தரவுகளுக்கு அமைவாக, 2014ம் ஆணடு திரட்டிய ஏற்றுமதி வருமானம், அமெரிக்க டொலர் 10,009.45 மில்லியன் இலிருந்து 11,044.38 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. 2013 காலப்பகுதியில் இது 10% சதவீதத்தை விஞ்சிய கருத்திட்ட அதிகரிப்பாகும்.

2014 ஆம் ஆண்டில் இந்தோ-ஸ்ரீலங்கா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (ISFTA), பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (PSFTA) போன்ற சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் (FTAs) மற்றும் தெற்காசிய சுதந்திர ஒப்பந்தம் (SAFTA), தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (SAPTA), ஆசிய பசுபிக் வர்த்தக ஒப்பந்தம் (APTA), பொதுவான முன்னுரிமை முறை (GSP), ஐரோப்பிய பொதுவான முன்னுரிமை முறை (EU-GSP), ஐக்கிய அமெரிக்க பொதுவான முன்னுரிமை முறை (US- GSP), வர்த்தக முன்னுரிக்கைக்கான பூகோள முறைமை (GSTP) போன்ற பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்கள்

என்வற்றின் ஊடாக பெறப்பட்ட ஏற்றுமதி வருமானம் கீழே அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளது.

**சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்கள் என்பவற்றின் கீழ் இலங்கையின் ஏற்றுமதி (பொறுமதி மில்லியன் அமெரிக்க டொலர்களில்)**

**அட்டவணை 1 :**

| ஒப்பந்தங்கள் | 2014 |
|---|---|
| இந்தோ-ஸ்ரீலங்கா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம; (ISFTA) | 375.80 |
| பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (PSFTA) | 51.78 |
| தெற்காசிய சுதந்திர ஒப்பந்தம் (SAFTA) | 1.73 |
| தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (SAPTA) | 1.18 |
| ஆசிய பசுபிக் வர்த்தக ஒப்பந்தம் (APTA) | 114.50 |
| பொதுவான முன்னுரிமை முறை (GSP) | 3,578.55 |
| வர்த்தக முன்னுரிக்கைக்கான பூகோள முறைமை (GSTP) | 13.11 |
| மொத்தம் | 6,150.65 |

*மூலம்: இலங்கைச் சுங்கம் வர்த்தக திணைக்களம்*

**முன்மொழியப்பட்ட சீனா- இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குவுயு**

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் வழிகாட்டலின் கீழ் வணிகத் திணைக்களம் முன்மொழியப்பட்ட சீன இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் அவசியமான தொழில்நுட்ப உள்ளீடுகளுடன் கூட்டு திரட்டிய சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கை, சட்ட ஒப்பந்த வரைவு மற்றும் தேவைப்பாடுகள் மற்றும் விருப்ப வழங்கல் பட்டியல் என்பவற்றை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

சீனா- இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேர்ச்சுவார்த்தைகள் சீன ஜனாதிபதி இலங்கை வந்திருந்த போது 2014 செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. 2 ஆம் கட்டப் பேர்ச்சுவார்த்தைகள் 2014 நவம்பர் மாதம் பீஜிங்கில் நடைபெற்றது.

**இலங்கை மற்றும் ஜப்பானுக்கு இடையிலான உள்ளக - அரசாங்க பொருளாதார கொள்ளைப் பேச்சுவார்த்தை**

இலங்கை மற்றும் ஜப்பானுக்கு இடையிலான உள்ளக - அரசாங்க பொருளாதார கொள்ளைப் பேச்சுவார்த்தையை தூதுக்குழு ஆரம்பித்துள்ளதுடன், இலங்கைக்கு செப்டெம்பர் மாதம் ஜப்பான் பிரதம மந்திரியின் வருகையுடன் வணிகத் திணைக்களத்தினால் கையொப்பமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

**கூட்டு ஆணைக்குழுக்கள்**

கூட்டு ஆணைக்குழுக்களின் கீழ்வரும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன:

- ஜனவரி மாத்த்தில் டெஹ்ரான் நகரில், ஈரான் மற்றும் இலங்கைக்கான 10 வது பொருளாதார கூட்டிணைப்பு தொடர்பான இணை ஆணைக்குழு கூட்டம் நடாத்தப்பட்டது.
- அரசாங்க பொருளாதார கொள்ளைப் பேச்சுவார்த்தை இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையிலான வர்த்தக, முதலீடு மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகள் தொடர்பான இருதரப்பு பேச்சுவார்த்தை ஜனவரி மாதம் புதுடில்லியில் நடாத்தப்பட்டது.
- பெப்ரவரி மாதத்தில் டாக்க நகரில் பங்களதேஃ நாட்டுடனான வர்த்தகம் தொடர்பான கூட்டு வேலைக் குழுவினரின் 1 ஆவது கூட்டம் நடாத்தப்பட்டது.
- பெப்ரவரியில், பகதாத் நகரில் ஈராக் மற்றும் இலங்கைக்கு இடையிலான பொருளாதார

மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான கூட்டு ஆணைக்குழுவின் 8 ஆவது கூட்டம் நடாத்தப்பட்டது.

- செப்டெம்பர் 14 - 15ம் திகதிகளில் டோஹா நகரில் பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகள் தொடர்பான இலங்கை மற்றும் கட்டாருக்கு இடையிலான முதலாவது கூட்டம் நடைபெற்றது.
- பெலாரஸ் மற்றும் இலங்கைக்கு இடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான கூட்டு வேலைக் குழுவினரின் 1 ஆவது கூட்டம் 2014 ஜுலை 10 ஆம் திகதி கொழும்பில் நடாத்தப்பட்டது.
- இலங்கை மற்றும் வியட்னாமுக்கு இடையிலான வர்த்தகம் தொடர்பான உப குழுக் கூட்டம் 2014 ஆகஸ்ட் 21 – 22 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
- வர்த்தக மற்றும் முதலீட்டு வேலைத்திட்ட உடன்படிக்கையின் கீழ் இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கு இடையிலான கூட்டு வேலைக் குழுவினரின் 11 ஆவது கூட்டம் 2014 ஒக்டோபர் 15 ஆம் திகதி கொழும்பில் நடாத்தப்பட்டது.
- வர்த்தகம், முதலீடு, சுங்க ஒத்துழைப்பு மற்றும் வாகனத்துறை தொடர்பான கூட்டு வேலைக் குழுவினரின் 1 ஆவது கூட்டம் 2014 ஒக்டோபர் 20 - 21 ஆம் திகதி பாகிஸ்தான் இஸ்லாபாத்தில் நடாத்தப்பட்டது.
- இலங்கை மற்றும் பங்களாதே"க்கு இடையிலான கூட்டு வேலைக் குழுவினரின் 2 ஆவது கூட்டம் 2014 செப்டம்பரில் நடாத்தப்பட்டது.
- இலங்கை மற்றும் கென்யாவுக்கு இடையிலான கூட்டு ஆணைக்குழுவினரின் 1 ஆவது கூட்டம் 2014 நவம்பரில் நடாத்தப்பட்டது.

**தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான பல்தத்துறை வங்காள விரிகுடா முன்மொழிவு (BIMSTEC)**

14 ஆவது BIMSTEC மூன்றாவது கூட்டத்தொடர் அமைச்சரவை சந்திப்புகள் மற்றும் 16 ஆவது BIMSTEC சிரேஸ்ட அலுவலர்களுக்கான கூட்டங்கள் நேய் பை டவ்வில் மார்ச் மாதம் நடைபெற்றது. BIMSTEC சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழான மறைப்பட்டடியலை இலங்கை நிறைவுசெய்தது.

**பல்தரப்பு வர்த்தக உறவுகள்**

- 2014 மார்ச் மாதம் கெழும்பில், இலங்கைக்கான தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் தொடர்பான உலக வர்த்த நிறுவனம் வர்த்த ஒருங்கிணைப்புகள் சுய மதிப்பீடு நடைபெற்றது.
- 2013 டிசம்பர் மாதம் இந்தோனேசியா பாலியில் 9 ஆவது உலக வர்த்தக நிறுவனத்தின் அமைச்சரவை ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டும் தொடரப்பட்டது.
- அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் கிடைக்ப்பெறும் வேறுபட்ட நெகிழ்ச்சித்தன்மை தொடர்பான விரிவான தகவல்கள் உள்ளடக்கி பதிப்புரிமைப் பணியை மொழிமாற்றம் செய்வதற்கு உலக புலமைச் சொத்துக்கள் நிறுவனத்தின் ஆலோசனையுடன், உலக வர்த்த நிறுவனம் மற்றும் உலக வர்த்த நிறுவனச் சட்டத்தின் (ACWL) உலக வர்த்தக நிறுவன ஆலோசனை மத்தியநிலையம், என்பன இலங்கை தேசிய புலமைச் சொத்துககள் அலுவலகத்துக்கு உதவின.

**வெளிநாடுகளில் உள்ள வர்த்தக அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய ஊக்குவிப்பு நடவடிக்கைகள்**

- 2014 ஜூன் 14 -17ம் திகதி வரை சவுதி அரேபியாவில் இலங்கை ரோட் ஷோவை நடாத்துவதற்கு கௌரவ ரிசாத் பதியுதீன், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரின் தலைமையில் முன் விஜயத்தை மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டது.
- இலங்கை சுங்கம் மற்றும் சீனச் சுங்கம் என்பவற்றுக்கிடையிலான சுங்க உபாயமார்க்க ஒத்துழைப்புக்கான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் தொழிற்பாட்டு மாதிரிகள் உட்பட பண்டங்கள் போக்குவரத்துகளின் போது non - manipulation சான்றிதழை வழங்குதல் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்துடுவதற்கான கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டது.
- சீனாவிற்கு இலங்கை வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வதற்கு ஞரயசயவெைநெ உடநயசயஉெந கோருவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.
- மெக்ஸிகோவில் தூய சிலோன் கருவாவைப் பதிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.
- இலங்கை அரசாங்கத்திற்கும் மற்றும் தென்னாபிரிக்கா அரசாங்கத்திற்கும் இடையிலான விமான சேவை ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான ஒழுங்குகள்.
- 2014 ஜூன் 22ம் திகதி தென் ஆபிரிக்க ஜோஹனஸ்பேர்க்கில் அப்ரோ-லங்கா பிஸ்னஸ் போரம் (Afro-Lanka Business Forum) மற்றும் வியாபார மட்ச்மேக்கிங் நிகழ்ச்சிகள் (Business Matchmaking) வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. இத்தூதுக்குழுவிற்கு கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கௌரவ பிரதி அமைச்சர் தலைமை தாங்கினார். இந்நிகழ்விற்கு 140 இற்கும் மேற்பட்ட கம்பனிகள் தென் ஆபிவரிக்கா, ஸம்பியா, சுவாசிலாந்து மற்றும் நமீபியா போன்ற நாடுகளில் இருந்து பங்குபற்றின.
- ஓகஸ்ட் 05 ஆம் திகதியில் இருந்து 12ம் திகதி வரையிலான பிரான்சுக்கான வர்த்தக மற்றும் முதலீட்டு தூதுக்குழுவின் 14 அங்கத்தவர்களின் விஜயத்தை வணிகத் திணைக்களம் ஒழுங்குசெய்துது. Cardete&Huet, Accenture, Vinci Construction போன்ற நன்கு அறியப்பட்ட கட்டட வடிவமைப்பாளர்கள் மற்றும் ஹொட்டல் அபிவிருத்தியாளர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.
- ஐரோப்பிய வணிகச் சம்மேளனத்தின் ஒருங்கிணைப்புடன், ஐரோப்பிய ஒன்றிய - இலங்கை வியாபாரக் கவுன்சில் மற்றும் ளுடுயுளுளுஊழுஆ-ஐவு.ீ.டீழு சங்கம் என்பன பெல்ஜியத்திற்கான தூதுப் பயணமொன்றை 2014 மே 26 -27 திகதி வரை ஒழுங்கு செய்தது. புருஸல்ஸில் உள்ள வணிக உத்தியோகத்தர், தூதுக் குழு வளம்மிக்க உற்பத்திகளை அடையளம் காண்பதற்கு துணைபுரிந்தார்.
- ஜூன் மாதம் 06ம் திகதியில் இருந்து 10 ஆம் திகதி வரை நடைபெற்ற 2 ஆவது சீன தெற்காசிய எஸ்போ கண்காட்சியில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணம், பட்டிக், கைவேலை, தும்பு, ஆயுர்வேத உற்பத்திகள் மற்றும் பரிசுப் பொருட்கள் துறைகளைச் சேர்ந்த 135 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் உட்பட இலங்கைக் கம்பனிகள் பங்குபற்றின.
- மே மாதம் ஜப்பானில் நடைபெற்ற மேற்கு ஜப்பான இறக்குமதி சந்தை – 2014 இல் 11 இலங்கைக் கம்பனிகள் பங்குபற்றின.
- ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம், லண்டன் பங்குப்

பரிவர்த்தனையுடன் இணைந்து இலங்கை மூலதனச் சந்தை தினத்தை லண்டனில் மே மாதம் 29 மற்றும் 30ம் திகதிகளில் கொண்டாடியது.

- வெளிநாடுகளில் உள்ள வணிக அலுவலர்களின் ஊடாக, கஹட்டகக காரீயம் மற்றும் மாந்தை உப்பு என்பவற்றின் காரீயம் மற்றும் உப்பு என்பவற்றை ஊக்குவிப்பதற்காக வெளிநாட்டு கொள்வானவாளர்களையும் மற்றும் முதலீட்டு பங்குதாரர்களையும் கண்புபிடிப்பதற்கான நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டது.
- ஆடை ஊக்குவிப்பு செயற்றிட்டம் தொடர்பில் 09 முன்னணி ஆடை ஏற்றுமதிக் கம்பனிகள் பங்குபற்றிய தூதக்குழு 2014 செப்டம்பர் 20 ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதி வரையான காலம் பிரேசிலுக்குச் சென்றது.

**2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாடுகளில் உள்ள வணிக அலுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட வர்த்த ஊக்குவிப்பு நடவடிக்கைகள்**

| **செயற்பாடுகள்** | | **அளவு** |
|---|---|---|
| குறிப்பாக ஒப்பந்த நாடுகளில் இலங்கையின் ஊக்குவிப்பு முன்னெடுப்புக்கள் | | 33 |
| இலங்கைக்கான வர்த்தக தூதுக்குழுக்கள் | தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | 35 |
| | தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | 387 |
| ஒப்பந்த நாடுகளுக்கான வர்த்தக தூதுக்குழுக்கள் | தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | 78 |
| | தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | 805 |
| இலங்கைக்கான தனிப்பட்ட விஜயங்கள் | | 237 |
| ஒப்பந்த நாடுகளுக்கான தனிப்பட்ட விஜயங்கள் | | 280 |
| ஒப்பந்த நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட கண்காட்சிகள் | கண்காட்சிகளின் எண்ணிக்கை | 61 |
| | கண்காட்சியாளரின் எண்ணிக்கை / பார்வையாளர்கள் | 737 |
| ஊக்குவிப்பு கண்காட்சி பங்குபற்றல்கள் | கண்காட்சிகளின் எண்ணிக்கை | 22 |
| ஒப்பந்த நாடுகளிலிருந்து இலங்கைக்கு | கண்காட்சியாளரின் எண்ணிக்கை / பார்வையாளர்கள் | 169 |
| விசாரணைகளின் எண்ணிக்கை (வர்த்தகம்/முதலீடு/சுற்றுலாத்துறை) | | 2,132 |
| வர்த்தகம் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 47 |

*மூலம்: இலங்கைச் சுங்கம் / வர்த்தக திணைக்களம்*

**2014 ஜனவரி - ஓகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் விநியோகிக்கப்பட்ட மூலச் சான்றிதழ்களின் முன்னேறம்.**

| **திட்டம் / ஒப்பந்தம்** | **மூலச் சான்றிதழ்களின் எண்ணிக்கை** |
|---|---|
| EU GSP | 83,898 |
| GSP – Vidait | 12,706 |
| GSP – CIS | 842 |
| ISFTA | 10,852 |
| PSFTA | 7,069 |
| APTA | 4,131 |
| SAFTA | 388 |
| SAPTA | 309 |
| GSTP | 107 |
| மொத்தம் | **120,302** |

*மூலம்: இலங்கைச் சுங்கம் / வர்த்தக திணைக்களம்*

**வெளிநாட்டு கொள்வானவாளர்களையும் மற்றும் முதலீட்டு பங்குதாரர்களையும் ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் வெளிநாடுகளில் உள்ள வணிக அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டது.**

- ஹப் தொழிற்பாடுகளின் கீழ் புளுீ மூலச்சான்றிதழ் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டள்ளது.
- இலங்கை சுங்கம் மற்றும் இலங்கை தூதுவராலயம் Non - Manipulation Certificates (NMC) வழங்கல் மற்றும் operational modalities வெளிப்படுத்தல் தொடர்பாக அலுவலக தூதுக்களை ஒருங்கிணைத்தது.
- SAARC மற்றும் ASEAN இன் Cross Regional Cumulation கீழ் பதப்படுத்தாத புகையிலையை இந்தோனேசியாவில் இருந்து இறக்குமதி செய்து அதனைப் பயன்படுத்தி இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சிகரெட்டுகளுக்கு EU- GSP COO சான்றிதழை வழங்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- இலங்கை ஏற்றுமதிச் சபையுடன் இணைந்து ழேசறயல GSP+ திட்டம் தொடர்பான கருத்தரங்கு மார்ச் மாத் கொழும்பில் நடாத்தப்பட்டது.

# கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

### தொலை நோக்கு

“இலங்கையில், வர்த்தகத் துறையை உள்ளடக்கியதான சிறந்த நிருவாகக் கலாசாரத்தை தோற்றுவிக்க முடியுமான வினைத்திறமையாக ஒழுங்குபடுத்திய பரிபாலனத்தை ஏற்படுத்துவதன் மூலம் நம்பிக்கையான வியாபார சூழலை வளர்த்தலும் கட்டியெழுப்பலும்”

### செயற்பணி

“இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் வர்த்தகக் கொள்கைகளுக்கிணங்க கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் நிருவகிக்கின்ற சட்டங்களின் கீழ் வியாபாரம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் சட்டரீதியான அமைப்பை வழங்குவதற்கும் அவற்றின் செயற்பாடுகளை இயக்குவதற்கும் உதவுதல்.”

### அறிமுகம்

1815 ஆம் ஆண்டு பிரித்தனிய காலனித்துவ ஆட்சிக்காலம் ஆரம்பித்தில் இருந்து, ஆங்கிலேயர்கள் கோப்பி, தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதிகளை அறிமுகப்படுத்தி இலங்கையின் பொருளாதாரத்தை விரிவுபடுத்தினர். 1861 ம் ஆண்டு கம்பனிகள் இணைந்த பங்குக் கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டது. 04.02.1815 வரை கம்பனிகள், 1938ம் ஆண்டு 51ம் இலக்க இணைந்த பங்கு வங்கிக் கட்டளைச் சட்டம் மற்றும் கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டது. கட்டளைச் சட்டத்தின்க கீழ், திணைக்களத் தலைவர் என்ற வகையில் கம்பனிகள் பதிவாளர் அதிபதி, வர்த்தகக் குறியீட்டுக் கட்டளைச்சட்டம், வியாபாரப் பெயர் கட்டளைச் சட்டம், சீட்டு கட்டளைச் சட்டம் மற்றும் சமூகக் கட்டளைச் சட்டம் போன்ற சட்டங்களையும் உருவாக்குவதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு 1979 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் புலமைச் சொத்துக்கள் அலுவலகம் நிறுவப்பட்டதுடன் 1981 ஆம் ஆண்டில் இருந்து வர்த்தகக் குறியீடுகளுக்கான கட்டளைச் சட்டத்தின் தத்துவங்களுக்கான தத்துவம் அளிக்கப்பட்டது சுதந்திரத்தின் பின்னர், இலங்கைப் பொருளாதாரம் உள்ளாட்டு அடையாளத்துடன் மேம்படுத்தப்பட்டதால், இதற்கான வசதிகள் 1982ம் ஆண்டு 17ம் இலக்க கம்பனிச் சட்டத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டது. இந்தச் சட்டம் 25 ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்டது மற்றும் பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்காக பெரியளவிலடான முதலீடுகளைக் கவர்வதற்காக 2007ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க புதிய கம்பனிகள் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், 2007 மே 03 ஆம் திகதியில் இருந்தி இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

### இலக்குகளும் செயற்பாடுகளும்

திணைக்களத்தின் பிரதான நோக்கம், கீழ்வரும் சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களினால் கட்டியெழுப்பப்பட்ட பிரதான நோக்கங்களை நடைமுறைப்படுத்தல், நிருவகித்தல் மற்றும் வலுவூட்டலுமாகும்.

- 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
- சங்கங்கள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 123
- 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டம்

**2014 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான முன்னேற்றங்கள்**

- ரூபா 60.8 மில்லியன் பெறுமதியான மென்பொருள் அபிவிருத்தி மற்றும் ஆவணங்களை ஸ்கான் செய்யும் கருத்திட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றது.
- முறையே ரூபா 13.7 மில்லயன் மற்றும் ரூபா 5.5 மில்லியன் பெறுமதியான மென்பொருள் தர நுண்ணாய்வு மற்றும் அலுவலகச் சூழல் மாற்றக் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது.
- 2014 ஆம் ஆண்டு மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கும் மற்றும் புதுப்பிப்பதற்கும் ரூபா 16.3 மில்லயளை திணைக்களம் ஒதுக்கியது. 2014 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 96.8மூ வீதத்திற்கு மேற்பட்ட நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

**2014 ஆம் ஆண்டு திணைக்களத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பதிவுகள்**

| செயற்பாடுகள் | இலக்கு 2014 | 2014 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான அடைவு | குறிப்பு |
|---|---|---|---|
| (1)புதிய கூட்டிணைப்புகள் | 7,000 | 6,845 | கம்பனிகள் சட்டம் பொது ஒப்பந்தகள் சட்டம் மற்றும் சங்கங்கள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் அமுலாக்கம் |
| (2)ஆவணப்பதிவுகளின் எண்ணிக்கை | 180,000 | 166,508 | |
| (3)சங்கப்பதிவுகளின் எண்ணிக்கை | 500 | 71 | |
| (4)செயலாளர்ப்பதிவுகளின் எண்ணிக்கை | 600 | 566 | |
| (5)பொது ஒப்பந்த உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | 4,000 | 10,384 | |
| மொத்தம் | 192,100 | 184,374 | |

*மூலம் : கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்*

**வரவு மற்றும் செலவுச் சுருக்கம்**

| வரவு மற்றும் செலவுச் சுருக்கம் | | | |
|---|---|---|---|
| திணைக்கள வருமானம் (ரூபா. மில்.) | 390 | 566 | 145% |
| செலவு (ரூபா. மில்.) | 178.5 | 102.52 | 57% |

# இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

**தேசிய புலமைச் சொத்து அலுவலகம்**

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் இலங்கையில் தேசிய புலமைச் சொத்து முறைமையை நிருவகிப்பதற்கான ஆணையை இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம் பெறுகின்றது. 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளின் கீழ் அதே ஆணையுடன் 1980 ஆண்டில் முதன்முதலாக உருவாக்கப்பட்டது.

**தொலை நோக்கு**

உயர்ந்தபட்ச விளைதிறனுடன் தரமான சேவையை வழங்கக்கூடிய அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட ஒரு முன்னோடி அரச முகவராதல்.

**செயற்பணி**

புலமைச் சொத்து முறைமையானது புத்தாக்க புனைவு, படைப்புத்திறன், முதலீடு, தொழில் முயற்சிகள் என்பவற்னை வளர்ப்பதற்கான உகந்த சூழலை வளர்க்கின்றது என்பதனை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு செயற்படு பங்களிப்பை வழங்கல்

**நோக்கங்கள்**

புலமைச் சொத்துச் சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் வலியுறுத்தப்பட்டதுபோல் புலமைச் சொத்துச் சட்டத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் புலமைச் சொத்து அலுவலகத்தை தாபித்தலுக்கான நோக்கங்களாக, தேசிய ஆக்கத்திறனை மேம்படுத்தல், வியாபாரத்திற்கு உதவுதலும் வினைத்திறனாக்கலும், முதலீடுகளை மேம்படுத்தல், நுகர்வோர் விருப்புகளை பாதுகாத்தல் மற்றும் தேசிய பொருளாதாரத்தை அறிவுமையப்பட்ட சர்வதேச போக்குடன் இணைத்தல் என்பனவாகும்.

**கடமைகள்**

- வியபாரச் சின்னங்கள், ஆக்கவுரிமைகள், கைத்தொழில் வடிவமைப்புகள், ஒருங்கிணைந்த சுற்றுக்களின் திட்ட வடிவமைப்புகள் மற்றும் கூட்டு சங்கங்களை பதிதல் மற்றும் நிருவகித்தல் உள்ளிட்ட புலமைச் சொத்தை நிருவகித்தல்
- புலமைச் சொத்து தகவல்களை சேகரித்தலும் பரப்புதலும்
- புலமைச் சொத்து தொடர்பான அறிவூட்டலை வளர்த்தல்
- பொருளாதார அபிவிருத்திச் செயன்முறையில் புலமைச் சொத்தினைப் பயன்படுத்த தூண்டுதல்
- புலமைச் சொத்து தொடர்பில் இலங்கை மீதுள்ள சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றுதல் மற்றும் புலமைச் சொத்து மீதான சர்வதேச மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை வலுவூட்டல்
- புலமைச் சொத்து கொள்கைகளை பிரேரித்தல்
- பதிப்புரிமை மற்றும் அது தொடர்பான துறைகளில் ஏற்படுகின்ற பிணக்குகளைத் தீர்த்தல் உள்ளிட்ட புலமைச் சொத்து உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுதல்
- புலமைச் சொத்து முகவர்களை பதிவுசெய்தலும் நிருவகித்தலும்

**இலங்கையில் புலமைச் சொத்து முறைமை**

இலங்கையின் புலமைச் சொத்து தொடர்பான சட்டம் தற்போது 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்து சட்டத்தின் மூலமே நிருவகிக்கப்படுகின்றது. இச்சட்டம்

ஆக்கவுரிமைகள், வியாபாரச் சின்னங்கள், கைத்தொழில் வடிவமைப்புகள், நியாயமற்ற போட்டிநிலை, ஒருங்கிணைந்த சுற்றுக்களின் திட்ட வடிவமைப்புகள், பதிப்புரிமை மற்றும் அவை தொடர்பான உரிமைகள் போன்ற விடயங்களை உள்ளடக்குகின்றது. இலங்கை பின்வரும் பிரதான சர்வதேச புலமைச் சொத்துப் பேரவைகளில் அங்கம் வகிக்கின்றது : கலை இலக்கிய துறைசார்ந்த வேலைகளைப் பாதுகாப்பதற்கான பேர்ன் பேரவை, கைத்தொழில சொத்தைப் பாதுகாப்பதற்கான பாரிஸ் பேரவை, ஆக்கவுரிமை ஒத்துழைப்பிற்கான உடன்படிக்கை, சர்வதேச பதிப்புரிமைப் பேரவை மற்றும் புலமைச் சொத்து உரிமைகள் தொடர்பான வர்த்தக உடன்படிக்கை

**2014 டிசெம்பர் 31 வரையிலான முன்னேற்றம் புலமைச் சொத்து நிருவாகம்**

புலமைச் சொத்து நிருவாகம், பதிப்புரிமை தொடர்பான நடவடிக்கைகள், வியாபரச் சின்னங்கள், ஆக்கவுரிமைகள், கைத்தொழில் வடிவமைப்புகள், புலமைச் சொத்து முகவர்கள் மற்றும் கூட்டு சங்கங்களை பதிவுசெய்தல் மற்றும் பதிவுகள் , ஒப்படைப்புப் பத்திரங்கள் மற்றும் அனுமதிபெற்ற ஒப்பந்தங்களை புதுப்பித்தல் போன்ற பதிவின் பின்னரான தொழிற்பாடுகளை உள்ளடக்கும். புலமைச் சொத்து நிருவாகம் தொடர்பில் பின்வரும் அடைவுகள் எட்டப்பட்டுள்ளன.

**வியாபாரச் சின்னங்கள்**

அலுவலகம், விண்ணப்பிக்கப்பட்ட குறிகளின் - வியாபாரக் குறிகள், சேவைக் குறிகள், கூட்டுக் குறிகள், சான்றிதழ் குறிகள் - தன்மை, உள்ளடக்கம் மற்றும் சட்டநிலை என்பவற்றை நன்கு பரிசீலனைக்குட்படுத்தி அவற்றின் தகுதிநிலை பார்த்து பதிவை வழங்குவதுடன், புதுப்பித்தல், ஆவணங்கள் ஒப்படைத்தல் மற்றும் அதிகாரம்பெற்ற ஒப்பந்தங்கள் உள்ளிட்ட பதிவின் பின்பான நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்தும். அத்துடன் சின்னங்கள் தொடர்பான தகவல்களை சேகரித்தல் மற்றும் பரப்புதலும் அதன் பணியாகும். பெற்றுக்கொண்ட விண்ணப்பங்கள் மற்றும் பூர்த்திசெய்யப்பட்ட நடவடிக்கை தொடர்பான விபரங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளது.

| | **செயற்பாடுகள்** | **2014 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டவை** |
|---|---|---|
| 01 | வியன்னா வகைப்படுத்தல் | 5,078 |
| 02 | பரீட்சித்துப்பார்த்தல் மற்றும் தேடுதல் அறிக்கைகள் | 21,931 |
| 03 | (ஏற்றல்/நிராகரித்தல் தொடர்பில்) விண்ணப்பதாரிகளுக்குக் கடிதம் அனுப்புதல் | 17,774 |
| 04 | கொடுப்பனவுகள் மேற்கொண்ட பின்னர் வர்த்தமானி தயாரிப்புக்காக சமர்ப்பித்தல் | 6,902 |
| 05 | வர்த்தமானி அறிவித்தல்களைத் தயாரித்தல் | 1,714 |
| 06 | பதிவுச்சான்றிதழ் வழங்குதல் | 1,140 |
| 07 | சான்றிதழ்களைப் புதுப்பித்தல் | 919 |
| 08 | ஒருபக்க விசாரணைகள் | 987 |
| 09 | எதிர் விசாரணைகள் | 65 |
| 10 | கைவிடப்பட்ட கோவைகள் | 1,391 |
| 11 | பொருத்தமான கடிதங்களை அனுப்புதல் | 12,306 |
| 12 | ஒப்படைகளைப் பதிவு செய்தல் மற்றும் முகவரி மாற்றல் மற்றும் வியாபாரச்சின்ன அறிவித்தலை திருத்துதல் | 1,729 |

*மூலம் : தேசிய புலமைச் சொத்து அலுவலகம்*

**கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள்**

| | **விண்ணப்பங்களின் தன்மை** | **விண்ணப்பங்களின் எண்ணிக்கை / கிடைக்கப்பெற்ற ஆவணங்கள்** |
|---|---|---|
| 01 | விண்ணப்பங்கள் | 8,552 |
| 02 | வர்த்தமானி அறிவித்தல்களுக்கான கெடுப்பனவுகள் | 8,212 |
| 03 | பதிவுக்கான கொடுப்பனவு | 1,577 |
| 04 | புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்கள் | 2,503 |
| 05 | ஒப்படைகள் மற்றும் முகவரி மாற்றல் | 838 |

*மூலம் : தேசிய புலமைச் சொத்து அலுவலகம்*

**புத்தாக்கங்களுக்கான ஆக்கவுரிமைகள்**

புலமைச் சொத்து அலுவலகம், ஆக்கவுரிமைக்கான வதிவாளர் மற்றும் வதிவாளரல்லாத விண்ணப்பங்களை நன்கு பரிசீலனை செய்து தகுதியான புத்தாக்கங்களுக்கு ஆக்கவுரிமைக் காப்புகளை வழங்குகின்றது. ஆக்கவுரிமை வழங்கப்பட்டதும், அலுவலகமானது, புதுப்பித்தல், ஆவண ஒப்படைப்புகள், உத்தரவுபெற்ற ஒப்பந்தங்கள் உள்ளிட்ட பதிவின் பின்னரான பல்வேறு நடவடிக்கைகளை நிருவகிக்கின்றது. மேலும் விஞ்ஞான மற்றும் வர்த்தக சமூகங்கள், ஆர் ரூ டீ நிறுவனங்கள், கைத்தொழில் நிறுவனங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்டோர் பயன்படுத்துவதற்காக ஆக்கவுரிமை மற்றும் தொழில்நுட்ப தகவல்களை (தேசிய, சர்வதேச) சேகரிப்பதும் பரப்புவதும் அதன் பொறுப்பாகும். குறித்த காலப்பகுதிக்குள் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் அக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு

| | **செயற்பாடுகள்** | **கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள்** | **2014 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டவை** |
|---|---|---|---|
| 01 | விண்ணப்பங்கள் | | |
| 02 | கிடைக்கப் பெற்றமைக்கான அறிவித்தல்கள் | | |
| 03 | ஆரம்பத் தேடல்கள் | - | 827 |
| 04 | திருத்தங்கள் | - | 22 |
| 05 | தேடுதல்கள் மற்றும் பரிசோதனை அறிக்கை | - | 93 |
| 06 | வர்த்தமானி அறிவித்தல்கள் | - | 41 |
| 07 | தொடர்புபட்ட ஆவணங்கள் தொடர்பான ஏனைய சடவடிக்கைகள் | 287 | 1,963 |
| 08 | பெறுமதியாக்கல் மற்றும் ஏனைய வேலைகள் | - | 888 |
| 09 | ஒப்படைகள் | 24 | 08 |
| 10 | ஒப்படைகள் மற்றும் முகவரி மாற்றல் | 31 | 18 |
| 11 | புதுப்பித்தல்கள் | 556 | 520 |
| 12 | ஆவணங்களின் பிரதிகள் | - | 23 |

**வியாபாரச் சின்னங்கள்**

அலுவலகம், விண்ணப்பிக்கப்பட்ட குறிகளின் - வியாபாரக் குறிகள், சேவைக் குறிகள், கூட்டுக் குறிகள், சான்றிதழ் குறிகள் - தன்மை, உள்ளடக்கம் மற்றும் சட்டநிலை என்பவற்றை நன்கு பரிசீலனைக்குட்படுத்தி அவற்றின் தகுதிநிலை பார்த்து பதிவை வழங்குவதுடன், புதுப்பித்தல், ஆவணங்கள் ஒப்படைத்தல் மற்றும்

